உ

பரமபதிதுணை.

பிரமமுனி

திருவாய்மலர்ந்தருளிய

கருக்கடைச்சூத்திரம் ௩௱௮௰.

486
181
667

சுத்தப் பதிப்பு.

இஃது

மதுரைப் புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம.

குருசாமிக்கோனார்

அவர்களாற்றமது

மதுரை, வடக்குமாசிவீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1915.

இதன் விலை அணா 8.

கடவுள் துணை.

பிரமமுனி

T.15743

திருவாய்மலர்ந்தருளிய

கருக்கடைச் சூத்திரம் ௩௱அய.

காப்பு.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

சீரரு ளான சோதி சின்மய மான சோதி
ஆரணி கொன்றை சூடி யாறணிந் தவனைப் போற்றி
வாரணி ரிஷிகள் பாதம் வணங்கியே வயித்ய நூலைக்
காரண மாகப் பாடக் கணபதி காப்புத் தானே.

தானான வயித்தியத்தி லிருபத்து நூறு
சாற்றினே னதைக்குறுக்கிப் பத்துநூறு
தேனான விதைக்குறுக்கி மூந்நூற்றறுபதாய்த்
திரட்டியே கருவெல்லாந் திறந்துசொன்னேன்
வானான கருவையெல்லாம் வெளியாச் சொன்னேன்
வாதமொடு செயநீரும் வகையாய்ச் சொன்னேன்
பானான மாநிடர்கள் பிழைக்க வேண்டிப்
பரிபாஷை யில்லாமல் பாடி னேனே. (1)

பாடியதோ ரென்னூலைப் பதினெண் பேரும்
பார்த்திட்டு மனமகிழ்ந்தார் சித்த ரெல்லாம்
பாடியதோர் வாதமொடு வயித்யம் நன்றாய்ப்
பாடினார் கருக்குருவும் வெளியாச் சொல்லி
தேடியே சித்தரெல்லா மெச்சிக் கொண்டு
செப்பினார் பிரமரிஷி ஆசை யாலே
நூடியதோர் கருவெல்லாம் வெளியதாக
உரைத்திட்டா ரென்றுசித்த ரோதிட்டாரே. (2)

ஒளித்திட்ட சாத்திரத்தை வாங்கியானும்
உலகிலுள்ளோர் மயங்காமல் வெயிற்போட்டேன்
அளித்திட்ட அழும்பருக்கு இந்நூலீயார்
ஆகாத சீஷருக்கு மிந்நூலீயார்
களித்திட்டு மனதிலே கசடில்லாமல்
கபடற்ற சீஷருக்குக் கைமுறையாக்காட்டு
பளித்திட்டுப் பேசாமல் சாத்திரத்தைப்பார்த்துப்
பதறாதே கைமுறைசெய் முறையும் பாரே. (3)

முறையோடே பார்த்தாக்கா லெல்லாஞ்சித்தி
முறைதப்பிச் செய்திடிலோ மோசம்மோசம்
முறையோடே செய்வதற்கு என்னூல்பாரு
மொழிந்திட்டேன் மருந்தொன்றில் பலநோய்தீர
முறையோடே லேகியங்கள் தயிலங்கற்கம்
மெழுகோடு களங்குமர்த் திரைசெந்தூரம்
நிறையான நவலோக பாஷாணங்கள்
நீற்றினமும் உருக்கினமும் நிறைத்திட்டேனே. (4)

நிறைந்திட்டார் தெட்சணா மூர்த்திபாடல்
நிகரில்லா வயித்தியத்தி லிரண்டுலட்சம்
உறைந்திட்டார் செந்தூர முந்நூறுசொன்னார்
உத்தமனே வாதமுதல் வயித்தியந்தோறும்
அறைந்திட்டார் வயித்தியத்தி லாறுநூறு
அப்பனே வெளிதிறந்து சொல்லிவிட்டார்
கறைந்திட்ட வயித்தியத்துக் கென்னூலாதி
கண்ணாடி முகம்பார்த்தாற் போலேகாணே. (5)

காணப்பா நோயாளி தாதுமார்க்கம்
கண்பார்த்து முகம்பார்த்துக் கையைப்பாரு
தோணப்பா தத்துவநூ லாய்ந்துபாரு
சொல்லுடம்பி லெழுபத்தீ ராயிரநரம்பு
வூணப்பா நரம்பெல்லாம் நாடியோடும்
உத்தமனே யுயிர்நில்லையை யூன்றிப்பாரு
தேனென்ற வால்மீகர் நாடிசூத்ரம்
தெளிவாக வெழுபத்தி ரண்டும்பாரே. (6)

பாரேநீ முந்நூல்தா னுயிரத்தில்
பாடினேன் பசலேக்கும் நாடிதோண
பாரேநீ கொங்கணர்தத் துவநூல்பாரு
பாங்கான சட்டைமுனி நூலும்பாரு
பாரேநீ திருமூலர் நூலும்பாரு
பார்த்திட்டால் பலநூலு மதிலேநோயும்
ஆரேநீ நானென்ற ஆணவத்தைநீக்கி
ஆங்காரக் கோபத்தை அடித்துத்தள்ளே. (7)

தள்ளுவது பொய்கொலேகட் களவுகாமம்
சண்டாளங் குருத்ரோகம் சேர்த்துத்தள்ளு
விள்ளாதே வெகுளிவிட்டு யோகம்பாரு
வேதாந்த சற்குருவை நித்தம்பூசி
தள்ளாதே வயித்தியந்தான் தர்மவித்தை
சார்வாக உவர்க்கருவை ஒளித்தார்சித்தர்
துள்ளாதே வாதமென்ன வயித்யமென்ன
சொல்லாத முப்பூவின் குருவிதாமே. (8)

குருவென்ன உவர்ச்சாரம் உவர்ப்பூவென்று
கூறினுர் பூநீறு முப்பூவென்றுங்
தருவென்ன ஆகாசப் பரிதியென்றும்
சந்திரனே டிந்துவென்றுஞ் சாற்றினுர்கள்
பருவமென்ன மார்கழியுந் தையுமாசி
பனிபெய்யுங் காலமப்பா பருவமாகிப்
பொருவென்ன பூமியிட நாதமாகிப்
பூப்போலே வளர்ந்ததும் பூநீருச்சே. (9)

பூவான பூநீறின் மகிமைதன்னைப்
புகழுடனே கண்டவர்க்கு எல்லாஞ்சித்தி
பூவான வாதத்துக் காதியாச்சு
புகலுகிறேன் வெள்ளேக்கல் பிரமகற்பம்
ஆவென்ன பாறையுப்பு மூன்றுஞ்சேரில்
அரகரா முப்பூவா மறிந்துபாரு
தேவென்ன சவுக்கார வழலேயென்று
செப்பினுர் கருமறைவாச் சித்தர்தானே. (10)

தானென்ற முப்பூவின் முறையைக்கேளு
சாற்றினர் கும்பமுனி பூரணத்தில்
வேனென்ற பூநீறு வெள்ளைக்கல்லுப்பும்
விளைவிடமுஞ் சுத்திமுறை விளம்பினார்பார்
கானென்ற பங்குனி மாதம்பார்த்தால்
காற்றில்லாக் கதிர்போலே வளர்ந்திருக்கும்
பானென்ற மண்படா தெடுத்துவந்து
படிநாலு அளந்தொரு பாண்டத்திட்டே. (11)

இட்டுமே கல்லுப்புப் படிதான்ரெண்டு
இதமான கற்சுண்ணம் படிதான்ரெண்டு
இட்டுமே அமுரிபடி யெட்டுவாரு
இயல்பான நல்லெண்ணெய் படியரையேவாரு
அட்டுமே கலக்கியதைத் தெளிவிறுத்து
அடுப்பேற்றி யெரித்துநீ யுப்பாக்காய்ச்சிப்
பட்டுமே யிப்படியே பத்துமுறைகாய்ச்சு
பாங்கான சவுக்காரக் குருவிதாமே. (12)

குருவான சவுக்கார வுண்டைசெய்யக்
கூறுகிறேன் எருமுட்டைச் சாம்பல்மேலே
மெருவான மெல்லிய சீலைபோட்டு
விட்டதின்மேல் சவுக்காரக் குழம்புதன்னைக்
கருவாக வுண்டைசெய்து எண்ணெய்கக்கக்
கைமுறையைச் சொல்லுகிறேன் ஒருபாண்டத்தில்
அருவாக நெல்லதனைப் பிசறிவைத்து
அதின்மேலே மல்லியிலை பரப்பிவையே. (13)

வைத்துத்தான் மேலுமந்த விலைபரப்பி
மறுபடிமேல் நெல்லிட்டுச் சட்டிமூடி
அத்துமே அடுப்பேற்றி யெரித்துநன்று
யாவிகண்ட பதத்திலே எடுத்துக்கொள்ளு
வைத்ததொரு சவுக்கார மெண்ணெய்வாங்க
மாட்டாமல் வாதிகெட்டார் வண்ணார்க்காச்சு
தைத்துமே யிப்படிக்கை முறையாய்ச்செய்யில்
சவுக்கார வழலையென்ற குருவிதாச்சே. (14)

குருவென்ன முப்பூவின் வழலையாச்சு
கூறிடுமேற் போக்கறிந்தால் வாதமாச்சு
திருவென்ன வீரமொடு பூரம்ரெண்டு
சேருநீ யோலென்ற கும்பிடுசிப்பி
பருவமென்ன பச்சையா யெடுத்தநூறு
பணம்போலே தமரிட்டுச் சிப்பிக்கெல்லாம்
அருவென்ன சிப்பியெல்லாம் போட்டுப்போட்டு
அகண்டதொரு சட்டியிலே பரப்பிவையே. (15)

வைக்கவே பலபலெனத் தண்ணீராகும்
வளமான தண்ணீரி'னுதவித்தை
வைக்கவே சமனுகச் சேர்த்துக்கொண்டு
அதிற்போடு குருவண்டு உரமுஞ்சூதம்
ஐக்கவே கருநாவி புனுகுபூரம்
அறுபுள்ளி வண்டின்முட்டை காரசாரம்
செய்க்கவே வகைவகைக்குப் பணவெடைதான்போட்டுத்
தெளிவிறுத்துச் சவுக்காரந் தன்னிலூட்டே. (16)

ஊட்டியே சவுக்காரங் கல்வத்திட்டு
உத்தமனே ஒருசாம மாட்டிமைபோல்
வாட்டியே வில்லைதட்டி ரவியிற்காய்ந்து
வளமாக அண்டோடு பொடித்துக்கீழ்மேல்
நாட்டியே ஒட்டிவிட்டுச் சவுக்காரம்வைத்து
நலமாக மேலோடு கொண்டுமூடி
தீட்டியே சீலைசெய்து புடத்தைப்போடு
சிறப்பாக வெடுத்ததனைக் கல்வத்திட்டே. (17)

தீட்டியே முந்நீரா லாட்டிவில்லை
செய்துலர்த்தி ஒட்டிவிட்டுப் புடத்தைப்போடு
மாட்டியே எழுசீலை மண்ணுஞ்செய்து
வளமான ரவியில்வைத்துக் காய்ந்தபின்பு
பூட்டியே யிப்படித்தான் ஐந்துதரமப்பா
புடமென்ன பத்தெருவில் போடுபோடு
ஆட்டியே கடுங்கார மெத்தக்கொள்ளு
அழகான முந்நீரு லரைத்திடாயே. (18)

அரைத்துமே வில்லைதட்டி ரவியிற்காய்ந்து
அஞ்சுசுன்னக் குகையிலிட்டு மேலேமூடி
நிரைத்துமே சுண்ணும்புச் சீலைசெய்து
நிச்சயமாய்ப் பத்தெருவில் புடத்தைப்போட்டு
கரைத்துமே அஞ்சுசுன்னக் குகையிற்குள்ளே
கடுங்காரச் சுன்னமதில் பூசிப்போடு
அரைத்துமே யிப்படியே வழலைகூட்டி
யைந்துமுறை புடம்போடச் சுன்னமாச்சே. (19)

சுன்னத்தால் பாஷாணம் அறுபத்துநாலும்
சொல்லரிய லவணவகை யிருபத்தைந்தும்
சுன்னத்தால் நவலோகம் நவரத்னங்கள்
சொல்லரிய உபரசங்கள் நூற்றிரண்டுபத்தும்
சுன்னத்தால் சொன்னதொரு சரக்குவகையெல்லாம்
தொடுமுன்னே கட்டினமும் உருக்கினமுமாகும்
மென்னுைத்த சரக்கெல்லாம் சுன்னமாகும்
மெழுகோடு செந்தூரம் களங்குமாமே. (20)

களங்கம்நவ லோகந்த ணித்தனியேநீறும்
கண்ணிமைக்கு முன்துருசு சுன்னமாகும்
களங்கமென்ன சூதமது மணிபோலாகுங்
கைக்குள்ளே வாதமது சிக்கிப்போகும்
பளிங்கிசையாய் முப்பூவின் சூட்சந்தன்னைப்
பாடினேன் சித்தரென்மேல் பகைத்திட்டார்கள்
பழங்கதைபோல் பேசினல் வருவதென்ன
பார்த்திட்டு மனம்வைத்தால் சித்தியாமே. (21)

ஆமப்பா மானிடர்க்கு அடுத்தரோகம்
அறைகிறேன் வாதபித்த சிலேற்பனமூன்று
நேமப்பா விதிலெடுத்த மேகங்களு
நிலையாத வாதத்தில் நாலதாச்சு
தாமப்பா பித்தத்தா லாறதாச்சு
சண்டாளச் சயத்திலே பதினென்றாச்சு
காமப்பால் வித்தையினு லெடுத்தரோகங்
கலந்துபா ரிருபத்து ஒன்றுமாச்சே. (22)

மேகராசாங்க லேகியம்.

ஆச்சென்ற மேகமிரு பதுந்தான்போக
அறைகிறேன் மேகரா சாங்கந்தன்னை
நீச்சென்ற விதுவல்லோ உலகுள்ளோர்க்கு
நிலையாது மற்றதெல்லாம் நிசமாகாது
காச்சென்ற மேகரா சாங்கந்தன்னைக்
கடிதான நோயெல்லா மோடிப்போகச்
சூட்சமென்ன சூட்சத்தில் சூட்சமாகச்
சொல்லுகிறேன் மருந்துவகை சொல்கிறேனே. (23)

சொல்லுகிறே னிலப்பனையு முத்தக்காசுஞ்
சுகமான சிவன்வேம்புந் தண்ணீர்மிட்டான்
நல்லதொரு விலாமிச்சம் வில்வவேரு
நன்னாரி குமரிவேர் அமுக்கராவேர்
ஒல்லிநிலை யாவாரை உள்ளுலர்த்தி
ஓரிலைத்தா மரைகரந்தை வெட்டிவேரும்
அல்லியொடு தாமரையின் வளையக்கோட்டி
ஆல்விழுது நீர்ப்பூலா அறுகம்வேரே. (24)

வேரான வல்லாரை சிவதைசங்கு
வெண்காக்கை வெரிவிகழி கீழ்க்காய்நெல்லி
பேரான நாவலத்தி கரிசாலைகாணி
பிரமிவெண்சா ரணையும்பூ வரசுதோடை
சீராக மூலிவகை கொண்டுவந்து
சிறப்பாக வெயில்வதக்க மில்லாமல்தான்
வாராக நிழலுலர்த்திச் சூரணஞ்செய்
வடிகட்டி வகைக்கிரண்டு பலந்தான்கூட்டே. (25)

கூட்டியே பறங்கிப்பட்டை பலந்தானெட்டு
கூர்பிரப்பங் கிழங்கதுவும் பலந்தான்ரெண்டு
ஆட்டியே ஆவின்பால் சுத்திசெய்து
அதட்டியே யிடித்துநன் றாய் முன்மருந்திற்சேரு
ஊட்டியே அமிர்தசர்க் கரையைக்கேளு
உத்தமனே பலம்ரெண்டு ஒக்கச்சேரு
தாட்டிகமாய் வித்துவகை சொல்லக்கேளு
தகரைவித்து முன்னைவித்து முருங்கைவித்தே. (26)

வித்தான அகத்திவித்து அத்திவித்து
வெண்கடம்பு நீர்முள்ளி ஆவாரைவித்து
மத்தான மாவித்து பூனைக்காலி
மருளுமத்தை சடைக்கஞ்சா தேற்றான்வித்து
நத்தான மைக்கொன்றை சரக்கொன்றைஅவுரி
நாயுருவி சிறுநெருஞ்சில் கருவேல்வித்து
முத்தான மாதுளையும் மகிழம்வித்து
முன்னையொடு கோதும்பை யெள்ளுமுந்தே. (27)

உழுந்தான நெல்லிசெம்பை மூங்கில்வித்து
உத்தமனே கூவிளத்தின் பழமும்பூவும்
குழுந்தான சூரிவித்து எரிகாலன்வித்து
கொமட்டிமா துளைநாரத் தெலுமிச்சம்வித்து
நெளிதான தென்னம்பூப் பாற்குறண்டிப்பூவும்
நெய்கோட்டான் பூவாத்தி அல்லிவித்து
தழுதாழை முருங்கைப்பூ விலுப்பைப்பூவுந்
தாமரைவித் துவரையில வம்பிஞ்சுஞ்சேரே. (28)

சேர்க்கவே பிசின்வகையைச் சொல்லக்கேளு
திறமான முள்ளிலவு முருங்கைவேம்பு
சார்க்கவே விளாவோடு கருவேலத்தி
கருவாகை கொன்றைமரம் பிசினோடொக்க
ஏர்க்கவே புங்கம்பூ சீயக்காயின்கொழுந்து
இதமான வகைக்குக்காற் பலமேதூக்கிச்
சேர்க்கவே யிடித்தெல்லா மொன்றாய்ச்சேரு
திறமான கடைச்சரக்கைச் செப்பக்கேளே. (29)

கேளப்பா சாதிக்காய் சாதிப்பத்ரி
கிராம்பேல மிலவங்கப் பட்டைப்பத்ரி
ஆளப்பா குங்குமப்பூ கோரோசனைகஸ்தூரி
அதிவிடையந் திப்பிலியுங் கோஷ்டமூலம்
வாளப்பா அரத்தைசுக்கு அக்கிராகாரம்
வால்மிளகு குரோசானி சீரககல்லோமம்
தேளப்பா சடாமாஞ்சி கூகைநீறும்
சிறுதேக்கு நாகப்பூ தாளிசபத்திரியே. (30)

கிரியான காமப்பூ மகரப்பூவும்
செங்கழுநீர் வாலுழுவை கருவாப்பட்டை
கிரியான கண்டதிப்லி கஸ்தூரிப்பட்டை
கிளிமூறல் செவ்வியம் கொத்துமல்லி
பரிவாசி தக்கோலந் தகரமிந்து
பாங்கான ரேணுகமும் சாம்பிராணி
கரிதான கடுகுரோ கணிகடுக்காய்தாணி
கசகசா மஞ்சிட்டி சாலரப்பருப்பே. (31)

பருப்பான திரிபலைச முத்திராப்பழமும்
பகரரிய வலம்புரிக்காய் கற்கடகசிங்கி
கருப்பான சீரகமு நற்சீரகமும்
கார்பேரகி சண்பகப்பூ நெல்லிமுள்ளி
விருப்பாஞ்செஞ் சந்தனம்அகில் தேவதாரம்
வெட்பாலை வெளிப்பிசினு முந்திரிகைக்கொட்டை
மருப்பான குளவிந்தங் கஸ்தூரிமஞ்சள்
வகைவகைக்கு ஒருபலந்தான் வரிசைகேளே. (32)

வரிசையாஞ் சரக்கையிள வறுப்புச்செய்து
வளமாக விடித்துநன்றாய்ச் சூரணஞ்செய்
கரிசையாய்ச் சீனிநெய் படிதானெட்டுக்
கமண்டலத்தி லாவின்பால் படிதான்ரண்டு
பரிசையாய் அடுப்பேற்றிக் கொதிக்கும்போது
பால்வார்த்துப் பதமாய்ச்சூ ரணத்தைக்கொட்டு
அரிசைஅடி பற்றாமல் கிண்டிவாகீ
அதில்போட்டு முந்திரிகை பேரீச்சம்பழமே. (33)

பழமான வகைக்கிரண்டு பலந்தான்போடு
பாங்கான கொம்புத்தேன் ரண்டுபடிவாரு
வளமாகக் கிண்டியே யிறக்கிவைத்து
வாகான கணபதிமுன் வைத்துப்பூசி
அளவான லக்ஷமுரு ஓதித்திரு
அப்பிரக செந்தூர மிரண்டுபலம்போடு
நழுவாதே வயித்தியர்க்கு மனநோகாதே
நாவிலொன்று வயித்தியர்க்குப் பாகமீயே. (34)

ஈந்தவர்க்கு மனங்குளிர வெகுமானம்செய்
    திதமான லேகியத்தைக் கொள்ளுங்கொள்ளு
தைந்துமே அந்திசந்தி மண்டலங்கொள்
    சார்வான மேகமிரு பதுதானெங்கே
பாய்ந்துவரும் வாதபித்த சிலேற்பனம்போம்
    பறந்தோடும் சயமீளை மந்தாரகாசம்
ஓர்ந்துமே பதினெட்டுக் குட்டரோகம்
    ஓடுமே கிரந்தியரை யாப்புச்சூலை. (35)

சூலையென்ற குன்மவகை யெட்டுந்தீரும்
    தொலையாத வாய்வெல்லாந் தூரவோடும்
ஓலையென்ற தேகத்திற் படரும்வெள்ளை
    ஓடுமே உதிரவெட்டை பீரமேகப்புண்
பாலையென்ற ஸ்ரீகளுக்குச் செற்பநோயேழும்
    பறந்தோடும் மலடிகட்கும் பிள்ளையுண்டாம்
சாலையென்ற வுள்ரணங்கள் காந்தல்தீரும்
    கண்களுமோ செவ்வலரிப் பூப்போலாமே. (36)

ஆமென்ற லேகியத்துக் கிச்சாபத்யம்
    அந்திசந்தி மாறாதே கொள்ளுபாரு
பாமென்ற தேகமென்ன பசும்பொன்னாகும்
    பரிவான மன்மதன்போல் வடிவுகொள்ளும்
தேமென்ற சுக்கிலமும் கெத்தமுமூறும்
    தேனனைய மொழியாருஞ் சோர்சொன்னேன்
வாமென்ற வயித்தியனே யிந்தமுறைவிட்டு
    மதிகெட்டு அலையாதே மகிழ்ந்துபாரே. (37)

முக்கூட்டுத் தயிலம்.

பார்க்கவே மேகரா சாங்கம்சொன்னேன்
    பாடுகிறேன் முக்கூட்டுத் தயிலந்தன்னை
யேற்கவே நல்லெண்ணெய் படிதானெட்டு
    இயல்பான ஆவினெய் படிதானாலு
காற்கவே விளக்கெண்ணெய் படிதானாலு
    கலந்தொன்றாய்ப் பாண்டத்தி லளந்துவிட்டு
ஆர்க்கவே ஆவின்பால் பாடிதானாலு
    அப்பனே செவ்விளநீர் படிதானாலே. (38)

படியான கரிசாலை பொன்னாங்காணி
பசலையொடு கற்றாழை பிரமிகஞ்சா
செடியான தழுதாழை சிறுகீரைநொச்சி
சிறுபூளை வல்லாரை முசுமுசுக்கை
நடியான ஆதண்டை கற்பூரவல்லி
நற்றாழை விழுதுமுடக் கொத்தான்சின்னி
கொடியான கொழுஞ்சிகடார் நாரத்தம்பழமும்
கொமட்டிமா துளையோடே எலுமிச்சம்பழமே. (39)

பழமான மல்லிகைசெவ் வந்திபிச்சி
பழம்பாசி வகைக்கிரண்டு படிதான்சாறு
தழும்பாதே தென்னம்பூ முருங்கையுடனிலுப்பைத்
தனிப்பூவும் புங்கம்பூ செங்கழுநீரவுரி
கிழங்கல்லி கருடகிழங் காம்பல்நெய்தல்
கிழங்கோடு கொட்டிமரு ளன்கிழங்கு
விளக்கவே கோவையிட கிழங்குஞ்சேர்த்து
வெருகோடு நெல்லிக்காய்ப் பட்டையாமே. (40)

பட்டையொடு அருநெல்லி பூவந்திப்பழமும்
பரிவாக வகைக்கிரண்டு படிதான்சாறு
கொட்டமிடுங் குருதோட்டி பாதிரிநன்னாரி
குருந்தைவேர் பொன்முசுட்டை குமிழ்சீர்ப்பூலா
துட்டச்சிற் றாமுட்டி பேராமுட்டி
தூதுவளை குமரிசிறு காஞ்சோரிதோடை
சட்டமுடன் நிலப்பனையும் தண்ணீர்மிட்டான்
சங்கோடு சாரணைவேர் சிவனார்வேம்பே. (41)

வேரான தழுதாழை நொச்சிவீழி
வெள்ளெருக்கு காக்கிட்டான் கீழ்க்காய்நெல்லி
கூறான மருதோன்றி நாகவல்லி
குமிழோடு புரசுமுன்னை கோவைத்தண்டு
பேரான புனல்முருங்கை முக்காவேளை
புங்கோடு நாவலத்தி புனலிசிந்தி
கூறான கடலிருஞ்சி வெட்டிவிலாமிச்சு
குருவிஞ்சு அழிஞ்சிபூ வரசம்பட்டை. (42)

பட்டையாங் கிலுகிலுப்பை உள்ளுலர்த்திப்
பங்கீரி னிலம்பூறல் கிளுவைச்சுண்டி
வெட்டியே வகைக்குநாற் பலமேதூக்கு
விதமாக இடித்ததனைப் பாண்டத்திட்டு
விட்டுமே பதினறு மரக்கால்நீர்தான்
விட்டதனை யெட்டொன்று யெரித்துக்காய்ச்சி
இட்டதொரு கிஷாயத்தை யெண்ணெயிலேவாரு
இயம்புகிறேன் கற்கவகை யினிதாய்க்கேளே. (43)

இனிதான சாதிக்காய் கிராம்புபத்ரி
யேலமொடு இலவங்கம் அதிமதுரங்கோஷ்டம்
குனிதான பெருங்காயம் அரத்தைசுக்கு
குரோசானி வால்மிளகு கொத்துமல்லி
வனிதகருஞ் சீரகம்கஸ் தூரிமஞ்சள்
வாலுழுவை சிறுநாகப் பூவோடிந்து
வனிதமாஞ் சதகுப்பை சிவாசிப்பட்டை
வற்றங்கி அகிலோடு தேவதாரம். (44)

தாரமாங் கார்போகி கடுக்காய்தான்றி
தாளிசபத் திரிஓமம் குளவிந்தம்மஞ்சள்
ஆரமாம் கண்டதிப்லி அக்கிராகாரம்
அதிமதுரம் கிளியூறல் கருவாய்ப்பட்டை
சோரநற் சீரகம் கூகைநீரும்
குங்குமப்பூ வலம்புரிக்காய் விளங்கம்மாஞ்சி
சாரமாந் திப்பிலியும் திப்லிமூலம்
சந்தனமும் நெல்லிமுள்ளி சிறுதேக்காமே. (45)

தேக்கான சண்பகப்பூ கடுகுரோகணியும்
திரிபலையும் சமுத்திராப் பழமுங்கல்நார்
தேக்கான கச்சோல மாதுளங்காய்ப்பிஞ்சு
சென்னகரைப் பட்டையொடு நெரிஞ்சிக்காயும்
வாக்கான பெருங்குரும்பை சித்ரமூலம்
வகைவகைக்கு ஒருபலந்தான் வரிசையாகத்
தாக்கான புங்கம்வேர் பாலாலாட்டித்
தவறும லெண்ணெயிலே கரைத்திடாயே. (46)

கரைத்துமே அடுப்பேற்றிக் கணேசன்பூசை
 கைமுறையாய்ச் செய்திட்டு எடுத்துவாநீ
நிரைத்துமே ஒருவிறகால் நெருப்பைமூட்டி
 நிலையான பதமாகக் கிண்டிக்கிண்டி
முரைத்துமே யெண்ணெயுடன் பதத்தைப்பார்த்து
 முருங்கைப்பூ ஒருபிடிதான் போட்டுக்கிண்டி
கரைத்துமே மயிர்க்கொழுந்து பிடிதான்போடு
 கருகாமல் பச்சைநிறங் கண்டுகொள்ளே. (47)

கொள்ளவே இளகுபத மிதுதானென்று
 குறிப்பான வடிகலசந் தன்னிற்கேளு
வெள்ளவே புனுகுகோ ரோசனைகஸ்தூரி
 விதமாக ஒருவகைக்கு நாற்களஞ்சுதூக்கு
வள்ளலே வடிகலசந் தன்னிற்போட்டு
 வளமாக எண்ணெய்தனை வடித்துவாங்கு
கள்ளமா யடியிலே கசடில்லாமல்
 கம்பிளியி விட்டுநீ பிழிந்திடாயே. (48)

பிழிந்துநீ வேடுகட்டிப் பூசைபண்ணிப்
 புதைத்துமே நிலக்குழியி லிட்டெடுத்து
நளினமாய் நாலுநாள் வட்டமூழ்த்து
 நாலாயி ரத்துநா னூற்றுநாற்பத்தெட்டு
அழுந்துநோய் நாள்வட்ட முழுகும்போது
 ஆகாத நோயெல்லா மகன்றுபோகும்
குளிர்தண்ணீர் தள்ளியிள வெந்நீர்மூழ்கு
 குணமான பசும்பயறு சீக்காய்தேயே. (49)

தேயாத புளியோடு புகையிலைதள்
 திறமாக மண்டலந்தான் முழுகும்போது
பாயாத திரேகமது கஸ்தூரிவீசும்
 பார்ப்பதற்குப் பசுந்தங்கம் போலேயாகும்
சேயேநீ வாயுவகை பதார்த்தந்தள்ளு
 சிறப்பான மோர்தயிரும் புளியுந்தள்ளு
வாயேநீ வெயில்தனிலே நடையுமாகா
 வழுத்துகிறேன் மற்றுநாள் எல்லாமாமே. (50)

மேகராஜாங்க எண்ணெய்.

ஆமென்ற மேகரா சாங்களண்ணெய்
அறையுகிறேன் சர்வாங்க நோயுந்தீர
ஏமென்ற சிற்றாமணக் கெண்ணெய்ப்படி நாலு
இதமான ஈருள்ளிச் சாறுபடிரெண்டு
பேமென்ற கழுதைலத்திச் சாறுபடிரெண்டு
பேய்க்குமட்டி கரிசாலைச் சாறுபடிரெண்டு
பேமென்ற பொறியாரை வல்லாரைகுருக்கு
பிரமியொடு பொடுதலையும் அவுரிச்சாறு. (51)

சாறான செருப்படியின் ரெண்டுவகைகூட்டு
சடைச்சியொடு இனபூரல் காட்டுச்சேம்பு
கூறான கனக்கொடிக்கோ ழியாவாரைகூடக்
குளிமிட்டான் கட்டுள்ளி தேள்கொடுக்கு
ஆறான கவுதும்பை ஆதளைநீர்முள்ளி
ஐவேலி முருக்கிலைச்சா றெடுகோவைகுன்றி
வாறான வழுதலையும் வெள்ளறுகு கரந்தை
வகைக்கிரண்டு படிசாறு எண்ணெயிலேவாரே. (52)

வார்த்துமே வெட்டுவகை மருந்துகேளு
வாகையொடு மருதுகருங் குருந்துவன்னி
கார்த்துமே கருஞ்சூரை செங்கத்தாரி
கற்றாழை பூவரசு கருவேலின்று
கூற்றுமே குவளைபிரு யெரிகாலன்கொண்ணை
குருந்தொட்டி நன்னாரி குமிழிநீர்ப்பூலா
சாற்றுமே வாட்பூலா பரசுசங்கு
தழுதாளை கண்டங்கதரி தூதுவேளைநொச்சி. (53)

நொச்சிசிற் றாமுட்டி பேராமுட்டி
நேசக்கரிய ஏரழிஞ்சு கரந்தைபுங்கு
மச்சிலூ தக்கரப்பான் வேம்பாட்டம்பட்டை
மருதோணி நாகவல்லி மகிழம்பட்டை
இச்சியொடு முள்ளிலவு சங்கங்குப்பி
யெருக்கோடு மருக்காரை சின்னிபுன்னை
கச்சியே சருமுள்ளி செம்முள்ளிதுத்தி
காஞ்சோரி காட்டுமுள்ளி சிறுகுறிஞ்சான்வேரே. (54)

வேரான சிறுகுறட்டை மலைகலக்கிசிவனகை
வெண்காக்கை வேர்வீழி கீழ்க்காய்நெல்லி
பேரான சிவன்வேம்பு அமுக்கராவேர்
புனல்முருங்கை தைவேளை குப்பைமேனி
நேரான சனியுடைய சத்திச்சாரணையும்
நிலக்குமிழும் நிலவிளா நரிப்புடையின்பூரல்
வாரான பால்குறண்டி மூக்காவேளை
வட்டக்கி லுகிலுப்பை வட்டத்துத்தியெண்ணே. (55)

அத்திவட்டத் திருப்பியொடு நிலக்கடம்புதுடரி
சுடுதுரத்தி உள்ளுலத்தி பாதரிநற்கடம்பு
வெற்றியே மாத்தாளை மருட்கிழங்கு
வெருகோடு வெள்ளினறு மூக்காவேளை
சித்திமா விலிங்கோடு கிரந்திநாயகமும்
சிறுகிளா பொன்முசுட்டை சிறுகாஞ்சோரி
முற்றியே நிலப்பனையும் வில்வவேரும்
முளகரணை விடத்தைவேர் உசிலம்பட்டை. (56)

உசிலோடு கொடுவல்லி சீந்திற்றண்டு
உகாயோடு நிலவாகை கோவைத்தண்டு
கிசையான பாவட்டை நாரத்தையிலுப்பை
கிளுவையா மாஞ்செவியும் மூத்தெருக்கஞ்செவியும்
அசையாத மந்தாரை மைக்கொண்ணைகாசா
ஆற்றுநுணா ஆற்றரசு ஆயிலியப்பட்டை
நசியவே நாவலத்தி முதலைப்பூண்டு
நாய்க்கோட்டான் புனவிகளு மத்தைவேம்பே. (57)

வேம்பான பெருமருந்து ஆற்றலரிஅரசு
வெல்குவளை சன்னுசி முருங்கைமாதுளையும்
சோம்பாதே வகைவகைக்குப் பலந்தான்பத்துச்
சொல்லுவேன் புல்லுருவி வகையைக்கேளு
வேம்போடு அரகிலந்தை மாவிலுப்பை
வில்லையொடு விடத்தலைமா துளையாமெட்டுஞ்
சோம்பாதே புல்லுருவி வகைதானெட்டுச்
சொல்லியதோர் முன்மருந்திற் சொல்லக்கேளே. (58)

கேளப்பா இடித்ததனைப் பாண்டத்திட்டுக்
கெடியாக வெண்துணி சலந்தான்விட்டு
யேளப்பா எட்டொன்று யெரித்துக்காய்ச்சி
யிறுத்துமே கியாழத்தை யெண்ணெயிலேவாரு
ஆளுமே வெள்ளாட்டு நீர்படிதான்ரெண்டு
ஆவினீர் படிரெண்டு அதிலேவாரு
ஆளுநீ கலக்கியதை ரவியில்வைத்து
அதிற்போட மருந்துவகை அறைகிறேனே. (59)

அறைகிறேன் சாதிக்காய் கிராம்புஏலம்
அழகான இலவங்கம் அதிமதுரம்கோஷ்டம்
விரைகிறேன் கண்டத்திப் பிலியின்மூலம்
வெண்காரம் வால்மிளகு ரோசானியோமம்
கரையாத பெருங்காயம் கடுக்காய்தான்றி
கருஞ்சீரம் கார்போகி கஸ்தூரிமஞ்சள்
அறைகிறேன் அரத்தைசுக்கு அக்ராகாரம்
அதிவிடயம் கடுகுரோ கணிகடுகிந்துப்பே. (60)

உப்போடு சடாமாஞ்சி தாளிசபத்திரியும்
உத்தமனே கசகசா ஓமங்கஞ்சா
செப்பாதே வலம்புரிக்காய் பறங்கிப்பட்டை
சென்னகஉறைப் பட்டையொடு கஸ்தூரிப்பட்டை
தப்பாதே வாலுழுவை சிறுநாகப்பூ
தக்கோலஞ் சிறுதேக்குத் தகரங்கல்நார்
அப்பாலே ஆவினொடு வசம்புநீர்வெட்டி
அற்றத்த நேர்வாளம் சேங்கொட்டைகூட்டே. (61)

கூட்டியதோர் வசுவரசு ஆனைத்திப்லி
கொத்துமல்லி குங்குமப்பூச் சீரங்கச்சோல்
ஆட்டியே யெவாச்சாரம் சத்திச்சாரம்
அரேணுகமும் நவாச்சாரம் சாதரபேதி
கேட்டிநீ வகைவகைக்கு ஒருபலந்தான் தூக்கு
கெருடனிட கிழங்கோடு செங்கழுநீர்க்கிழங்கு
காட்டுமே கார்த்திகையின் அப்பைக்கிழங்கு
காட்டுக்க ருணையொடுநற் கருணைக்கிழங்கே. (62)

கிழங்கான நறனேயொடு தேவிக்கிழங்கு
கெடியான முருங்கைப்பூ வெருக்கம்பூவும்
தளங்காதே புங்கம்பூ வரசம்பூவும்
தாளியொடு முருங்கைப்பூ செம்முருக்கம்பூவும்
அளங்காதே செண்பகப்பூ சிற்றகத்திப்பூவும்
ஆவரையின் பஞ்சாங்கந் தேத்தான்கொட்டை
புழங்குமே கடைமருந்தோ டெல்லாமொக்கப்
புங்கம்பால் விட்டாட்டி யெண்ணெயிலேபோடே. (63)

போட்டுமே அடுப்பேற்று யெரிநேரப்பா
புகழான கணபதிக்குப் பூசைபண்ணு
நாட்டமே மெழுகுபதம் தன்னைப்பாரு
நலமான பதமறிந்து வடிக்கக்கேளு
ஆட்டுமே கஸ்தூரி வராகன்ரெண்டு
அழகுபச்சைக் கற்பூரம் வராகன்ரெண்டு
நாட்டுமே சுத்தித்த லிங்கம்நாலு
நல்லரச கற்பூரம் விராகனுலே. (64)

நாலான இவையெல்லாம் வடிகலத்திலிட்டு
நலமாக எண்ணெய்தனை வடித்திடாய்நீ
சேலோடு தயிலத்தைப் பதனம்பண்ணு
திறமான கடுகுதனை யெரித்திடாதே
பாலான பச்சையெண்ணெ யதிலேவிட்டுப்
பரிவாக உலரவைத்து மேலேபூசச்
சேலோடு சுரங்குஷ்ட மேல்ரோகமெல்லாம்
தீருமடா அப்பிட்டுக் குளித்துப்போடே. (65)

குளிக்கவே வடித்தெடுத்த எண்ணெய்தன்னைக்
குடிக்கவே நாளொன்றுக் கோர்சுரண்டிவீதம்
களிக்கவே மூன்றுநா ளந்திகொள்ளு
கடிதான பத்தியந்தான் காக்கவேணும்
உளிக்கவே ஏழுநாள் தலைநீர்வார்த்து
உப்பதனை யெட்டாநாள் வறுத்துக்கூட்டு
அளிக்கவே யிப்படிநீ கொள்ளும்போது
ஆகாத நோயெல்லா மகன்றுபோமே. (66)

போமென்ற மேகமொடு இரந்தி அரையாப்புப்
பொல்லாத பதினெட்டுக் குட்டரோகம்
வாமென்ற குன்மமெட்டும் வாராதோடும்
வாயுவொடு சூலமகோ தரமுந்திரும்
தாமென்ற வாதபித்தஞ் சோர்ந்துபோகும்
சயரோக மேகமெங்கே தானேஓடும்
தேமென்ற வண்டுகடி செய்யான்பூரான்
தீராத விஷகடியும் போகும்பாரே. (67)

போகுமே விஷகடிகள் பட்டதெல்லாம்
பிளவையொடு காமாலை பாண்டுசோகை
போகுமே மேகத்தின் அழலையப்பா
பொல்லாத பித்தத்தின் தணலும்போகும்
ஏகுமே கெற்பத்தி லேழுவகைநோயும்
என்மக்கா ளுதிரத்தின் திரட்சிபோகும்
போகுமே வயிற்றிலுள்ள மலக்கட்டெல்லாம்
புழுவான கிருமியொடு வாய்வுபோமே. (68)

வாயுவொடு மூலவகை பவுத்திரமுந்தீரும்
மகத்தான விப்புருதி கண்டமாலை
வாயுவொடு துடைவாழை பிளவைப்புற்று
மகத்தான கடிகரப்பான் மண்டைச்சூலை
வாயுவொடு விரைவாதம் அண்டவாதம்
வலிவாதம் மற்றுமுள்ள வாதமெல்லாம்
தேயுமே எண்ணெயுட பெயரைச்சொன்னால்
தேசத்தி லில்லாம லோடிப்போமே. (69)

பத்தியம்.

போமென்ற எண்ணெய்க்குப் பத்தியந்தான்கேளு
புகழான வெந்நீரும் சோறுமுண்ணு
வேமென்றே யேழுநாள் தலைநீர்வார்த்து
விதமான உப்பதனை வறுத்துக்கூட்டு
தேமென்ற இம்முறைதா னுருஞ்சொல்லார்
செப்பார்கள் வயித்தியரே திறந்துபாரும்
வாமென்ற பிணியாளி நோய்தீரவேண்டி
வயித்தியனை வணங்கியுப சாரம்பண்ணே. (70)

பண்ணினல் செய்மருந்து பலிக்கும்பாரு
பரிவான நோயெல்லாம் பறந்துபோகும்
வெண்ணியே யிவனென்ன வயித்தியந்தானென்று
வேசாரி ஊழியம்போற் செய்யச்சொன்னல்
மண்ணிலே வயித்தியர்க்கு மனமேநொந்தால்
மானிடர்க்கு நோய்தீரா மருந்தாகாது
தன்னிலே தானறிந்து வணங்கிச்செய்தால்
சண்டாளனானாலும் தீரும்நோயே. (71)

சேங்கொட்டை வல்லாதி லேகியம்.

நோய்தீரச் சேங்கொட்டை வல்லாதிசொல்வேன்
நுணுக்கமாய்ச் சேங்கொட்டை பலந்தான்பத்து
மோயமே சாணிப்பால் சுத்திசெய்து
மூக்குவெட்டி யின்னுமதில் முறையைக்கேளு
சாயவே கொடுவேலி பறங்கிப்பட்டை
சங்கோடு அமுக்கரா சிவனார்வேம்பு
ஓயவே மாவிலிங்கப் பட்டையோடு
உத்தமனே வகைக்குஒரு பலந்தானென்னே. (72)

என்னவே கருஞ்சீரம் கஸ்தூரிமஞ்சள்
இருதிப்லி கடுக்காய்வா லுழுவைகோஷ்டஞ்
சொன்னதொரு இவையெல்லா மிடித்தும்வேறே
சூரணமாய் வைத்திட்டுச் சொல்லக்கேளு
உன்னிமுன் சுத்திசெய்த சேங்கொட்டைதன்னை
உரலிலிட்டுக் கொப்பறையின் தேங்காய்ரெண்டு
என்னவே யெள்ளுமொரு படிதான்ரெண்டு
இடித்துமே அதின்பின்பு சூரணத்தைக்கொட்டே. (73)

கொட்டியே சேர்த்தொன்று யிடிக்கும்போது
குமுறவே பனைவெல்லம் அஞ்சுபலம்போடு
திட்டமாச கற்பூரம் விராகன் அஞ்சு
சேர்த்திடித்து வல்லாதி செய்துகொண்டு
நட்டவே வல்லாதி அந்திசந்தி
நாளொன்று வேருகடிதா னயந்துகொள்ளு
குட்டமாங் கிரந்தியொடு அரையாப்புச்சூலை
குன்மமொடு வயிற்றுவலி வாய்வுசூலை. (74)

சூலையொடு சூதகத்தின் வாய்வுதீரும்
    சொற்பெரிய மேகமெல்லாம் சொல்லாதோடும்
வாலையாந் திரேகமது சித்தியாகும்
    மண்டலந்தான் பததியமாய்க் கொண்டுவாரீ
காலையே பத்தியந்தான் சொல்லக்கேளு
    கைப்போடு புளிபுகையும் பெண்ணுந்தள்ளு
பாலோடு மற்றதெல்லா மிச்சாபத்யம்
    பாங்கான உப்பதனை வறுத்துக்கொள்ளே. (75)

சண்டமாருதக் குழம்பு.

கொள்ளவே வயித்தியத்துக் காதிபீடம்
    கூறுகிறேன் சண்டமா ருதக்குழம்பு
அள்ளுகிறேன் ரசமோடு சாதிலிங்கம்
    அரிதாரம் மனோசிலையும் ரசகற்பூரம்
வெல்லுகிறேன் கருநாவி வெண்காரங்கவுரி
    வெவ்வேறே வகைவகைக்கு விராகன்ரெண்டு
சொல்லுகிறேன் கரந்தைச்சா றும்பழச்சாறுதல்
    சுருக்கிட்டுச் சுத்திசெய்து கல்வத்திட்டே. (76)

இட்டுமே சுத்திசெய்த வாளமப்பா
    இந்திடைக்குப் பதினாறு விராகன்போடு
கட்டுமே வால்மிளகு குரோசானிஓமம்
    கண்டதிப் பிலிஅரத்தை கடுக்காய்தான்றி
கட்டுமே கிராம்போடு கடுகுசுக்கு
    கடுகுரோ கணிகாயம் கஸ்தூரிமஞ்சள்
அட்டுமே திப்பிலியும் திப்பிமூலம்
    ஆனைத்திப் பிலிஓமம் நாகப்பூவே. (77)

பூவோடு இந்துப்பு விளங்கங்கோஷ்டம்
    புகழான சாதிக்காய் வகைவகைக்கு
தேவோடு விராகனிடை நாலுகூட்டு
    செப்பரிய முன்மருந்தோ டொக்கச்சேரு
ஆவோடு மிளகரணை சிற்றரத்தை
    அதிமதுர மாசக்காய் சீனக்காரம்
சேவோடு திருகுகள்ளிப் பாலும்வாரு
    சிவதையொடு கொடிவேலிக் கியாழம்பாரே. (78)

அனுமானம்.

வார்த்துமே பன்னிரண்டு சாமமாட்டி
வழித்துமே யச்சிமிழி லடைத்துக்கொள்ளு
ஆர்த்துமே சுரத்துக்கு அரத்தைசுக்கு
அதிகமாய்ச் சொல்லியதோர் சுரத்துக்கெல்லாம்
கோத்துமே யினமறிந்து சரக்குக்கூட்டிக்
குடிநீரி விட்டிடவே சுரங்களேகு
ஆர்த்துமே குழம்பினிட வேகமென்ற
அப்பனே யனுபான மறிந்துகொள்ளே. (79)

கொள்ளவே பதின்மூன்று சன்னிதோஷம்
குலேயவே அரத்தைசுக்குக் கிராம்புதிப்லி
மெள்ளவே யிஞ்சிமா விலிங்கப்பட்டை
வேளேகாட் டாமணக்கு வெண்ணொச்சிவேர்
கொள்ளுவே அரைத்ததனைச் சுரசம்பண்ணிக்
குழம்பிடவே சன்னியொடு தோஷந்தீரும்
வள்ளவே யிருமலென்ற வகைகட்கெல்லாம்
மாட்டுநீ கடுக்காயின் கியாழந்தானே. (80)

தானுன வாதமென்ற எண்பதுக்கும்
தழுதாழை வெண்ணொச்சிச் சாற்றில்ஊட்டு
தோனுன சயமேழும் இருமல்போகத்
தூதுபத்ரி கண்டங்காலீ ஆடாதோடை
தேனுன சிற்றரத்தை சிறுகாஞ்சோரி
திப்பிலியுங் கடுக்காய்சேர்த் திடித்துவைத்துக்
கோனுன தூளதிலே ஒருசேரைப்போட்டுக்
குடிநீரால் கியாழமிட்டுக் குழம்புகூட்டே. (81)

கூட்டவே பித்தமொடு பாண்டுசோகை
கொடியதொரு காமாலே யிவைகட்கெல்லாம்
காட்டியே பழச்சாறும் வெள்ளாட்டுநீருங்
கரிசாலேச் சாருேடு மிளகுங்கூட்டி
மாட்டியே குழம்பிட்டுக் கொள்ளுகொள்ளு
மகோதரநீ ராமைபெரு வயிறுசோகை
காட்டியே விசையுள்ள மாந்தவீக்கம்
கணத்ததொரு பலநோயும் பீலியென்னே. (82)

பீலியாம் வகைக்கெல்லாம் சொல்லக்கேளு
பிலமான நீர்முள்ளிச் சாற்றிலப்பா
கோலியே நவாசாரங் கொஞ்சமிட்டுக்
குழம்பதனைக் கூட்டியே கொண்டுபாரு
போலியே குன்மமெட்டும் போகக்கேளு
பூவரசம் பட்டையொடு பேய்க்குமட்டிவேரும்
சேலவே சீரகமு மிளகோடேலம்
சேர்த்துநீ குடிநீரில் குழம்பையூட்டே. (83)

குழம்பான பித்தவகை சொல்லக்கேளு
கொத்துமல்லி சீரகமு முடக்கொத்தான்குடிநீர்
குழம்பிடவே பித்தமெல்லா மோடிப்போகும்
கொடிதான கிரந்தியரை யாப்புச்சூலை
களங்கமா மேகவகை கரப்பனெல்லாம்
காந்தைச்சா றதனிலிடக் காணாதோடும்
குழம்பான விரைவாத மண்டவாதம்
கூட்டியிரு வர்க்கம்பூச் சாறுகொடிச்சாறே. (84)

சாறென்ற வாயுவுக்கு வேளைசுக்கு
சாறுத்தா மணிநொச்சி விஷத்துக்கெல்லாம்
ஆறென்ற பதினெட்டுக்க ப்பானகுஷ்டம்
அமுக்கரா சிவன்வேம்பு பறங்கிப்பட்டை
கோறென்ற தூள்பண்ணி அமுரிவிட்டுக்
குழைத்ததனிற் குழம்பிடவே குஷ்டமெங்கே
ஆறென்ற மேகவகை யிருபதுக்கும்
அப்பனே உள்ளுலர்த்திப் பட்டைச்சாறே. (85)

சாறான கற்பநோய் கிருமிதீரச்
சாற்றுபா கற்சாறு பாலைச்சாற்றில்
காறான கரப்பனுக்குக் குமரிச்சாறு
கரிசாலைச் சாறுகரந் தைச்சாறுகும்
வேறான வெளிகடிக்கு முருங்கைப்பட்டை
வேளையிலை வெள்ளுள்ளிச் சாற்றில்ஊட்டு
ஆறான விரியனுக்கு அழிஞ்சுவாகை
அரவத்துக் காடுதொடா மூலிவேரே. (86)

மூலியே வாதமொடு இளம்பிள்ளை வாதம்
முனையாம்பச் சைவாதம் பாரிசத்தின்வாயு
நாலியே யிவைக்கெல்லாம் கருவாகைவேம்பு
நந்திகோ ரத்தயிலம் கோப்பிரண்டைச்சாறு
கோலியே யிலுப்பைமேற் புல்லுருவிச்சாறும்
கூட்டுகுழம் பிடவாதங் கொள்ளைபோகும்
நாலாயி ரத்துநா லூற்றுநாற்பத்தெட்டும்
நாடாது பிரமமுனி குழம்பென்றெண்ணே. (87)

ஐயெண்ணெய்த் தயிலம்.

எண்ணியே வாதமெல்லா மோடிப்போக
இயம்புகிறேன் ஐயெண்ணெய்த் தயிலங்கேளு
எண்ணவே யெள்ளெண்ணெய் ஏரண்டத்தெண்ணெய்
இலுப்பெண்ணெய் புங்கெண்ணெய் வேம்பெண்ணெயைந் [தும்
அண்ணியே வகைக்கிரண்டு படிதான்சொன்னோம்
அளந்துவிடு பாண்டத்தில் அப்பாற்கேளு
நண்ணவே தழுதாழை காட்டாமணக்கு
நாயுருவி தைவேளை குப்பைமேனி. (88)

மேனியா மாவிலங்கு வேம்புபுங்கு
வெண்ணொச்சி தூதுவளை கண்டங்காலி
கூனியே குருந்துகரு வாகைசங்கு
கொடுவேலி நிலக்கடம்பு சடைச்சிரெண்டு
போனியே அவுரியொடு மருக்காரையெருக்கு
புனல்முருங்கை யூர்முருங்கை வேளைசாரணையும்
மானியே மருதோன்றி காட்டுசீமல்லி
மத்தையுத்தா மணியோடு களக்கொட்டிதானே. (89)

கொட்டியே மிளகரணை திருகுகள்ளி
குமிழோடு அமுக்கரா பிரம்புகுன்றி
இட்டியே பேய்ப்பாலை அடம்புசின்னி
யிலுப்பைமேற் புல்லுருவி ஆயிலியப்பட்டை
வெட்டியே சொன்னதொரு மூலியெல்லாம்
வேரோடு தூரோடு சமூலங்கொண்டு
அட்டியே பண்ணாதே வெட்டிவந்து
அப்பனே வகைக்கிரண்டு பலந்தான்பத்தே. (90)

பத்தாக இவையெல்லா மிடித்துநன்றாய்ப்
பரும்பாண்டத் திட்டுநீ பாகங்கேளு
அத்தாகப் பதினாறு மரக்கால்தண்ணீர்
அளந்துவிட் டடுப்பேற்றி எரிக்கக்கேளு
எத்தாதே ஓர்விறகா லெரியைமூட்டு
எட்டொன்றாய் வைத்தமட்டு மெரித்துக்காய்ச்சி
அத்தான கியாழமது படிதான்பத்து
அளந்துவிட்டு எண்ணெயிலே அறையக்கேளே. (91)

அறையுகிறேன் திப்பிலியுந் திப்லிமூலம்
ஆனைத்திப் பிலிஓமம் அரத்தைசுக்கு
குறையாத தாளிசையுங் கண்டதிப்லி
குரோசாணி கருஞ்சீரங் கிராம்புசுக்குல்
திரையாத சதகுப்பை வசம்புகல்நார்
சிறுதேக்கு பெருங்காயம் வெள்ளுள்ளியிஞ்சி
உரையான வெளிப்பிசினும் நாகப்பூவும்
உத்தமனே சடாமாஞ்சி ஒக்கக்கேளே. (92)

கேளேநீ வகைவகைக்கு அரைப்பலமேசொன்னோம்
கெடியான வெள்ளாட்டு நீராலாட்டி
ஆளேநீ யெண்ணெயிலே கரைத்துவாரு
அப்பனே பீலியரைப் பலமேபோடு
கோளேநீ வாராதே அடுப்பிலேற்றிக்
குறிப்பாக இன்னுமொரு சூக்ஷங்கேளு
நாளேநீ யார்தானே சொல்வாரப்பா
நந்திகே சரிச்சாறு நாலுபடிவாரே. (93)

வாரேநீ யடுப்பேற்றி யெரித்துக்காய்ச்சி
வளமான மெழுகுபதந் தன்னைப்பார்த்துக்
காரேநீ வடிகலசந் தன்னிற்கேளு
கஸ்தூரி விராகன்ரெண்டு சாதிலிங்கம்ரெண்டு
போரேநீ ஆகாசத் தூள்களஞ்சுரெண்டு
போட்டுமே எண்ணெய்தனை வடித்துவாங்கு
வேரேநீ அண்டத்தின் தயிலத்தோடு
வெள்ளுள்ளி முசுறுமுட்டைத் தயிலந்தானே. (94)

தயிலமென்ன வகைக்குக்கால் படிதான்சொன்னோம்
சாற்றரிய மூன்தயிலந் தன்னில்வாரு
தயிலத்தை வேடுகட்டிப் பதனம்பண்ணு
சண்முகர்க்குங் கணபதிக்கும் பூசைபண்ணித்
தயிலமிந்த முறைப்படியே ஆர்தான்செய்வார்
சார்வான வாதிமகன் வைத்தியனேசெய்வான்
அயிலமாந் தயிலமிதன் பேருஞ்சொல்ல
ஆராலு முடியாது அறிந்துபாரே. (95)

அறிந்துபார் தயிலத்திற் காசெடைதானுண்டு
அப்பனே மேலெழுதும் பூசக்கேளு
செறிந்துவரும் சன்னியெங்கே தோஷமெங்கே
தீராத உட்குத்துப் புதவீச்செங்கே
அறிந்துவரும் வாதமெங்கே வாயுவெங்கே
அடிக்கடிதா னுவுலரும் சன்னியெங்கே
யெறிந்துவரும் பக்கவாதம் சரிசத்தின்வாதம்
இளம்பிள்ளை வாதமொடு அண்டவாதமென்னே. (96)

வாதமொடு காக்கைவலி முயல்வலிப்பு
வருணவலி குதிரைவலி குமாரகண்டவலியும்
ஓதமென்ற வாதபித்த முகவாதசன்னி
உத்தமனே பித்தநோய் தந்தசன்னி
பேதவே கிறுகிறுப்பு மண்டைக்குத்தும்
பிடரிவலி பீனிசமும் பொல்லாநோயும்
பாதவே சொன்னதொரு நோய்களெல்லாம்
பறக்குமே தயிலத்தின் பேரைச்சொல்ல. (97)

சொல்லவே கைப்போடு புகைப்புந்தள்ளு
சொல்லரிய நோயறிந்து பத்யங்கேளு
சொல்லவே வுப்பதனை வறுத்துக்கூட்டு
சுகமான வழுதலங்காய் முருங்கைப்பிஞ்சு
வெல்லவே தூதுளங்காய் வற்றலாகும்
வெள்ளாட்டு வற்றலொடு பசும்பயறுமாகும்
பல்லவே பத்தியந்தான் கண்டுதேறு
பாங்காக இன்னுமொன்று பாடினேனே. (98)

பாடுகிறேன் வில்வாதிக் குழம்புதன்னைப்
பகரிய நோயெல்லாம் பறந்துபோகும்
ஆடியதோர் வில்வவேர் பலமுமைந்து
அதினுடைய பழந்தானு மிரண்டுபத்து
பாடியே யிடித்துமொரு பாண்டத்திட்டுப்
பதக்குநீ ரளந்துவிட்டு அடுப்பிலேற்றி
வாடியே இறுத்ததனை மூன்றுபடியாக்கி
வற்றியபின் னிறுத்ததிலே சருக்கரையைப்போடே. (99)

போடுவது நல்லவெல்லம் சர்க்கரை தானமைந்தா
போட்டதனைப் பாகுவரும் பதத்திற்கேளு
தேடுவது திப்பிலியுந் திப்பிமூலந்
செவ்வியமு மிளாகிஞ்சி சித்ரமூலம்
தேடுவது சீரகமும் ஏலமிலவங்கம்
சிறுநாகப் பூவோடு தாளீசபத்திரியும்
ஆடுவது அதிமதுரம் கூ...ந்து
மழகான வாலுழுவை மாஞ்சிதானே. (100)

தானென்ற அதிவிடைய மதுரமித்துப்பு
தான்கண்டு கொள்ளுமிரண்டு பலந்தான்சொன்னோம்
தானென்ற குங்குமப்பூ கிராம்புபதரி
சாதிக்காய் வகைவகைக்கு விராகன்ரெண்டு
போனென்ற இவையெல்லாம் இளவறுப்பாய்ச்செய்து
பொடித்ததைக் கியாழத்திற் போட்டுக்கிண்டி
ஏனென்ற கஸ்தூரி விராகன்போடு
இறக்கிவைத்து நாளொன்றுக் கிருநேரங்கொள்ளே. (101)

கொள்ளுவது நேரம்ஒரு புன்னைக்காயளவு
குன்மமொடு சத்திவிக்கல் நெஞ்சுவலிதிரும்
கொள்ளவே அரோசிகமும் மூக்குநீர்ப்பாய்ச்சல்
குலையரிவு காமாலை கிராணிமூலம்
வள்ளலே ...ளைப்போடு இருமல்ஈளை
வயிறுவலி பழக்கடுச்சல் கிருமிமூலம்
தெள்ளியதோர் நோயெல்லா மோடிப்போகும்
தேகமது மண்டலத்தில் தீர்க்கமாமே. (102)

வல்லாதி யெண்ணெய்.

ஆமென்ற சுற்றவல் லாதியெண்ணெய்
அறைவேன்கிற் றுமுட்டிச் சமூலங்கொண்டு
பாமென்ற முப்பத்தி ரண்டுபலமிடித்துப்
பாண்டத்தி லிட்டுஇரு தூணிசலம்வாரு
ஏமென்ற குறுணிசல மாகக்காய்ச்சி
யிறுத்ததனில் ஆயமெண்ணெய் குறுணிவாரு
தாமென்ற சந்தனமும் மதுரங்கோஷ்டம்
சாதிக்காய் கிராம்பேலம் பட்டைபத்ரி. (103)

பட்டையாம் அரத்தைசுக்கு அக்ராகாரம்
பாங்கான தாளிசபத் திரியுமாஞ்சி
திட்டமாய்ப் பெருங்காயம் கடுகுரோகணியும்
திப்பிலியும் வாய்விளங்கம் கூகைநீறு
கோஷ்டமாம் வால்மிளகு குரோசாணிஓமம்
குங்குமப்பூ கருஞ்சீர கம்கடுக்காய்தான்றி
திட்டமாஞ் செண்பகப்பூ கொத்துமல்லி
செவ்வியம்வா லுழுவைசிறு நாகப்பூவே. (104)

பூவோடு இவையெல்லாம் வகைவகைக்குப்
பொடிசெய்து நீபோட்டு நாற்கழஞ்சுவீதம்
பாவோடு பழச்சாறு படிதான்வாரு
பசுவின்பால் படிவார்த்து அடுப்பிலேற்று
சேலோடு கணபதிக்குப் பூசைபண்ணு
சிறப்பாக எரித்ததனை மெழுகுபதம்பார்த்துப்
பூவோடு வடிகலசந் தன்னிற்கேளு
புழுகுகோ ரோசனைகஸ் தூரிபோடே. (105)

போட்டிடுவாய் வகைவகைக்குக் கழஞ்சுவீதம்
போட்டுநீ யெண்ணெய்தனைப் பதனம்பண்ணு
நாட்டுவா யுள்ளோகா செடைதான்கொள்ளு
நாசியிலுந் துளிகுத்து மேலும்பூசு
தீட்டுவாய் முகவாதம் மண்டைச்சூலை
தீர்ந்துபோம் பித்தமொடு நீலகாசம்
ஓட்டுமே பீனிசமும் வாய்வுசூலை
யுடம்பிலுள்ள நோயெல்லா மோடுந்தானே (106)

ஓடுமே சிரசினுள்ள நோய்களெல்லாம்
உத்தமனே சீயக்காய் பசும்பயறுமிளகு
பாடுமே பத்தியந்தான் கைப்புபுளிப்பாகா
பாங்கான மறுபத்ய மெல்லாங்கூட்டு
ஓடுமே ஒருத்தலைநோய் மண்டைச்சூலை
உத்தமனே நாசிபீடம் கன்னசூலை
நாடுமோ நமன்வாத முகவாதம்சன்னி
நலமான பத்தியந்தான் நன்றாய்ப்பாரே. (107)

மகாமேககிருதம்.

பாரப்பா சர்வாங்க நோய்கட்கெல்லாம்
பாடுகிறேன் மகாமேகக் கிருதந்தானும்
காரப்பா பேய்க்குமட்டி வேர்பலந்தான்பத்து
கடுக்காய்வேர் நெல்லிவேர் தாண்றிவேரும்
வேரப்பா சிற்றாமல்லி பேராமல்லி
வில்வவேர் வெட்டிவேர் விலாமிச்சம்வேரும்
போரப்பா தூதுளையும் மாதுளைகாஞ்சோரி
பொன்முசுட்டை நன்னாரி நெய்தலென்னே. (108)

நெய்தலொடு செங்கழுநீர் தாமரையுமல்லி
நிலப்பனையும் நிலவாகை கண்டங்கத்ரி
பெய்யிவைகள் வகைக்காறு பலந்தான்போடு
பேய்த்துமட்டி வேரோடு போட்டிடித்து
எய்துமே பாண்டத்தி லிட்டுக்கேளு
இருதூணி சலம்விட்டு எட்டொன்றாக்கி
அய்துமே கியாழமது படிதானாலு
அளந்துவிடு ஆவினெய் படிதானாலே. (109)

நாலோடு சாதிக்காய் கிராம்புபத்ரி
நற்சீர கம்ஏல மிலவங்கப்பட்டை
சாலோடு மண்சிட்டி சாத்ரபேதி
சதகுப்பை வாய்விளங்கம் தாளிசபத்திரியும்
சேலான தேவதாரம் நல்லசந்தனமும்
சிறுநாகப் பூவோடு மதுரம்கோஷ்டம்
காலோடு மிளகுழுவை சிங்கிதேக்கு
கருஞ்சீரங் கஸ்தூரி மஞ்சளாமே. (110)

T. 15743

மஞ்சளாந் திப்பிலியுந் திப்லிமூலம்
மாஞ்சியொடு கடுகுரோ சுணிநெரிஞ்சிக்காயும்
கொஞ்சியே கொத்துமல்லி கோரைக்கிழங்கு
குரோசானி வால்மிளகு கடுக்காய்நெல்லி
மிஞ்சாதே குங்குமப்பூ மாதுளையின்பிஞ்சும்
விளங்கவே வகைக்குநாற் கழஞ்சுகூட்டு
அஞ்சாதே ஆவின்பால் நாலுபடிசொன்னேம்
அரைத்துமே கரைத்துமுன் னெய்யில்வாரே. (111)

வாரேநீ செவ்விளநீர் படிதான்ரெண்டு
வல்லாரைச் சாறுபடி ரெண்டுவாரு
சேரேநீ படிச்சாறு படிதான்ரெண்டு
சீனிசர்க் கரையதுவும் பலந்தானாலு
காரேநீ நல்லவெல்லம் பலந்தானாலு
கரைத்துமே அடுப்பேற்றி யெரித்துக்காய்ச்சி
வாரேநீ மெழுகுபதந் தன்னைப்பார்த்து
வடித்திடவே வடிகலசந் தன்னிற்கேளே. (112)

தன்னிலே சீரகங்கோ ரோசனையுங்கூட்டு
சார்வாக வடித்துப்பின் சாற்றக்கேளு
நிண்ணயமாய்க் கணபதியுங் கந்தன்பூசை
நிறைவாகச் செய்திடவே நெற்புடத்தில்
முன்னுதாய் முப்பதுநாள் வைத்தெடுத்து
முறையோடே முக்கழஞ்சு நெய்தான்கொள்ளு
சொன்னதொரு நாளென்றுக் கிருநேரங்கொள்ளு
தொலையாத வியாதியெல்லாம் தொலைந்துபோமே. (113)

தொலைந்தோடும் சயமீளை காசபித்தம்
சொல்லரிய தலைநடுக்கல் சொல்மாருட்டம்
மூலைந்தோடும் உஷ்ணமொடு பிரமிமேகம்
மூத்திரக் கிரிச்சியொடு கல்லடைப்பு
அலைந்தோடும் பெரும்பாடு ரத்தச்சாய்ப்பு
அனலோடு மேலெரிவு உஷ்ணங்காந்தி
மலைந்துபோம் முசல்வலிப்பு இருமலீளை
வாயுவொடு நீர்ச்சுருக்கு வெட்டைபோமே. (114)

போமென்ற பவளபற்பம் போட்டுக்கொள்ளு
 பொல்லாத நோயெல்லாம் பொடியாய்ப்போகும்
தேமென்ற கெர்ப்பத்தி லெழுந்தநோயுந்
 தீர்ந்துவிடும் மலடிக்குப் பிள்ளையுண்டாம்
காமென்ற பத்தியந்தான் சாந்தமாய்க்கொள்
 கைப்போடு புளிப்புரெண்டுந் தள்ளிப்பாரு
காமென்ற கண்வேக மெல்லாந்தீரும்
 கைகண்ட வித்தையிது கண்டுபாரே. (115)

எழுவகைப் பீனிசத்துக்கு.

பாரப்பா எழுவகைப்பீ னிசமும்போகப்
 பாடுகிறேன் வெகுசுருக்கோ ரெண்ணெய்கேளு
காரப்பா நல்லெண்ணெய் படிதான்ரெண்டு
 கரிசாலை அவுரிகஞ்சா பொன்னாங்காணி
ஊரப்பா வெற்றிலைச்சாறு முசுமுசுக்கை
 உள்ளுலர்த்தி முக்குறட்டை அத்திப்பட்டை
ஆரப்பா வகைவகைக்கு ஒருபடிதான்சாறு
 ஆதண்டைச் சாறுபடி ரெண்டுவாரே. (116)

வாரேநீ பழச்சாறு ஆவின்பாலும்
 வாரேநீ படியொன்று துளசிச்சாறொன்று
காரேநீ கருஞ்சீரம் கடுகுரோகணியும்
 கஸ்தூரி மஞ்சளொடு கடுக்காய்தான்றி
கூரேநீ அதிவிடையம் அரத்தைசுக்கு
 கோஷ்டமுடன் சதகுப்பை குரோசானிஓமம்
சேரேநீ நாகப்பூ தாளிசபத்திரியும்
 திப்பிலியின் மூலமொடு சித்ரமூலம் (117)

மூலமாம் பெருங்காயம் நெல்விமுள்ளி
 முளகரணை அளிஞ்சிநொச்சி கீழாநெல்லி
பாலமாம் வகைக்குஒரு களஞ்சுவீதம்
 பழச்சாற்று லாட்டியே எண்ணெயிலேபோடு
ஆலமாம் அடுப்பேற்றி எரித்துக்காய்ச்சி
 அப்பனே மெழுகுபத மறிந்துநீயும்
ஏலவே முருங்கைப்பூ ஒருபிடிதான்போடு
 இதமாக வடித்திட்டுப் பூசைபண்ணே. (118)

பண்ணுவது கணேசனொடு கந்தன்பூசை
பண்ணியே நாலுநாள் வட்டமூழ்கு
எண்ணுவது சீயக்காய் பசும்பயறுதேய்த்து
இளவெந்நீர் முழுகும்நாள் புளியாகாது
மண்ணுவது மறுநாள்தான் கூட்டிக்கொள்ளு
மைந்தனே இப்படிநீ முழுகும்போது
ஒண்ணுவது சிரசிலுள்ள நோய்களெல்லாம்
ஓடிவிடும் எழுவகைப்பீ னிசமும்போமே. (119)

போமேதான் தைலங்கள் முழுகும்போது
புளியோடு புகையிலையும் பெண்ணுமாகா
ஆமேநீ புளியோடு கைப்புமாகா
அப்பனே மற்றுநா ளெல்லாங்கூட்டு
ஏகுமே கைமுறைசெய் முறையும்பார்த்து
இதமாகச் செய்திடிலோ வியாதிதீரும்
ஆகாதவழியிடும்பு செய்வானாகில்
அவனுக்கோர் மருந்தொன்றும் ஆகாபாரே. (120)

ஆக்கிராணம்.

பாரேநீ சிரசிலுள்ள நோய்கள்போகப்
பாடுகிறேன் ஆக்கிராணம் முப்பத்திரண்டும்
ஆரேநீ சுண்டைவேர் சமுத்திராப்பழமும்
அரத்தைசுக்கு அக்ராகா ரம்விடையம்ஓமம்
கூரேநீ திப்பிலியும் திப்லிமூலம்
குரோசானி வால்மிளகு சித்ரமூலம்
காரேநீ கருஞ்சீரகங் கஸ்தூரிமஞ்சள்
கடுகுரோ கணிகாயங் கண்டதிப்பிலியே. (121)

திப்பிலியுஞ் சாம்பிராணி பேரரத்தை
திரமான அழிஞ்சிவேர் வேப்பரிசிகடுகு
செப்பாதே எருக்கிலைமேல் சுணையுங்கூட்டு
திரமான வகைக்குவகை களஞ்சுதூக்கு
கப்பரிய தூதுவளை கண்டங்காலி
கடிதான மிளகரணை வெள்ளைச்சாரணைவேர்
ஒப்பரிய பெருமருந்து புங்கம்பாளை
உயருத்தா மணியோடு கடலிராஞ்சியென்னே. (122)

என்னவே தைவேளை குப்பைமேனி
இவைதனிலே வகைவகைக்குக் களஞ்சிடைவேர்கூட்டு
இன்னவே அத்திப்பால் வெள்ளாட்டுநீரும்
இட்டுலர்த்தி யிடித்துத்தூள் சீலேவடிகொண்டு
என்னவே எட்டியுட சிமிழ்தானன்று
இலாவிட்டால் பேய்ச்சுரையின் குடுக்கையிலே அடைத்து
பன்னவே பணவெடைதூள் நாசிக்கேற்றப்
பரிவான கபாலநோய் பறந்துபோமே. (123)

போமென்ற பொடியதனைக் கடுதாசிதன்னில்
புகட்டியே திரியாகத் திரித்துக்கொண்டு
நாமென்ற நிம்பெண்ணெய் கொளுத்தியாற்றி
நலமான புகைதன்னை நாசிக்கேற்ற
ஓமென்ற கபாலத்தில் சன்னிமண்டைக்குத்து
ஒருதலைநோய் நீர்ப்பாய்ச்சல் ஓடும்பித்தம்
காமென்ற கபாலத்தில் வாய்வுசூலை
கரப்பனொடுசுன்னேசி கன்னப்புற்றே. (121)

புற்றான ஏழுவகைப்பீ னிசமும்போகும்
பொல்லாத சலதோஷம் புகைநீர்ப்பாய்ச்சல்
கத்தான கபாலத்தில் விப்புருதிசூலை
காசமொடு புண்புரையும் காணாதோடும்
மற்றுமுள்ள தந்தநோய் செவிநோய் கண்ணோய்
மகத்தான சன்னிவகை தோஷம்போகும்
சித்தான சிரசுநோய் தொண்ணூற்றுறும்
தீருமென்று பிரமமுனி செப்பினேனே. (125)

செப்பியதோர் மானிடர்க்குச் சன்னிதோஷம்
சிறந்ததொரு பல்கிட்டி மூச்சடக்கமானால்
நப்பியே ஆக்ராணம் பணவெடையேகொண்டு
நவச்சாரம் பணவெடைதாண் கற்சுன்னங்கொஞ்சம்
நப்பியே மத்தித்து நாசிக்கேற்ற
நாடாது பல்கிட்டு சன்னிதீரும்
ஒப்பியே இன்னுமொரு சேதிகேளு
உற்றதொரு சடத்திலே ஆறுப்புண்ணே. (126)

புண்ணென்ன மேகத்தி லடுத்தரோகம்
புரையோடு ஆறாத புண்ணுக்கெல்லாம்
அண்ணென்ன ஆக்ராணங் கழஞ்சுகூட்டி
அரிதாரஞ் சாதிலிங்கம் ரசகற்பூரம்
கண்ணென்ன கொடிக்கள்ளிப் பட்டைத்தூளும்
கழுதைலத்தி உலர்த்தித்தூள் கலந்துகூட்டு
விண்ணென்ன வகைவகைக்குக் களஞ்சுகூட்டு
விரசோடு திருகுகள்ளிப் பால்தான்விட்டே. (127)

புண்ணுக்குப்புகை.

விட்டதனை அரைத்துலர்த்தி வைத்துக்கொண்டு
விதமான புங்குபுளி தணல்கொண்டேற்றி
விட்டதின்மேல் தணலிலே பொடியைப்போட்டு
மேலேதான் கண்சிறட்டை கொண்டுமூடி
விட்டதனை வியாதியின்மேல் புகையைக்கேளு
வெடிசூலை மேகவெடி கிரந்திஅரையாப்பு
திட்டமுடன் பவுத்திரமும் அழுகண்ணிகுஷ்டம்
தீராத களிப்புண்கள் தீருமென்னே. (128)

தீருமென்ற பொடியதனை அலரிப்பாலில்
சேர்த்துநீ மத்தித்துச் சீலையிலேயூட்டி
ஆறவேன்று ஆறாத புண்மேற்போடு
அழுகிவிழுங் கிரந்திகுழி வாழைப்புண்ணும்
தீருமே குஷ்டமொடு குறைநோய்ப்புண்ணும்
தேகத்தி லெழுந்ததொரு நோய்களெல்லாம்
காருநீ கண்காணு தோடமப்பா
கடிதான பத்தியந்தான் கண்டுகொள்ளே. (129)

கண்டுகொள்ளு மூன்றுநாள் புகைதான்காட்டு
கண்டிப்பாய் ஆறுநாள் பத்தியந்தான்காரு
சென்றுதான் ஏழாநாள் தலைநீர்வாரு
சிறப்பான உப்பதனை வறுத்துக்கூட்டு
முன்செய்யா மறுபடியும் விளக்கெண்ணெய்தேய்த்து
முழுகியபின் மற்றதெல்லா முண்டுதேறு
சென்றுவரும் புகைவேக மென்னசொல்வேன்
தீராத நோயெல்லாந் தீரும்பாரே. (130)

விஷமுஷ்டித் தைலம்.

தீரவே விஷமுஷ்டித் தைலங்கேளு
தீராத கரப்பனொடு அழுகண்ணிசூலை
மாரவே செவ்வட்டை மரவெட்டைசெய்யான்
வண்டுகடி புலிச்சிலந்தி புடையான்குத்து
பேரான பில்லிவஞ் சனையேவல்சூன்யம்
பிசாசுமுதல் பூதவே தாளமோடு
மாருத குஷ்டமொடு குறைநோய்தீர
மைந்தனே தயிலமொன்று வழங்கக்கேளே. (131)

வழங்கவே எட்டிவே ரழிஞ்சிசங்கு
வன்னிபுங்கு வண்டுகொல்லி சங்கங்குப்பி
அளம்பவே அடம்புசின்னி ஆயிலியப்பட்டை
ஆளிவேர் வெள்ளெருக்கு மருக்காரையிண்டு
குளம்பவே சிவந்தநா யுருவிகொத்தான்
குன்றிமணி ஆவாரை கறுத்தகண்ணி
வளம்பவே சிவன்வேம்பு கழுதைமுள்ளி
மருதோன்றி தாளிச்சு கருங்காலிபுரசே. (132)

புரசான உள்ளுலர்த்தி கிளுவைவாகை
புலித்துடக்கி கருஞ்சூரை கரந்தைமத்தம்
வீரசான கொடுவேலி அமுக்கராதேக்கு
விடத்தலையின் பலாசுபலா மிளகரணைகுமரி
அரசோடு பூவரசு மருதுகொன்றை
ஆதாளி களக்கோட்டி செங்கத்தாரி
சரிகுவளை பெருமருந்து காட்டுள்ளியவுரி
சமனெடைதா னிவையெல்லாந் தறித்துலர்த்தே. (133)

உலர்த்திப்பாண் டத்திலிடு குழிப்புடத்தில்தயிலம்
உடன்வாங்கி மூஞ்சூறண் டங்காக்கைகழுகு
அலர்த்தியா மைகூகை யாந்தைதேவாங்கு
ஆனகழு தைமண்டை பச்சோந்திமுசுறு
பலர்த்திபசுந் தவளைபெரு விரியன்பசும்பாம்பு
பன்றிலத்தி கழுதைலத்தி தலைமண்டையுடனே
முலர்த்திகய லத்திபரிக் கொம்பெருமைக்கொம்பு
முசற்புழுக்கை வவ்வாலோ டெலிப்புழுக்கையென்னே. ()

என்னவே ஓட்டைலத்தி வெள்ளாட்டுப்புழுக்கை
யிவையெல்லாஞ் சமன்கொண்டே யிடித்துலர்த்தித்
தன்னவே சிவசெந்து வகைகளெல்லாஞ்
சமூலமு மிடித்துலர்த்தி யொக்கச்சேர்த்துப்
பன்னவே பெரும்பாண்டத் திட்டுமூடிப்
பதறாதே குழிவெட்டி அடிக்கலசம்வைத்துத்
தன்னவே குழிப்புடத்தில் தயிலம்வாங்கிச்
சமனாக முன்தயிலத் தொக்கச்சேரே. (135)

சேருமே ரெண்டுவகைத் தயிலமொன்றாய்ச்
சேங்கொட்டைத் தயிலமரைப் படியேவாரு
காருகருங் குங்கிலியங் கழஞ்சியெட்டு
கழறுகிறேன் இவையுடனே மைந்தாகேளு
ஆருநீ கரியசீ ரகந்தானெட்டு
அழகான தேவதாரங் கஸ்தூரிமஞ்சள்
சேரூரச கற்பூரங் கழஞ்சியெட்டு
சென்னகரைப் பட்டையொரு பலந்தானென்னே. (136)

பலமான பறங்கிப்பட் டைபலந்தான்ரெண்டு
பாங்கான கஸ்தூரிப் பட்டைபலம்ரெண்டு
பிலமான பிரம்போடு கிழங்குபலம்ரெண்டு
பேரான வலம்புரிக்காய் வாலுழுவைகடுக்காய்
அலையாதே வகைவகைக்குப் பலந்தானென்று
ஆட்டுவாய் கொடிக்கள்ளிச் சாறுதியம்பட்டை.
மலையாதே விட்டரைத்துத் தயிலத்தில்வாரு
மகத்தான ரோகமெல்லாம் மாண்டுபோமே. (137)

மாடுண்போம் பூதம்பி சாசுவேதாளம்
மருண்டோடும் வஞ்சனையும் பில்லிசூன்யம்
மாண்டுபோஞ் சொரிநோவு சிரங்குகுஷ்டம்
மாறாத அழுகண்ணி வாதஞ்சன்னி
மாண்டுபோம் இவையெல்லாந் தயிலம்பூச
மயிலெண்ணெய் வேப்பெண்ணெய் சேர்த்துக்கொள்ளு
மாண்டுபோஞ் சருவாங்கம் துவாலைபோடு
மற்றுநாள் வேதுவிட்டுக் குளித்துப்போடே. (138)

குளிக்கவே தழுதாழை காந்தைநொச்சி
 குன்றிமணி சங்கங்குப் பியும்வாதமடக்கி
களிக்கவே நோயறிந்து வேதுகூட்டு
 கைப்போடு புளிபுகையுந் தள்ளிப்பாரு
விழிக்கவே உப்பதனை வறுத்துக்கூட்டு
 வெள்ளாடு முயலுடும்பு அயிரைவிராலாகும்
அழிக்கவே வழுதலங்காய் முருங்கைப்பிஞ்சு
 அரைக்கீரை பசும்பயறு அறிந்துகூட்டே. (139)

கோம்மட்டிக்காய்ப்பதங்கம்.

கூறவே கொம்மட்டிக் காய்ப்பதங்கஞ்சொல்வேன்
 கூறியதோர் வாதமெண் பதுதான்போகக்
கூறவே தழுதாழை ஆயிலியப்பட்டை
 கொடுவேலி பாவட்டை அமுக்கராவேர்
மூறிடவே வெண்சாரணை சத்திச்சாரணை
 முடக்கொத்தான் பெருவாகை தூதுவளைசடைச்சி
தேறியே தைவேளை குப்பைமேனி
 சிவன்வேம்பு பிரம்பினிட கிழங்கொன்றுமே. (140)

ஒன்றான இவையெல்லாஞ் சூரணமேசெய்து
 உத்தமனே கண்டத்திப் பிலிகிராம்போமம்
தின்றான வால்மிளகு தாளிசபத்திரியும்
 திப்பிலியும் வாலுழுவை திப்பிலியின்மூலம்
சென்றுமக் ராகாரம் வாலுழுவைகஞ்சா
 திரமான லவங்கப்பூ சாதிக்காயே
அன்றான சதகுப்பை பறங்கிப்பட்டை
 அரைத்தைசுக்கு அதிமதூரம் சிறுநாகப்பூவே. (141)

பூவான கருஞ்சீரம் வகைக்குநாற்கழஞ்சு
 பொடித்துநீ முன்மருந்தோ டொக்கச்சேரு
தேவோடு கல்வத்தி லிட்டுக்கேளு
 திருகுகள்ளிப் பாலோடு உத்தாமணிச்சாறும்
பாவோடு வார்த்ததனை அரைத்துலர்த்திப்
 பக்குவமாய்ப் பேய்க்குமட்டிக் காய்தான்கேளு
கோவோடு வேண்டியது கொண்டுவந்து
 குடைந்துள்ளே சதையோடு விதையும்போக்கே. 142)

போக்கியே மருந்தெல்லாங் காயினுள்ளே
புகட்டியந்த வோட்டாலே மேலேமூடிச்
மேக்கியே பாண்டத்தி லிட்டுநீயும்
மேல்மூடிச் சீலைசெய்து குழிதான்வெட்டி
கேட்கவே வெள்ளாட்டுப் புழுக்கைமைந்தா
கீழ்மேலு மிட்டுநடுப் பாண்டம்வைத்துப்
பாக்கியே புடம்போட்டு ஆறவிட்டுப்பாரு
பருவமாங் காயெல்லாஞ் சிவந்துகாணும். (143)

காணுவது கருகாம லிப்பால்வாங்கிக்
காயெல்லா மாறவிட்டு மருந்தைக்கொட்டிப்
பேணியே குங்குமப்பூ சாதிக்காயும்
பெய்துநீ பொடிசெய்து வைத்துக்கொண்டு
ஆணுவது வெருகடிதா ளந்திசந்தி
அப்பனே மூன்றுநாள் ஆறுநாட்கொள்
காணுவது வயறுளைந்தால் நிறுத்திப்போடு
கலங்காதே எருமைமோர் சோறுமுண்ணே. (144)

உண்ணவே வாதமெல்லா மோடிப்போகும்
உத்தமனே கைப்போடு புளிபுகையுந்தள்ளு
தண்ணியே பத்தியத்துக் காகாவெல்லாந்
தள்ளிவிடு மற்றவெல்லா மிச்சாபத்யங்
கண்ணவே உப்பதனை வறுத்துக்கூட்டு
தண்காணு தோடுமடா வாதமொடுசூலை
ஒண்ணுவது காலுகை முடக்கிழுப்புவாதம்
உத்தமனே பச்சைவா தம்ஒடும்பாரே. (145)

ஆடாதோடைலேகியம்.

பாரேநீ க்ஷயந்திர ஆடாதோடை
பாடுகிறேன் தூதுவளை சிறுகாஞ்சோரி
காருநீ முசுமுசுக்கை கண்டங்காலி
கரிசாலை முள்ளங்கி மணத்தக்காளி
சேரேநீ சிறுமுருங்கை வழுதலையின்சங்கு
சேர்த்துநிலை யாவாரைச் சூரணமேசெய்து
காரேநீ கடுக்காயுங் கோஷ்டந்திப்லி
கருஞ்சீர கம்மிளகு வசம்பிந்துப்பே. (146)

உப்பான சிற்றரத்தை பேரரத்தை
உத்தமனே வாலுழுவை சூகைநீறு
செப்பாத சீரகமுங் கற்கடகசிங்கி
சிறுநாகப் பூவோடு நெல்லிமுள்ளி
உப்பாக வகைவகைக்குக் காற்பலமேதூக்கு
உத்தமனே யிடித்துநன்றாய் முன்மருந்திற்சேரு
செப்பாக ஆவின்நெய் படிதான்வாரு
சிறப்பான வெள்ளாட்டின் பால்படிதான்வாரே. (147)

வார்த்துமே அரக்கம்பால் சாறுபடிவாரு
வளமாக அடுப்பேற்றிக் கொதியிடும்போது
பார்த்துமே பனங்கற்கண் டும்பலந்தானாலு
பனைவெல்லம் பலம்நாலு போட்டுக்காய்ச்சு
கோத்துமே பாகுவரில் சூரணத்தைக்கொட்டிக்
கொம்புத்தே னொருசேரை கூடவாரு
ஆர்த்துமே லேகியமாய்ப் பண்ணிக்கொண்டு
அந்திசந்தி நாளொன்றுக் கிருநேரங்கொள்ளே. (148)

கொள்ளுவது பவளபற்பம் அரிதாரபற்பம்
கூட்டியே நேசமொரு பாக்களவுகொள்ளு
தள்ளாதே மண்டலமே கொள்ளும்போது
க்ஷயமீளை க்ஷயமிருமல் மந்தாரகாசம்
விள்ளாதே ஓடிவிடும் க்ஷயரோகமேழும்
மேகவகை கிரந்திகுஷ்டம் உஷ்ணவாய்வு
கள்ளமாம் வியாதியெல்லாங் காணுதோடுங்
கைகண்ட வித்தையிது கண்டுபாரே. (149)

பாரேநீ கைப்போடு புளிப்புந்தள்ளு
பசுவின்நெய் வெள்ளாட்டு மாமிசமுங்கூட்டு
சேரேநீ ஆவின்பால் வெள்ளாட்டுப்பாலில்
தினந்தோறுஞ் சீனியிட்டுக் காய்ச்சிக்கொள்ளு
சாரேநீ பத்தியந்தான் முறையேசெய்து
சார்ந்துபார் சண்டாள ரோகம்போகும்
ஏரேநீ நல்லமுழுக ஆவின்நெய்யாம்
இல்லாவிட் டால்முக்கூட் டெண்ணெய்முழுகே. (150)

அரிதார பற்பம்.

மூழ்கவே அரிதார பற்பஞ்சொல்வேன்
முனையான அரிதாரம் பலந்தானொன்று
தேளான கற்சுன்னம் படிதானொன்று
தேசிநீர் படிரெண்டு செப்பக்கேளு
வாழ்கவே புதுச்சட்டி தன்னிலேதான்
வளமான கற்சுன்னங் கீழ்மேலிட்டு
நாழ்கவே அரிதாரங் கிளிபோற்கட்டி
நடுவேநீ கிளிவைத்துத் தேசிநீர்வாரே. (151)

தேசிநீர் தன்னிலே உவர்ப்பூவிட்டுத்
தெளியவைத்துத் தெளிவிறுத்து வார்த்துநீற்று
ஆசியே யிப்படிநீ யேழுதரமதிந்து
அரிதார மஞ்சள்கக்கி வெள்ளையாகும்
மாசியே அதையெடுத்து மறுசட்டியிட்டு
மைந்தனே அடுப்பேற்றி யிருள்ளிச்சாறு
காசியே படியொன்று கரந்தைச்சாறொன்று
கலந்துமே சுறுக்கிட்டுக் கருதிக்கேளே. (152)

கருதிப்பூ வரசம்பட் டைபுளியம்பாணி
கனமான நாயுருவி சுட்டசாம்பல்
கருதுவேன் வகைவகைக்கு ரெண்டுபடிசாம்பல்
கலந்துமே சட்டியிலே கீழ்மேலிட்டு
அரிதியே தாளகத்தில் கவசங்கேளு
அணடோடும் உவர்ப்பூவுந் தலைமண்டையோடும்
வெருவியே சுன்னநீ ராவின்பாலும்
விட்டரைத்து மேற்கவசங் கட்டிப்போடே. (153)

கட்டியே ரவியிலிட்டு உலர்ந்தபின்பு
கனமான சாம்பலிலே நடுவேயிட்டு
சட்டியே மேற்சட்டி கொண்டுமூடிச்
சந்துவாய்ச் சீலைசெய்து அடுப்பிலேற்றிக்
கட்டியே தென்னமட்டை தென்னம்வேரால்
கமலம்போல் எரித்திடுவாய் நாலுசாமம்
அட்டியில்லா தாறவிட் டெடுத்துப்பாரு
அரிதாரம் நீறுமப்பா ஆர்சொல்வாரே. (154)

சொல்லாத பற்பமொரு பணவிடைதான்மைந்தா
சுகமான நெய்தேனிற் கூட்டிக்கொள்ளக்
கொல்லாத க்ஷயமீளை மந்தாரகாசங்
குலைந்தொலையக் கிரந்தியரை யாப்புக்குஷ்டம்
சொல்லாதே வேதையிட்டால் ஏழுமாற்று
சுறுக்காகும் ரசபற்பஞ் சேர்த்துக்கொண்டால்
கல்லான வியாதியெல்லாந் தீருமப்பா
கைமுறையாச் சொல்லிவிட்டேன் பார்க்கலாமே. (155)

பவளபற்பம்.

யாரேநீ பவளபற்பஞ் சொல்லக்கேளு
பாங்கான நற்பவளம் பலந்தான் தூக்கு
நேரேநீ யிலங்கையிலே தனை அரைத்து
ரெண்டடையாய்ப் பிடித்ததின்மேற் பவளம்வைத்துப்
போரேநீ மேலுமந்த அடையால்மூடிப்
பொருந்தவே சீலைசெய்து முழுப்புடத்திற்போட
ஆரேநீ ஆறவிட் டெடுத்துப்பாரு
அப்பனே பவளமெல்லாம் பீங்கானிலிட்டே. (156)

இட்டுமே ஆவின்பால் நிறையாய்வார்த்து
என்மகனே ரவியில்வைக்க நீறும்பாரு
திட்டமாம் பவளபற்பம் ஆருஞ்சொல்லார்
செப்பாதே வெகுசுருக்குத் தீரும்பாரு
கொட்டாதே பற்பமொரு பணவெடையே தூக்கு
கொம்புத்தேன் ஆவின்நெய் கூட்டிக்கொள்ளு
தட்டாத மேகமாங் கிரந்திசூலை
க்ஷயமீளை யிரைப்பிருமல் நீர்சொரிவுபோமே. (157)

சிங்கிபற்பம்.

போமென்ற சிங்கிபற்பம் சொல்லக்கேளு
புசநான கலைக்கொம்பு பிளந்துநாலாய்
ஆமென்ற மேனியிலே அரைத்து அப்பி
அப்பனே முழுப்புடத்தி விட்டுவாங்கி
தேகமென்ற நீறமது தீர்க்கமாகத்
திறமான ஆவின்பால் விட்டரைத்துத்
தாமென்ற முழுபபுடத்திற் போட்டாயானால்
சங்குபோல் நீறியது தவளமாமே. (158)

தவளமாம் பற்பம்ரெண்டு பணவெடையேதூக்கு
சார்வான ஆவின்வெண்ணெய் தன்னிற்கொள்ளு
துவளமாம் மேகமுடன் உஷ்ணகாந்தி
தொலையாத சூடெரிவு நீரடைப்புக்
கவளமாம் பவளபற்பம் சேர்த்துக்கொள்ளு
கல்லடைப்பு நீரடைப்பு க்ஷயரோகங்கள்
துவளமாம் க்ஷயமீளை தூர்மாங்கிஷங்கள்
தொலையாத வியாதியெல்லாந் தொலைந்துபோமே. (159)

போமென்ற தந்தநோய் முப்பத்திரண்டும்
போகவே உப்புஒரு பலந்தான்வாங்கி
வேகவே வர்க்கம்பால் மேனிச்சாறும்
விட்டரைத்து வில்லைதட்டிக் காயவைத்து
ஆமென்ற ஓட்டிலிட்டு மேலோடுமூடி
அப்பனே முழப்புடத்தி லிட்டுவாங்கு
ஆமென்ற பொடிசெய்து வேறேவைத்து
அயப்பொடியுந் துருசுதுத்தங் கச்சுக்கட்டே. (160)

கட்டியே கண்டங்கத் திரிவிதையினோடு
கருஞ்சீரங் களிப்பாக்கு வகைவகைக்கு
ஒட்டியே கழஞ்சிடைதான் சமனாய்ச்சேர்த்து
உத்தமனே அயக்காண்டி தன்னிலிட்டு
ஆட்டியே வறுத்துநன்றாய்க் கல்வத்திட்டு
அதினொடுகொட் டாங்கச்சிக் கரியுங்கூட்டு
இட்டுமே பொடிசெய்து முன்பொடியோடொக்க
இடையாகங் குறையாமல் சமனாய்ச்சேரே. (161)

கொப்பளிக்குக்கியாழம்.

சேரேநீ கொப்பளிக்கக் கியாழங்கேளு
திறமான கடுக்காயுஞ் சுக்காங்கல்லும்
ஏரேநீ முடக்கொத்தான் கருவேலம்பட்டை
பெரிகாலன் நீர்ப்பூலா இவைதானாறும்
பாரேநீ இடித்துமொரு பாண்டத்திட்டுப்
பதக்குநீர் விட்டெரித்துக் கியாழம்பண்ணிக்
காரேநீ பொடியெடுத்துத் தந்தசுத்திசெய்து
கியாழத்தை வார்த்துக்கொப் பளித்துப்போடே. (162)

போடவே பல்லசைவு தந்தவாய்வு
பொல்லாத பற்குத்துப் பல்லரணை
மூடவே பற்புழுவும் பல்லுக்கூச்சம்
முகவாதஞ் சன்னியொடு தந்தசன்னி
நீடியதோர் பல்வாதம் பல்லூளைச்சல்
நேத்திரநோய் வேர்வெட்டு சொத்தைப்பல்லு
பாடியதோர் தந்தநோய் முப்பத்திரண்டும்
பறந்துபோம் பொடியினுட வேகந்தானே. (163)

கெற்பநோய்க்கு எண்ணெய்.

பறந்துபோங் கெற்பநோய் தீரவேண்டிற்
பாடுகிறேன் விளக்கெண்ணெய் படிதான்ரெண்டு
விரைந்திடவே பேய்க்கொமட்டிச் சாறுபடிரெண்டு
வேப்பம்பட் டைச்சாறு களக்கொட்டிச்சாறு
முறைந்திட்ட ஐவேலி பிரமிச்சாறும்
முடக்கொத்தா னுள்ளுலர்த்தி காட்டுள்ளிச்சாறும்
இருந்திட்ட வகைவகைக் கிரண்டுபடிசாறு
எண்ணெயிலே வார்த்திடுநீ இன்னுங்கேளே. (164)

கேளாய்நீ கொடிவேலி புங்கம்பாளை
கிளுவைவிலே யாவாரை குருந்துசங்கு
வேளேநீ மூங்கிலிலே கஸ்தூரிப்பட்டை
வெள்ளறுகு தலைச்சுருளி காக்கட்டான்குமரி
வாளேநீ வெள்ளைச்சா ரணையினோடு
வகைவகைக்கு ஒருபலந்தான் வரிசையாகச்
சேளேநீ கொடிக்கள்ளிச் சாற்றுலாட்டு
குழப்பியே யெண்ணெயிலே கரைத்துவாரே. (165)

வாரேநீ கடுகோடு திப்பிலியுங்கடுக்காய்
வால்மிளகு குரோசாணி கடுகுரோகணியும்
ஆரேநீ கருஞ்சீரங் கஸ்தூரிமஞ்சள்
அரத்தைசுக்கு வால்மிளகு சிறுநாகப்பூ
பேரேநீ இந்துப்பு ஆனைத்திப்லி
பெருங்காயஞ் சாதிக்காய் தாளிசபத்திரியும்
ஏரேநீ சேங்கொட்டை ரசகற்பூரம்
இஞ்சியொடு நவச்சார மியம்பக்கேளே. (166)

இயம்புகிறேன் வகைவகைக்கு நாற்கழஞ்சுவீதம்
 எரிகால சாறேடு வெள்ளாட்டுநீரும்
அயம்புகிறேன் விட்டரைத்து எண்ணெயிலேவாரு
 அடுப்பேற்றி யெரித்துநீ மெழுகுபதம்பாரு
அயம்பாத வடிகலசந் தன்னிற்கேளு
 ஆகாசத் தூளொடுவெண் காரம்ரெண்டு
வயமாக வகைவகைக்கு இருகழஞ்சுபோடு
 வடித்தெடுத்து எண்ணெயைநீ வைத்துக்கொள்ளே. (167)

எண்ணெயே மூன்றுநாள் கொள்ளும்போது
 என்னசொல்வேன் கெற்பநோ யேழுமங்கே
துண்ணவே சூதகவாய் வுத்திரட்சிகுன்மம்
 தொலேந்தோடுங் கெற்பக்கி ராணிவாய்வுசூலே
விண்ணவே பத்தியந்தான் மூன்றுநாளும்
 வெள்ளாட்டுப் பாலொழிய வேறென்றுமாகா
அண்ணவே பாலில்லா வெந்நீராகும்
 அப்பனே நாலாநாள் தலேநீர்வாரே. (168)

வார்த்தநாள் முதல்மற்ற மூன்றுநாளும்
 மைந்தனே ஆரையிலே கிளுவைரெண்டும்
ஆர்த்துமே ஐவிரலி யிலேயுங்கூட்டி
 அரைத்தாவின் பால்வெண்ணெய் தன்னிற்கொள்ளு
ஏத்துமே ஆறுநா ளெண்ணெய்மூழ்கி
 ஏழாநாள் நாயகனே டிணங்கச்சொல்வேன்
போர்த்தரிய மலடியுமே பெறுவாள்பிள்ளே
 பெண்மலடோ உலகத்தி லில்லேக்காணே. (169)

இல்லேயப்பா கைகண்ட வித்தைபாரு
 இரிசிருப தானுலும் பிள்ளேயுண்டு
தொல்லேயே பிசாசுபிணி கிரகதோஷம்
 சுருக்கமாய்ச் சாந்திசெய்து தகடுசெய்து
அல்லவே நோயோடு பேயுங்கூடில்
 அவிழ்தந்தா னேதுசெய்யும் மப்பாகேளு
மல்லவே மணிமந்த்ர முன்னேசெய்து
 மறுபடியும் மருந்துசெய்யப் பலிக்கும்பாரே. (170)

துளிசம்.

பலித்திடவே அயத்தகடு சதுரமாகப்
பண்ணியதி லிருபத்தஞ் சறைதான்கீறி
மலிக்கவே அறைதோறுஞ் சிவயநமவென்று
மநயவசி யென்றதனை மாறிப்போடு
சுழிக்கவே சுற்றெல்லாஞ் சூலம்போடு
சூலத்தி னுனிதோறு மகாரம்போடு
அலிக்கவே அறைதோறும் ஓங்காரம்போடு
ஐம்பத்தோர் லக்கமதி லடைத்திடாயே. (171)

அடைத்திடவே நோயாளி பேருமிட்டு
ஐங்காயத் தேசியுட கருவும்பூசு
தடுத்திட்டு லக்ஷுமுரு வேறச்செய்து
சாந்தியொடு ஓமஞ்செய் சாபம்நீக்கி
நொடித்திட்டுக் கும்பகத்தில் சலத்தைவாங்கி
நோயாளி சிரசிலே புரோக்ஷித்தேநீ
வடித்திட்டு இப்படியே தகடுசெய்து
வைத்தியனே பின்பவர்க்கு மருந்துசெய்யே. (172)

செய்திடவே தீராத நோயுமுண்டோ
தேசத்தி லுனைப்போலே வைத்யனுண்டோ
நொய்யாதே நோயாளி சொல்லக்கேளு
நோய்தீர வைத்தியனே உபசாரஞ்செய்
மெய்யனே யென்றகுரு பாதம்போற்றி
மேதினியில் தானதர்மஞ் செய்துவாநீ
ஐயனே வினையெல்லா மகன்றுபோகும்
ஆதவன்போல் நீடூழி வாழ்வாய்தானே. (173)

நவச்சார எண்ணெய்.

வாழ்கவே எண்ணெயிலே நவச்சாரம்போட்டு
மைந்தனே நீர்முள்ளிச் சாறுங்கூட்டி
வாழ்கவே உள்ளுக்குக் கொள்ளச்சொல்லு
மகோதரம்நீ ராம்பல்பெரு வயிறுதானும்
போகுமே பொல்லாத குன்மமெட்டும்
பித்தமொடு வுளமாந்தை பாண்டுசோகை
ஏகுமே கரப்பனொடு வாதகுன்மம்
இந்த்ரகண்டி மலக்கசடு இரைச்சல்வாய்வே. (174)

வாயுவொடு புழுக்கிருமி எல்லாம்போகும்
வாகுபெறச் சொல்லிவிட்டேன் எண்ணெய்தன்னை
வாயுவொடு வியாதிகட்கும் மலடிகட்கும்
வைத்தியத்தில் தீராவிட் டாலென்னசெய்வேன்
நோயேது அவரவர்கள் செய்தகன்மம்
நோய்போலே அவரவரைத் தொடர்ந்ததப்பா
நாய்போலே அலையாதே சொல்லக்கேளு
நலமான கருமத்தைத் தீரச்செய்யே. (175)

தீரவே தானதர்மஞ் செய்யவேண்டும்
சிவபூஜை குருபூஜை செய்யவேண்டும்
தீரவே கோயில்குளம் கட்டவேண்டும்
சிவாலயங்கள் திருவிளக்கு வைக்கவேண்டும்
தீரவே அன்னதா னங்கன்னிதானந்
திருவாசு நந்தவனஞ் செய்யவேண்டுந்
தீரவே தர்மத்தை விரும்பவேண்டும்
தீராத தீவினைகள் தீரவென்றே. (176)

தீரவென்றால் வைத்தியனை உபசாரஞ்செய்
திரமான வாரிமகன் வைத்யனாகில்
தீரவென்று சாஸ்திரத்தை ஆராய்ந்து பார்த்துச்
செய்முறையுங் கைமுறையுந் திறமாய்ச்செய்வான்
ஆரென்று வேதநூ லறியாமூடர்
அகப்பட்ட படிசெய்வார் ஆகாதென்றும்
காரென்று குருபதத்தைப் போற்றிசெய்து
கைமுறையாய் மருந்துசெய்யிற் பலிக்கும்பாரே. (177)

நிலவாகைச் சூரணம்.

பாரேநீ நிலவாகை கொண்டுவந்து
பண்பாக இடித்துத்தூள் பலமேபத்து
சேரேநீ மிளகோடு கடுக்காய்தான்றி
சீரகமும் வாலுழுவை சிறுநாகப்பூ
காரேநீ யேலமி லவங்கப்பட்டை
கடுகுரோ கணிசிவதை தாளிசபத்திரியும்
சேரேநீ ஜாதிக்காய் கிராம்புதிப்லி
செவ்வியம்இந் துப்புடன் கூகைநீறே. (178)

நீரான சுக்கோடு வகைக்குக்கால்பலந்தா
　　னிறுத்திடித்து முன்மருந்தோ டொக்கச்சேரு
சீரான ரெண்டுவகைச் சூரணமுஞ்சமனுய்ச்
　　சீனிசர்க் கரைபாதி சேர்த்துக்கொண்டு
நேரேநீ நாளொன்றுக் கந்திசந்தி
　　நெய்தேனில் வெருகடிதூ ளிழைத்துக்கொள்ளு
நேரேநீ மண்டலந்தான் கொள்ளும்போது
　　தீராத நோயேது செப்பக்கேளே. (179)

செப்பவே மேகமொடு பித்தம்போகும்
　　சிறப்பான அரோசிகமும் வாய்நீரூறல்
துப்பரவாய் மலக்கட்டு வாய்வுகாந்தி
　　சூடுகொள்ளல் சொரிசிரங்கு மூலவாய்வு
முப்போதும் வலஞ்சுத்தி யாகும்பாரு
　　மூலத்தில் நோயெல்லா முறிந்துபோகும்
செப்பாதே வெகுசுளுகு இன்னுமொன்று
　　சிவன்வேம்புச் சூரணத்தைச் சொல்கிறேனே. (180)

சிவன்வேம்புச் சூரணம்.

சொல்லுகிறேன் சிவன்வேம்புச் சூரணமேசெய்து
　　சுகமாகப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
மல்லுகிறேன் சிவன்வேம்புத் தைலந்தானும்
　　வாங்கியே படியொன்று வேறேவைத்து
அல்லுகிறேன் வாலுழுவை தாளிசபத்திரியும்
　　அழகான கிராம்பேலம் அதிமதுரங்கோஷ்டம்
கல்லுகிறேன் ஜாதிக்காய் ஜாதிப்பத்திரியும்
　　கருஞ்சீர கம்மிளகு கடுக்காய்திப்பிலியே. (181)

திப்பிலியும் அதிவிடையம் பறங்கிப்பட்டை
　　சிறுநாகப் பூவோடு வால்மிளகுசிங்கி
இப்படியே வகைவகைக்குக் கால்பலமேதூக்கு
　　இடித்துநீ சிவன்வேம்பு சூரணத்தோடொக்கத்
தப்பாதே சமபாகம் பாதிசீனி
　　சாரித்து ஒன்றாகச் சேர்த்துக்கொண்டு
செப்பாதே தினமொன்று வெருகடிதூளப்பா
　　சிவன்வேம்புத் தைலத்திற் குழைத்துக்கொள்ளே. (182)

கொள்ளவே பதினெட்டுக் குஷ்டரோகங்
　　சூலைக்தோடும் மேகமொடு சுவாலைவாய்வு
கள்ளமாங் கரப்பனொடு சொரிசிரங்கு
　　கடிவிஷங்கள் வெட்டையொடு விரணகாந்தி
துள்ளியே நோயெல்லா மோடிப்போகும்
　　சொல்லரிது காயசித்தி சுருக்குமெத்தக்
கள்ளமில்லை சொல்லிவிட்டேன் சிவனார்வேம்பு
　　கற்பத்துக் காதியாங் கண்டுபாரே. (183)

கண்டுபார் சூதகத்தி லுதிரம்போகா
　　காலோடு கைமேலுங் கடுத்துக்குத்திச்
சென்றுபார் வயிற்றிலே சோறேதங்கித்
　　திரட்சிகுன்மம் வாய்வாகிச் சுவாலையாச்சு
அன்றுபார் சூசிக வாயுவாச்சு
　　அபானமாங் கருக்குழியி லுதிரங்கட்டி
உண்டுதா னுதரத்தில் வாய்வுசேர்ந்து
　　உள்ளங்கால் நகக்கண்கள் குத்தலாச்சே. (184)

சூசிகவாயுவுக்கு லேகியம்.

ஆச்சென்ன சூசிகா வாய்வுபொல்லா
　　தாருந்தான் தீர்க்கறியா ரப்பாசேளு
பேச்சென்ற கொடுவேலி அமுக்கராவேர்
　　பெருமருந்து கோப்பிரண்டை நொச்சிசங்கு
வேச்சென்ற மாவிலிங்கு மிளகருணைகொளுஞ்சி
　　வெள்ளைச்சா ரணை அடம்பு கண்ணுப்பூளை
ஆச்சென்ற நிலையாவா ரையினோடு
　　அப்பனே வகைவகைக்குப் பலந்தான்தூக்கே. (185)

தூக்கியே யிடித்ததனைச் சீலைவடிகொண்டு
　　சூரணமாச் செய்துநீ சொல்லக்கேளு
ஆக்கென்ற வால்மிளகு கடுக்காய்தாணி
　　ஆனைத்திப் பிலிஓமம் அரத்தைசுக்குத்
தாக்கிஞ்சி பெருங்காயம் கண்டத்திப்லி
　　சதகுப்பி குராசானி திப்லிமூலம்
தாக்கியே சாதிக்காய் கிராம்புபத்ரி
　　தாளிசபத் திரியோடு சிறுநாகப்பூவே. (186)

பூவோடு திப்பிலியும் விடையமாஞ்சி
புகழான சேங்கொட்டை ரசகற்பூரம்
கோவோடு வகைவகைக்குக் காற்பலமேதூக்கு
கொள்ளிலைச் சாறுதேங் காய்ப்பால்விட்டாட்டு
ஆவோடு முன்மருந்தோ டொக்கச்சேரு
அடுப்பேற்றிச் சட்டிதனைக் காய்வைத்துக்
கோவோடு நல்லெண்ணெய் படிதான்வாரு
கொதிக்கையிலே வெள்ளுள்ளி ரெண்டுபலம்போடே. ()

போடவே தோல்போக்கி நிறுத்துப்போட்டுப்
புகழான பனைவெல்லம் நாலுபலம்போடு
ஆடவே ஆவின்பால் படிதான்வாரு
அப்பனே மூங்கிலிலை அரைத்துநன்றாய்த்
தேடவே கெச்சக்கா யளவுபோடு
சேகரித்துக் கிண்டிடிலோ பாகுபோலாம்
சாடியே சூரணத்தைக் கொட்டிக்கிண்டிச்
சம்பாநெல் பொரியதிலே சேரைப்போடே. (188)

சேரையே தான்போட்டுக் கிண்டிநன்றாய்ச்
சேர்த்துமே லேகியம்போற் பண்ணிக்கொண்டு
ஆரேநீ நாளொன்றுக் கந்திசந்தி
அப்பனே கொட்டைப்பாக் களவுகொள்ளு
சேரேநீ வயிற்றிலே உதிரமேது
திரட்சியொடு வாய்வேது குன்மமேது
சோரையென்ற உதிரமெங்கே கட்டியெங்கே
சூதகவாய் வுக்குத்தல் தொலைந்துபோச்சே. (189)

போச்சென்ற பத்தியந்தான் சொல்லக்கேளு
புளியோடு புகையிலையுங் கைப்புந்தள்ளு
ஆச்சென்ற சுறுவற்றல் வெள்ளாட்டுவெற்றல்
அப்பனே விரால்வற்றல் அன்பாய்க்கூட்டு
கூச்சென்ற அரைக்கீரை முருங்கைப்பிஞ்சு
கொள்கச்சக் கருவாடு கோழிச்சாறு
ஆச்சென்ற புளியில்லா தவித்துக்கூட்டு
அப்பனே வுப்பதனை வறுத்துக்கூட்டே. (190)

கூட்டுவது மருந்துகொள்ளும் போதுதள்ளிக்
கொண்டுமறு பத்தியத்திற் கூட்டிக்கொள்நீ
நாட்டியே யின்னுமொன்று சொல்லக்கேளு
நலமான வாதமொடு சூலைரோகம்
தாட்டியே யிவ்வுலகிற் பறந்துபோகும்
தயவாக வென்முறைபோ லாருஞ்சொல்லார்
பாட்டியே ரோகமெல்லாம் செலப்பரங்கிப்
பட்டைரசா யனத்தைபுநான் பாடுவேனே. (191)

T. 15743

பரங்கிப்பட்டைரசாயனம்.

பாடுவேன் பறங்கிப்பட் டைபலந்தான்பத்து
பருபருக்கை யாயிடித்துப் பாகங்கேளு
பாடுவேன் புதுக்கலசம் மூன்றுவாங்கிப்
பட்டைத்தூள் ஒருகலசம் தன்னிற்போடு
சூடுவேன் முழமுயரங் குழிதான்வெட்டித்
தூளிட்ட கலசத்தை அடியில்வைத்து
நாடியே மறுகலசந் தன்னிற்கேளு
நலமான கலசத்துள் தமர்மூன்றிட்டே. (192)

இட்டுமே சுத்தித்த நெல்லிகெந்தி
யிதமாக ரெண்டரையே பலம்கலசத்திட்டுப்
பொட்டுஅடிக் கலசத்தின் மேலேவைத்துப்
பொருந்தவே சந்துசெய்து மறுகலசந்தன்னில்
கட்டுமே தூரியிலே தமர்மூன்றிட்டுக்
கார்த்திகையின் கிழங்கதிலே பலந்தானைந்து
அட்டியில்லா திடித்திந்தக் கலசத்திட்டு
அக்கலசம் வாய்மூடிச் சீலைசெய்யே. (193)

செய்துமே கெந்தியிட்ட கலசத்துமேலே
சிறப்பாக வைத்துநீ சீலைசெய்து
செய்யவே கலசம்ரெண்டும் அடியில்நிற்கத்
தெரியவே கிழங்கிட்ட கலசம்மேல்வைத்துப்
பொய்துமே கலசமூன் றென்றேடொன்றாய்ப்
பொருந்தவே செய்துமே புடத்தைப்போடு
எய்துமே கிழங்கினுட தயிலந்தானும்
இறங்கியே கெந்தியிலே யிளக்கங்கொண்டே. (194)

இளக்கியே கெந்தியுட தயிலம்ரெண்டு
இறக்கியே பட்டையிலே ரேகித்தொன்றாய்ப்
பளக்கியே ரெண்டுவகைத் தயிலந்தானும்
பறங்கிப்பட் டைதனிலே சொரிசிறக்கும்
இளக்கமீர யாறியந்தப் பறங்கிப்பட்டை
இடித்துமே நன்றாகச் சீலைவடிகொண்டு
விளக்கமாம் புதுப்பானை வாயிலேதான்
மெலிதான சீலையைநீ வேடுகட்டே. (195)

வேடுகட்டிச் சூரணத்தை யதின்மேல்வைத்து
மேல்சட்டி கொண்டுநன்றாய்ப் பொருந்தமூடி
வேடுகட்டும் பானையுட விலாவிற்போட்டு
விதமாம்புங் கந்தணலி லுள்ளேயிட்டுப்
போடுவது சாம்பிராணி டலந்தான்பத்துப்
பொடிசெய்து புகையெழும்பப் போட்டுவாநீ
யாடுவது சாம்பிராணி யெல்லாம்போட்டு
அப்பனே சூரணத்திற் பதங்கமேற்றே. (196)

ஏற்றியே யெடுத்ததனைப் பதனமாக
என்மகனே நாளொன்றுக் கிருநேரங்கொள்ளு
போற்றரிய வாதசூலை மேகசூலை
பொல்லாத கரப்பனொடு கிரந்திகுஷ்டம்
ஏற்றரிய காலுகை முடக்குச்சூலை
பிருமலொடு மேகத்தி லெடுத்தவூறல்
பாற்றுமே சந்துவலி பிடிப்புக்குத்தல்
பரிதிகண்ட பனிபோலே பறந்துபோமே. (197)

பத்திய முறிப்பு.

பறந்துபோம் கைப்போடு புளிப்புந்தள்ளு
பசுவின்பால் நெய்மோரும் பாங்காய்க்கூட்டு
பறந்துபோம் உப்பதனை வறுத்துக்கொள்நீ
பசும்பயறு அரைக்கீரை முருங்கைப்பிஞ்சு
பறந்துபோம் பத்தியந்தான் சொன்னபடிசெய்து
பாங்காக மருந்துண்ணத் தீரும்நோய்தான்
பறந்துதான் பத்தியத்தில் பாகந்தப்பில்
பலபலவா மருந்துண்டும் பாழாய்ப்போமே. (198)

போமென்ற அவிழ்தங்கள் கொள்ளும்போது
புகழான பத்தியந்தான் முறிவுகண்டா
லாமென்ற தேகத்துக் கசடில்லாமல்
அவுரிவேர் பிரமியிலை மிளகுங்கூட்டிப்
பாமென்ற கியாழம்வைத்து முப்பொழுதுகொள்ளு
பத்தியத்தின் முறிவெல்லாம் பாகமாகும்
ஆமென்ற பத்தியத்திற் புளிப்புக்கூட்ட
அறைகிறேன் புளிப்பாகம் வெள்ளைச்சாரணையே. (199)

சாரணையி னிலையரைத்துப் பழம்புளிமேற்பூசிச்
சார்வாகச் சுட்டதனை மேற்கவசந்தள்ளிச்
சாரணையா மருந்தினுட் போக்கறிந்து
சார்வாகக் கூட்டிவர உப்பைக்கேளு
சாரணையாம் வாதியென்றுற் கட்டிக்கொள்வா
னிலாவிட்டாற் சங்கினிலை பிருயிலையும்போட்டுச்
சீராவின் பால்தெளித்து வறுத்துக்கூட்டு
திறமான பத்தியமாந் தீருநோயே. (200)

இருமலுந்துச் சூரணம்.

தீருமே அத்தியிலே சூடுகொண்டால்
தீராத வரட்சியொடு இரைப்பிருமல்
தீருமே புகைச்சலொடு தொண்டைக்கம்மல்
சிணுக்கிருமல் நாக்கூறல் வரட்சிகோழை
கூருமே உளவரட்சி மூலச்சூடு
கூறரிய பித்தமொடு கனமேகங்க
ளாறுமே இவைகளெல்லா மோடிப்போக
அறைகிறேன் ஆடாதோடை கோஷ்டந்திப்பிலியே. (201)

திப்பிலியும் வசம்போடு நெல்லிமுள்ளிகடுக்காய்
சிறுவழுதலைவேரும் அரத்தைகடுக் காய்ப்பூ
கப்பரிய மிளகோடு நாகப்பூவகைக்குக்
காற்பலமே சேர்த்திடித்துச் சூரணமாய்ச்செய்து
வெப்பியே நாளொன்றுக் கந்திசந்தி
வெருகடியாந் தூளெடுத்து விளம்பக்கேளு
செப்பரிய நெய்தேனிற் குழைத்துக்கொள்ளச்
செப்பியதோர் நோயெல்லாம் தீரும்பாரே. (202)

காளகண்ட சூரணம்.

பாரேநீ பதினெட்டுக் குஷ்டம்போகப்
பாடுவேன் காளகண்ட சூரணகுமோரி
ஆரப்பா பரங்கிப்பட் டைபலமீராறு
அழிஞ்சல்சங்கங் குப்பியொடு கஸ்தூரிப்பட்டை
காரப்பா சிவன்வேம்பு பூவரசம்பட்டை
கருங்காலி விடத்தலையோ டாயிலியப்பட்டை
வேரப்பா கரந்தையொடு வகைக்கிரெண்டு பலந்தான்
மிஞ்சாதே ரசகர்ப்பூ ரம்பலந்தானென்றே. (203)

ஒன்றாக விவையெல்லாஞ் சேர்த்திடித்து
உத்தமனே வடிகட்டி வைத்துக்கொண்டு
குன்றான சேங்கொட்டை எட்டிக்கொட்டை
கொடுவேலி செஞ்சுகுரை கார்த்திகையின்கிழங்கு
பண்டான கொடிகள்வா லுழுவைவகைவகைக்குப்
பலம்பத்து நறுக்கியே குழித்தயிலம்வாங்கிப்
பன்றான தயிலமுஞ்சூ ரணமுமப்பா
பரிவாக வெவ்வேறே வைத்துக்கொள்ளே. (204)

கொள்ளவே சூரணத்தில் வெருகடிதூளப்பா
குழைத்திடுவாய் காசிடையே தயிலங்குத்தி
நள்ளவே நாளொன்றுக் கந்திசந்தி
நாற்பதுநாள் மண்டலமே கொள்ளும்போது
விள்ளாதே பதினெட்டுக் குஷ்டமெங்கே
விருதான மேகமொடு கிரந்திசூலை
கள்ளமாங் கரப்பனொடு வாதசூலை
கடிவிஷங்க ளுள்ளதெல்லாங் காணுதோடும்
கொள்ளவே குன்மமெட்டுங் குடிபோஞ்சொன்னோம்
கூரறிந்த பத்தியமாய்க் கொள்ளுவாயே. (205)

கொள்ளுவது பத்தியந்தான் குஷ்டநோய்க்குக்
கூறுவேன் பழம்புளியாங் கொறுக்காயாதல்
கொள்ளுவது புளியினுட கொட்டைபோக்கிக்
கூறாக இடித்ததனைப் பிசைந்துநன்றாய்த்
தள்ளாதே சாரணையின் சாறுவிட்டுச்
சார்வாக இடித்ததனைப் பிசைந்துகொண்டு
டள்ளபடி யெட்டிமரத் தடியிற்சென்று
உளிகொண்டு துளைத்ததனைக் குடவாய்பண்ணே. (206)

பண்ணியே புளியையதி னுள்ளேவைத்துப்
பரிவாக மேலுமந்தச் சிராயால்மூடி
யெண்ணியே யிருபத்து அஞ்சுநாட்சென்
றெடுத்துமே வைத்ததனைப் பத்தியத்திற்கூட்டு
வன்னியதாய்ச் சொன்னபுளி குஷ்டநோய்க்காம்
வன்னிப்பட்டைச் சாற்றிலுப்பு வறுத்துக்கூட்டு
எண்ணுகறி வெள்ளாடு கொண்டுவந்து
இலைக்கள்ளி திருகுகள்ளி சதுரக்கள்ளி. (207)

கள்ளியே சுற்றுழை யெருக்கோடிண்டு
கருஞ்சூரை கொடிக்கள்ளி அழிஞ்சியெட்டி
தெள்ளியே யிவையெல்லாம் கொண்டுவந்து
தினமேய்த்து எட்டுநாள் தின்றபின்பு
தெள்ளியே அதினுடைய கறிதான்கூட்டு
சிறுநீரில் புங்கம்பூ ஊறவைத்து
அள்ளியே மேற்கண்ட புண்ணுக்கெல்லாம்
அந்தநீர் தனைவார்த்துக் கழுவிப்போடே. (208)

போடவே குஷ்டமெல்லாம் பறந்துபோகும்
பொல்லாத ரோகமெல்லாம் பொடியாய்ப்போகும்
ஆடவே விளக்கெண்ணெய் தேய்த்துமுழ்கு
அபசார பத்தியங்கள் பண்ணவேண்டாம்
ஊடவே தீராத நோய்கட்கெல்லாம்
உன்னுடைய சிறுநீரில் ஒருசேர்கொள்ளு
போடவே மண்டலந்தான் கொண்டாயானால்
பொல்லாத விஷரோகங் குஷ்டம்போமே. (209)

மேககிஷாயம்.

போமென்ற தன்னுக்குள் மருந்தைவைத்துப்
பூமியிலே நீமருந்து தேடுவானேன்
ஆமென்ற தன்னுக்குள் அமுரியாலே
அற்றுப்போம் நோய்களெல்லாம் அறிந்துபாரு
போமென்ற மேகமென்ன பொல்லாரோகம்
போகவே உள்ளுலர்த்திப் பட்டைவாங்கி
ஆமென்று இடித்ததனை யமுரிவிட்டுப் பிசைந்து
அல்லாட்டால் வெந்நீரால் பிசைந்துகொள்ளே. (210)

கொள்ளவே நாளொன்றுக் கரைப்படிதான்போதுங்
　　குறிப்பாக மூன்றுநாள் கொள்ளும்போது
விள்ளவே மேகமொடு கிரந்திஅரையாப்பு
　　வெட்டையொடு பிறமேகம் மேகவாய்வு
கொள்ளவே வாதமொடு சூலைகுன்மம்
　　கொடிதான நோயெல்லாம் குடிபோம்பாரு
கொள்ளவே பத்யமென்ன இச்சாபத்யம்
　　குடிகெடுத்த புகையிலையும் புளியுந்தள்ளே. (211)

புளியோடு வாய்வென்ற பதார்த்தந்தள்ளு
　　புகழான உப்பதனை வறுத்துக்கூட்டு
எளிதான பத்தியந்தா னூறுநாளாம்
　　ஏழாநாள் தலைமுழுகி யெல்லாங்கூட்டு
ஒளியாதே வெள்ளாட்டுக் கறிகொழுப்பு
　　உத்தமனே போதரவா யுண்டுதேறு
களிப்பான மேகமொடு வாதம்வாய்வு
　　கால்முடக்கல் கைமுடக்கல் கடுப்புக்குத்தல்
மொளிப்பான திமிரோடு வாதமிஞ்சி
　　முடக்கினுல் சொல்லுகிறேன் புனலித்தண்டே. (212)

தண்டொடு திருகுகள்ளி சுடுதுத்தியோடு
　　தழுதாழை முடக்கொத்தான் வேப்பம்பட்டை
வென்றான சங்கோடு உத்தாமணி
　　வெண்ணொச்சி பரிகுழம்பு வெள்ளிண்டுபிரம்பு
பன்றான பதினொன்றும் வகைவகைக்குப்
　　பலம்பத்து நிறுத்திடித்துப் பாண்டத்திட்டு
அன்றான சலமதிலே பதினெட்டுமரக்கால்
　　அளந்துவிட்டு அடுப்பேற்றி யெரித்துக்காய்ச்சிக்
கன்றாதே சல்மாறு மரக்காலாகக்
　　காய்ந்தபின்பு வெதுபோல மேலேவாரே. (213)

வார்த்துமே வுள்ளுக்கு வொருசேர்கொள்ளு
　　மைந்தனே மேலில்விட்டுப் பிடிக்கச்சொல்லு
வார்த்துமே இப்படியே மூன்றுநாள்செய்
　　மைந்தனே ஆனைலத்தி ஓட்டைலத்தி
சேர்த்துவெள்ளாட் டின்புழுக்கை தேள்கொடுக்குகள்கொட்டித்
　　தேங்காய்ப்பூ வர்க்கம்பூ வுடனேயையா
வார்த்துமே வறுத்துநீ மூன்றுநாளொத்த
　　வாதமொடு மேகங்கே வாய்வுமெங்கே
ஆத்துமே அண்டவாய்வு விரைவாதமோடு
　　ஆகாத நோயெல்லா மகன்றுபோச்சே. (214)

போச்சென்ற பத்தியந்தா னென்றுமாகா
போக்கோடே யேழாநாள் வறுத்துப்புக்கூட்டு
போச்சென்ற வட்டாநாள் தலைநீர்வார்த்துப்
புளிகூட்டு இன்னுமொன்று புகலக்கேளு
ஆச்சென்ற திருகுகள்ளி கொண்டுவந்து
அப்பனே வரகுவைக்கோல் தன்னாலாட்டி
காச்சென்ற பிழிந்துதான் கள்ளிச்சாறு
கண்டிடைக்கு நல்லெண்ணெய் கூட்டிக்கொள்ளே. (215)

கொள்ளவே வாதமொடு வாய்வுசூலை
குறுக்குவலி முடக்குவலி குதிகால்வாதம்
உள்ளேகொள் மூன்றுநா ளுப்பில்லாதே
யுண்டிடுநீ யாறுநாள் பத்தியமேபண்ணு
விள்ளாதே மேகவெட்டை வெள்ளைகாணில்
விதமான பழம்பாசி கொண்டுவந்து
தெள்ளியே இடித்ததனை நீத்துப்பாக
ஜெலத்தைவிட்டுப் பிசைத்துநன்று யிறுத்துக்கொள்ளே. ()

வெள்ளைக்கு மருந்து.

இறுத்ததில்நற் சீரகமீ ருள்ளிரெண்டும்
இதமாக வகைவகைக்குக் கால்பலமேகூட்டி
அரைத்துமே கலக்கியதில் நல்லெண்ணெய்தானும்
அப்பனே சாறுகண்ட அளவிற்பாதி
நிரைத்துமே விட்டதனில் சொல்லக்கேளு
நேரான சர்க்கரைதான் கால்பலமேபோடு
முறைத்தப்பா இப்படியே மூன்றுகாட்கொள்
முதியவெள்ளை பிறமேக வெட்டைபோகுந்தானே. (217)

தானென்ற இன்னுமொரு சூட்சங்கேளு
சார்வான பழமிளகு முப்பத்திரண்டு
ஏனென்ற கொடிக்கள்ளிக் கொழுந்துதானும்
எலுமிச்சங் காயளவு கூடக்கூட்டி
வேனென்று அரைத்ததனை அந்திசந்தி
வேளைக்கு அரைக்கொட்டைப் பாக்களவுகொள்ளு
பானென்று மூன்றுநாள் கொள்ளத்தீரும்
பத்தியந்தான் பசுமோருஞ் சோறுமுண்ணே. (218)

மேகத்துக்கு.

உண்ணவே கைகண்ட வித்தைசொன்னேம்
உத்தமனே மேகவகை இருபதுதான்போக
பண்ணவே புங்கம்பூ படிதானென்று
பாங்கான சட்டியிட்டு அடுப்பிலேற்றி
ஒண்ணுதே ஆவினெய் ரெண்டுசேரு
உண்ணஉண்ண விட்டதனில் வறுத்துவாங்கு
நண்ணுத நெய்யெல்லாம் பூவிற்சோர
நன்றுகப் புரட்டியே வறுத்தெடுத்துத்
திண்ணமாம் உதயாதி தன்னிற்கேளு
தினமொன்றுக் கந்திசந்தி வெருகடிப்பூகொள்ளே. (219)

வெருகான புளியோடு புகையிலையுந்தள்ளு
வெள்ளாட்டு வற்றலொடு ஆவின்பால்நெய்
வெருகாக மிகுதியுமே கூட்டிக்கொள்ளு
மேகவெடி மேகப்புண் மேகசூலே
வெருகான பிறமேகம் வெட்டைதீரும்
மெய்யிதுவே கைகண்ட படிதான்சொன்னேம்
கருதான மேகங்கள் எல்லாம்போகக்
கஸ்தூரி யெண்ணெயொன்று கருதக்கேளே. (220)

கருதியெடுத் தோரண்ட வெண்ணெய்தானுங்
கலங்காதே ரெண்டரையே படிதான்காணுங்
கருதியே பழகியதோர் பாண்டத்தில்வாரு
கால்படிதா னீருள்ளிச் சாறுவாரு
கருதுவேன் பறங்கிப்பட்டை பலந்தானுலு
கஸ்தூரிப் பட்டையது விராகனேழு
வரிசையாங் கெருடனுட கிழங்குதானும்
வகையாகப் பலமெட்டு நிறுத்துக்கொள்ளே. (221)

கஸ்தூரி எண்ணெய்.

கொள்ளவே கஸ்தூரிப் பட்டைதன்னே
குளிர்தண்ணீர் தன்னிலே யூறப்போட்டு
அள்ளவே அரைத்ததனை யெண்ணெயிலேவார்த்து
அதின்பின்பு பறங்கிப்பட் டைஅரைத்துப்போடு
எள்ளவே கெருடனிட கிழங்குதன்னே
யீருள்ளிச் சாற்றிலை லரைத்துப்போடு
கொள்ளவே யிவையெல்லாம் வெவ்வேறேஅரைததுக்
குளிர்நீரில் கரைத்தந்த எண்ணெயிலேவாரே. (222)

வார்த்துமே அடுப்பேற்றிப் புளிவிறகுதவிர
மற்றுநீ யொருவிறகால் எரியமூட்டு
வார்த்துமே யெரித்ததனை மெழுகுபதம்பார்த்து
வடித்துநீ சுப்பிரம ணியர்பூசைபண்ணு
வார்த்துமே யெடுத்ததனை வைத்துக்கொண்டு
மைந்தனே யெண்ணெய்கொள்ளும் வகையைக்கேளு
வீத்துமே யெண்ணெய்கொள்ளு முதல்நாளப்பா
விளக்கெண்ணெய் தேய்த்துமே முழுகிப்போடே. (223)

முழுகியே மற்றுநாள் சொல்லக்கேளு
முனையான யெண்ணெயிலே அரைச்சேர்கொள்ளு
பழகியே சரீரபலம் பார்த்துக்கொள்ளு
பத்துவிசை பேதியாம் பதறுதேநீ
கழுவியே சுடுகஞ்சி வறுத்தவுப்புப்போட்டுக்
கூய்ச்சியே கொண்டிடவே பேதிநிற்கும்
நெழுகவே மறுநாளும் விளக்கெண்ணெய்தேய்த்து
நீராட்டிக் கறிபதார்த்தம் எல்லாங்கூட்டே. (224)

கூட்டியே பத்துநா ளாறப்போட்டுக்
கொள்ளிந்த முறைப்படியே எண்ணெய்தானும்
மூட்டியே மும்முறைதான் கொள்ளுகொள்ளு
முனையான மேகவகை யிருபதுமேபோகும்
ஈட்டியே யிந்தமுறை யாருஞ்சொல்லார்
என்னுணை நிசமாகக் கொண்டுபாரு
காட்டாதே இந்தஎண்ணெய் ஒருவருக்குங்
கைமுறையாய்ச் சொலவிவிட்டேன் கண்டுபாரே. (225)

அமுக்கராச்சூரணம்.

கண்டிடா யமுக்கராச் சூரணத்தைக்
கருகவே பலம்பத்து நிறுத்துக்கொண்டு
வண்டிடாய் வடிகொண்டு சூரணமேசெய்து
வால்மிளகு குரோசானி பறங்கிப்பட்டை
கண்டிடாய் கருஞ்சீர கம்கடுக்காய்சுக்கு
கடுகுரோ கணிவாலு மூலவையரத்தைதிப்லி
இண்டிடாய் வகைவகைக்குப் பலமேதூக்கு
இடித்ததனை முன்மருந்திற் சமனுய்ச்சேரே. (226)

சமனாகச் சீனியொரு நாலிலொன்று
சாரித்து வெருகடிதான் அந்திசந்தி
அமனாக ஆவின்நெய் சேர்த்துக்கொள்ளு
அரையாப்பு மேகவெடி கிரந்திகுஷ்டம்
எமனான வாயுவொடு கடிவிஷங்களெல்லாம்
ஏவிகடியும் சிலவிஷங்கள் பூரான்செய்யான்
கமனான மேகமொடு வாதபித்தம்
கழன்றுபோம் பத்தியந்தான் கண்டுகொள்ளே. (227)

சொல்லுவது கைப்போடு புளியுந்தள்ளு
கொள்ளவே மற்றவெல்லா மிச்சாபத்யம்
தள்ளாதே அப்பாகேள் ஆடாதோடை
சாற்றுவேன் லேகியமாய்ச் சகலநோய்க்கும்
கொள்ளவே தோடையது சமூலங்கொண்டு
குறிப்பாக நிழலுலர்த்திச் சூரணமேசெய்து
விள்ளாதே பலம்பத்து நிறுத்துக்கொண்டு
மிளகோடு கொத்துமல்லி அரத்தைசுக்கே. (228)

ஆடாதோடை லேகியம்.

சுக்கான அதிமதுரம் தாளிசபத்திரியும்
சுகமான இந்துப்பு பேரரத்தைகோஷ்டம்
நைக்கவே கருஞ்சீரம் கடுகுரோகணியும்
நாகப்பூ வாலுழுவை கிராம்புதேக்கு
எய்க்கவே விடையம்வகைக் கொருபலமேசொன்னோம்
இடித்துமே மூன்மருக்கிற் சமமாய்ச்சேரு
ஐக்கவே சீனியதில் நாலத்தொன்று
ஆவின்நெய் தேனதிலே யருந்தக்கேளே. (229)

அருந்தவே லேகியமாய்ப் பண்ணிக்கொண்டு
அந்திசந்தி கொட்டைப்பாக் களவுகொள்ளு
அருந்தவே சயபீனி மந்தாரகாசம்
அத்திசுரம் பித்தமொடு வாய்வுகாந்தி
அருந்தவே குத்திருமல் சிணுக்கிருமல்புகைச்சல்
ஆகாத புரட்டல்பித்தம் கிறுகிறுப்புவரட்சி
அருந்தவே குலையெரிவு குடல்புரட்டெல்லாம்போம்
அப்பாஇச் சாபத்யம் புளிப்புகைப்புந்தவிரே. (230)

காந்தைச் சூரணம்.

தவிரவே நற்கரந்தைச் சூரணத்தைக்கேளு
சார்வான கரந்தையது நிழலுலர்த்திப்
பவிரவே யிடித்ததனைச் சூரணமேசெய்து
பலம்பத்து நிறுத்தப்பாற் பகரக்கேளு
கவிரவே கருஞ்சீரம் கடுக்காய்தாணி
நல்வசம்பு திப்பிலியு மிளகிந்துப்பு
திவிரவே வாலுழுவை கோஷ்டஞ்சுக்கு
சிறுதேக்கு கார்போகி சித்ரமூலம். (231)

சித்திரமாய் வகைவகைக்குப் பலந்தானென்று
சேருரச கற்பூரம் பலமும்கால்தான
சித்திரமாய் யிடித்ததனைச் சூரணமேசெய்து
திகழ்கரந்தைச் சூரணத்திற் சமனாய்ச்சேரு
சித்திரமாய்ப் பனைவெல்லம் சர்க்கரையுந்தேனும்
சேர்த்துமே ஆவின்நெய் விட்டுக்கிண்டு
பத்திரமாய் நாளொன்றுக் கந்திசந்தி
பருங்கொட்டைப் பாக்களவு கொள்ளுகொள்ளே. (232)

நற்காந்தை லேகியம்.

கொள்ளவே குஷ்டமொடு கிரந்தியரையாப்பு
கொடிதான மேகவடி கரப்பானூறல்
மெள்ளவே நெஞ்சடைப்பு நடக்கல்மேனி
வெளுப்புபடர் தாமரையும் தழுதளையும்சூலை
கொள்ளவே பவுத்திரமும் புரைபுண்ணூருக்
குளுவாளை அழுகண்ணி அரிகிரந்திசொரியும்
தெள்ளியே ஆனைச்சொரி தவளைச்சொரிதேமல்
தீராத வெடிகரப்பான் தீருந்தானே. (233)

தீரவே சகலரோய் தீரக்கேளு
சீரகத்தோ டதிமதூரம் காமப்பூவும்
சாரமாம் கருஞ்சீர கம்சன்னலவங்கம்
சதகுப்பை வகைவகைக்குப் பலந்தானென்று
கூரவே சர்க்கரையும் ஆறுபலஞ்சொன்னோம்
கொத்துமல்லி பலமாறும் சமனாய்க்கூட்டிச்
சேருமே வகையென்ன பன்னிரண்டாச்சு
சீனிகற் கண்டுபலம் பன்னிரண்டாமே. (234)

சர்வநோய்க்கும் ஆறுவகைச்சூரணம்.

பன்னிரண்டும் வெவ்வேறே யிடித்துஒன்றாய்ப்
பாங்கான காசியென்ற மேருவிலேஅடைத்து
உன்னிபே வெருகடிதூள் அந்திசந்தி
யுடன்கொள்ளு ஒருநேரம் வெந்நீர்கொள்ளு
குன்றுது சரீரமது திடமதாகும்
சூலையெரிவு நெஞ்சுவலி நெஞ்சுதிடமாகும்
உன்னியே சிரசுநோ யெல்லாந்தீரும்
ஓடுமே பித்தமொடு புரட்டல்நீரால்
கண்ணில்நீர்ப் பாய்ச்சல்அறும் பிரகாசமாகும்
கலங்காது புத்தியதுன் மாதம்தீரும். (235)

தீருமே நித்திரையுஞ் சுகமுண்டாகும்
தீராத புழுக்கிருமி சேரப்போகும்
வாருமே யிடுப்புவலி கல்லடைப்பு
வாய்க்கோணல் வாய்க்குளறு மாந்தபித்தம்
தீருமே செவிநோயும் செவிடுஊமை
சேத்துமமும் பில்லியொடு வஞ்சனையுந்தீரும்
சாரிடுமே தொண்டைப்புண் கண்டமாலை
சரீரத்தில் நீர்க்கட்டும் சார்ந்துபோமே. (236)

அமிர்தாதி மாத்திரை.

போமென்ற அமிர்தாதி உண்டைகேளு
புகழாங்கோ ரோசனைசெண் பகப்பூக்கோஷ்டம்
வேமென்ற வெட்டிவேர் ஏலமதிமதுரம்
விதமாஞ்சாத் திரபேதி மாசிப்பச்சை
காமென்ற தாணிக்காய் வகைவகைக்குக்
களஞ்சிரெண்டு முகைப்பாலாற் கருதியாட்டு
ஆமென்ற திலாவிடடால் வெட்டிவேர்க்கியாழம்
ஆட்டியே கடலையள வுண்டைசெய்யே. (237)

செய்யிதுமே நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு
திறமான முகைப்பாலில் வெந்நீரிலிடவே
தைதுமே குடற்புரட்டு உஷ்ணங்காந்தி
தாபசுரம் பித்தசுரம் சார்ந்துபோகும்
பொய்துமே கணமாந்த மாந்தசன்னி
புழுக்கழிச்சல் போர்மாந்தம் கணவெட்டைசூடு
எய்துமே சிறுபிள்ளை நோயெல்லாந்தீரும்
இதமான அமிர்தாதி உண்டைசொன்னோம்
பொய்தவே காமாலை சோகைபாண்டு
போகவே சிந்தாதி புகலக்கேளே. (238)

சிந்தாதிலேகியம்.

புகலுகிறேன் புளியினிலை பலந்தானூறு
　　புகழான துருப்பிடித்த இரும்பதிலேபாதி
நிகலுகிறேன் முல்லைவேர் சாரணைவேர்
　　நெருஞ்சிவேர் தழுதாழை கண்டங்கத்ரி
செகலான கரிமுள்ளி கீழ்க்காய்நெல்லி
　　செம்முள்ளி வகைவகைக்குப் பலந்தான்பத்து
இகலுகிறேன் முன்மருந்தோ டொக்கச்சேரு
　　இவையெல்லா மிடித்தொரு பாண்டத்திட்டே. (239)

இட்டுமே யிருதூணி சலந்தான்வார்த்து
　　எரித்ததனை யெட்டொன்றாய் வற்றக்காய்ச்சிக்
கட்டுமே கிஷாயத்தை யிறுத்துவாங்கிக்
　　கரிசாலைச் சாறதிலே படிதானென்று
கொட்டியே பழச்சாறு படிதானென்று
　　கொமட்டிமா துளைச்சாறு படிதானென்று
நட்டுமே யீருள்ளிச் சாறுபடியொன்று
　　நல்லெண்ணெய் படியொன்று அதிலேவாரே. (240)

வார்த்துமே கொதிக்கையிலே மருந்துகேளு
　　வளமான விஞ்சியொடு தேவதாரம்
சேர்த்துமே செவ்வியம்திப் பிலியின்மூலம்
　　திரமான வகையொன்று பலம்பத்தாகக்
கார்த்துமே குரோசானி மிளகுதிப்லி
　　கருஞ்சீர கம்ஓமமிலவங்கப்பட்டை
வார்த்துமே கடுக்காயும் ஆவரைமொட்டரும்பு
　　வகைக்கோர்ப லம்பழங்கிட் டம்நாலுகூட்டே. (241)

கூட்டுமே யிவையெல்லா மிடித்துத்தூளாய்க்
　　கூறவே கியாழத்தில் போட்டுக்கிண்டு
ஊட்டுமே பனைவெல்லம் பலந்தானாலு
　　லோகசெந் தூரமது ரெண்டுபலம்போடு
வீட்டுமே ஆவினீர் கொஞ்சமப்பா
　　விட்டதனை லேகியமாய்க் கிண்டிக்கொண்டு
ஆட்டுமே நாளொன்றுக் கந்திசந்தி
　　அப்பனே நேரமொரு பாக்களவுகொள்ளே. (242)

கொள்ளவே பாண்டுகா மாலைசோகை
 சூத்தமலொடு பீனிசம் சுவாசகாசம்
கொள்ளவே யின்னவகை வியாதியெல்லாம்
 சூலைந்தோடச் சிந்தாதி லேகியந்தான்சொன்னோம்
கள்ளவே லேகியந்தான் கொள்ளும்போது
 கைப்போடு புளிபுகையுந் தள்ளுதள்ளு
வெள்ளாட்டு வற்றலாம வறுத்துப்புக்கூட்டு
 விளம்பினேன் சுராங்கிசமாத் திரையைச்சொல்லே. (243)

சொல்லியே தூதுவளை கண்டங்காலி
 துளசிதும்பை செருப்படியும் விஷ்ணுகாந்தி
செல்லவே விலாமிச்சை வேர்கோரைக்கிழங்கு
 சிற்றுமுட்டி பேராமுட்டி வேளைபேய்த்தும்பை
செல்லவே குமிழோடு பேராமல்லி
 சிறுகுமிழும் சித்தாமல்லி புனல்முருங்கை அவுரி
எல்லவே சொன்னதொரு வேருவகையெல்லாம்
 இடித்துமே வகைவகைக்குக் கழஞ்சுரண்டு
செல்லவே சிற்றரத்தை அதிமதுரங்கோஷ்டம்
 சிறுநாகப் பூவோடு கிராம்புதிப்பிலியே. (244)

திப்பிலியும் நிலவேம்பு தாணிக்காய்சுக்கு
 சீரகமுங் கருஞ்சீரகம் கடுகுரோகணியோமம்
ஒட்பரிய நில்விளா வேரிலவம்பிசினும்
 உத்தமனே வகைவகைக்குக் கழஞ்சிரண்டு
கப்பெரிய அவுரிச்சாறுடாதோடை
 கரிசாலை சிறுபுள்ளடி மிரியார்கூந்தல்
செப்பியே சாறஞ்சு சாமமஞ்சு
 சேர்த்தரைத்து உண்டைபண்ணி வைத்துக்கொள்ளே. ()

சுராங்கிசமாத்திரை.

வைத்துமே யிஞ்சிநீர் முகைப்பால்வெந்நீ
 ரிலலாவிட்டால் நொச்சிசுக்கு சங்கிலைச்சாறுதேனில்
உய்த்துமேஇத்தவகை அனுபானந் தன்னில்
 உத்தமனே நோயறிந்து ஒருவுண்டைகொள்ள
நைத்துமே சுரமெல்லாம் நாடாதோடும்
 நலமாகப் பத்திசுர மாந்தசன்னி
உய்த்துமே கனவேகம் வாதசன்னி
 உத்தமனே மாந்தபித்தம் துறப்பிருமலோடு
உய்த்துமே குளிர்சுரங்கள் ஊதுகணமாந்தை
 உப்பிசமும் போமென்று உரைத்தவாறே. (246)

வாறான கடுக்காயின் லேகியத்தை
வளமாகச் சொல்லுகிறேன் மக்காள்கேளும்
பாரான கடுக்காய்தான் கொட்டைபோக்கிப்
பலம்பத்துச் சிவதைவேர் பலந்தான்ரெண்டு
வாறான சரிசாலை பலந்தான்ரெண்டு
வல்லாரை புளியாரை வகைக்குரெண்டு
காரான நிலையாவரை பலந்தான்ரெண்டு
கருதியே பிடித்தொன்றாய்ச் சூரணமேசெய்து
சீரான கடுகுரோ கணிகிராம்பு
திப்லிசிறு நாகப்பூ வாலுழுவைசிங்கி. (247)

சிங்கியொடு கருஞ்சீரகம் மிளகுதாணி
சிறப்பான கொத்துமல்லி தாளிசபத்திரியும்
இங்கியே வகைவகைக்குக் காற்பலமேதூக்கி
இடித்துமே வடிகொண்டு முன்மருந்திற்சேரு
மங்கியே போகாமற் கவனமாக
மருந்திலே யுன்மனது தங்கவேணும்
தங்கியே யாவின்நெய் தேனும்விட்டுச்
சர்க்கரையும் போட்டுநீ லேகியமாய்ப்பண்ணே. (248)

பண்ணியே நாளொன்றுக் கந்திசந்தி
பருங்கொட்டைப் பாக்களவு கொள்ளுகொள்ளு
திண்ணியே தீரும்நோய் சொல்லக்கேளு
செலக்கட்டு மலக்கட்டு கோழைக்கட்டு
உண்ணவே உஷ்ணவாய்வு மேககரந்தி
உள்ளங்கால் கையெரிவு சூலையெரிவுபுரட்டல்
எண்ணவே மூலத்தில் சூடுகரந்தி
இளைப்பிருமல் புகைச்சலொடு வறட்சிசோகைதீரும்
எண்ணியே பத்தியமாய் உண்டுதேறு
இதைவிட்டாற் கற்பம்வே றுண்டோசொல்லே. (249)

இஞ்சிலேகியம்.

சொல்லவே இஞ்சிலே கியத்தைக்கேளு
தோல்போக்கிப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
மல்லவே பலச்சாற்று லாட்டிமைபோல்
மைந்தனே சட்டியிலே யிட்டுக்கேளு
அல்லவே சீரகமு மிளகோடேலம்
அதிமதுரங் திப்பிலியுங் கோஷ்டமூலம்
கல்லவே வாலுழுவை தாளிசப்பத்திரியும்
கடுகோடு கொத்துமல்லி சித்ரமூலம்
அல்லவே சிங்கியொடு குரோசாணிஓமம்
அப்பனே வகைக்குஅரைப் பலமேதூக்கே. (250)

நாக்குகரி சாலேபூ லாவும்பழச்சாற்றால்
    நிவளரைத்து முன்மருந்தோ டொக்கச்சேரு
ஊக்கமாம் பிரண்டையது மோரிலுப்பிட்டு
    உலர்த்திடித்து ஒருபலமே போடுபோடு
ஏற்கவே யிதுபோலே யாருஞ்சொல்லார்
    இதையறிந்து செய்பவனே வைத்யனாவான்
ஆக்கவே வங்காளச் சீனியப்பா
    அதிற்பாதி போட்டாவி னெய்யைவாரே. (251)

நெய்வார்த்து லேகியம்போற் பண்ணிக்கொண்டு
    நேரமொரு பாக்களவு அந்திசந்திகொள்ளு
பொய்யல்ல பித்தவாய்வு உஷ்ணகாந்தி
    புரட்டலசத்தி வலிகுன்மம் பித்தகுன்மம்
மெய்யான அத்திசுரம் சன்னிதோஷம்
    வீறான எரிகுன்மம் அசிர்ணவாய்வு
செய்யவே வுப்பிசமும் அரோசிகமுந்தீரும்
    தீபனமாம் பசியறிந்து சீராய்க்கொள்ளே. (252)

சீரான வாதமென்ன வைத்தியமென்ன
    செய்முறையோ டவிழ்தங்கள் செய்யவென்ன
பாரான பலநூலும் பார்க்கவேணும்
    பார்த்தறிந்து செய்கிற பாகம்வேணும்
கூறான சரக்குவகை யினமறியவேணும்
    குருவாசான் கைதொட்டுக் காட்டவேணும்
சார்வாக விதைவிட்டு முறைதப்பாய்ச்செய்து
    சாஸ்திரம்பொய் யென்பார்கள் சண்டாளர்தாமே. (253)

பொய்யென்று சாஸ்திரத்தைச் சொல்வானாகில்
    புழுவான பாழ்நரகில் வீழ்வான்பார்வி
மெய்யென்று குருபதத்தைத் தொண்டுபண்ணி
    வேதாந்தம பலநூலும விரித்துப்பார்தனுக்
கைமுறையுங் குருமுகமாய்க் கண்டுதேறக்
    கற்றவரை வணங்கியே சொலலக்கேட்டுப்
பொய்மறந்து மெய்யுகந்து அறிவிற்கூடிப்
    பூரணமே தெய்வமெனறு போற்றிநித்தம்
தூய்யவனே முறையோடே செய்துபாரு
    தொட்டதொரு வித்தையெல்லாம் பலிக்கும்பாரே. (254)

பூநீறு வகை.

பலிக்கவே கருவென்ன பூமிநாதம்
பாங்கான வாதமொடு வைத்தியமுஞ்செய்யும்
பலிக்கவே சொல்லாமல் மறைத்தார்சித்தர்
பாடினார் சாஸ்திரத்தில் முன்பின்னாகப்
பலிக்கவே சொல்லுகிறேன் பூநீற்றைவாரி
பத்துமுறை சுத்தசலம் தெளித்துக்காய்ச்சிப்
பலிக்கவே குருவாக வைத்துக்கொண்டு
பாடியதோர் வைத்தியத்தில் பாகங்கேளே. (255)

பாகமாந் தைலங்கள் வடிக்கும்போது
பாங்கான வடிகலசங் கழஞ்சிகுருப்போடு
பாகமாம் கட்டினமு முருக்கினமும்பஸ்பம்
பாங்கான லேகியங்கள் செந்தூரங்கள்
பாகமாங் குருவதிலே சேர்த்துப்பண்ணு
பாங்கான வைத்தியந்தான் திரமோமெத்த
ஆகமா மித்தைவிட்டால் வாதம்பொய்யாம்
ஆகாசப் பரிதியுப்பு வேகந்தானே. (256)

தானென்ற விதினாலே வெடியுப்பாச்சு
சத்தியுட நாதமென்ற கெந்திசேரில்
ஆமென்ற அண்டரண்ட முருகிப்போச்சு
அரசர்கெடி கற்கோட்டை யிடியலாச்சு
போமென்ற காரமென்ன வெடியுப்பாச்சு
புகழான சாரமென்ன நவச்சாரமாச்சு
ஆமென்ற சாரகார மிரண்டுஞ்சேரில்
அறுபத்து நால்சரக்குங் கட்டிப்போச்சே. (257)

போச்சென்ற காரம்விட்டால் காரமில்லே
புகழான காரம்விட்டால காரமில்லே
ஓச்சென்ற காரத்தின் மகிமையென்ன
ஒன்பதுநீர் சாரமொரு நவச்சாரமாச்சு
தேச்சென்ற காரத்தின் மகிமைசொல்லத்
சித்தர்முதல் ரிஷிகளால் முடியாதப்பா
ஆச்சென்ற ராமதேவர் சாரந்தொட்டு
ஆடினா ரேழுயுகம் வாதம்பார்த்தார். (258)

பார்த்திட்ட காரமென்ன உப்புஉப்பு
பாங்கான உவருப்பு மண்ணுவாரி
வேத்திட்ட மும்முறைதான் காய்ச்சுவார்கள்
வெடியுப்பாங் கடையில்விற்கும் கடுங்காரமில்லை
ஆத்திட்டு வாதமுறை செய்யவென்றால்
அந்தவுப்பை வாங்கியுதில் கரைசலத்தில்
வார்த்திட்டு அடுப்பேற்றிக் காய்ச்சியுப்பு
வளருமந்தப் பதமறிந்து மறுபாண்டம்வாரே. (259)

வார்க்கவே கம்பிபோல் வளருமுப்பு
மறுத்துமந்த உப்பிலே சுத்தசலம்விட்டுப்
பார்த்துமே யடுப்பேற்றி யெரித்துக்காய்ச்சிப்
பதமறிந்து மறுபாண்டத் தெடுத்துவாரு
பூர்த்துமே கருவென்ன பழச்சாறுமோரு
புளிக்குற்று மாப்போலே கொஞ்சம்வாரு
ஆர்த்துமே பொங்கியது வளர்ந்துஓங்கி
அதிமதுரம் வெடியுப்புக் கடுங்காரமாச்சே. (260)

வேடியுப்புசேயநீர்.

காரமா யிந்தஉப்பு வேதைக்காகும்
கடைதனில்மூன் றுங்காய்ச்சல் கருமருந்துக்காகும்
காரமாம் வெடியுப்பைச செயநீர்செய்யில்
கருதியே சரக்கெல்லாங் கட்டிக்கொள்ளும்
பாரமாம் வாதத்துக் காதிஉப்பு
பார்த்திட்டார் சித்தரெல்லாம் வேதைகோடி
ஆரமாம் வெடியுப்புச் செயநீர்கேளு
அறைகிறேன் ஆறுநீர் விவரந்தானே. (261)

விவரமாம் வெடியுப்பு அஞ்சாங்காய்ச்சல்
விளங்கவே பலம்பத்து நிறுத்துக்கொண்டு
கவரமாஞ் சீனமது பலந்தான்ரெண்டு
கண்டாது பலமிரண்டு சூடன்ரெண்டு
இவரமாங் கடல்நுரையும் பலந்தான்ரெண்டு
ஏறலென்ற சிப்பியது பலந்தான்ரெண்டு
அரவமாம் வெடியுப்போ டொக்கச்சேர்த்து
அப்பனே கல்வத்தில் அரைக்கக்கேளே. (262)

அரைக்கவே அமுரியிலே பூநீறிட்டு
அத்தெளிவு மண்டவெள்ளைக் கருவுங்கூட்டி
உரைத்துமே அரைத்துபில்லை ரவியிற்காய்ந்து
ஒட்டிவிட்டு மேலோடு கொண்டுமூடி
நிறைந்துமே சீலைசெய்து முழப்புடத்திற்போடு
நீறியது சுன்னமாய் நில்க்கும்பாரு
குரைத்துமே சுன்னத்தில் நவச்சாரம்பாதி
கூட்டியே பொடிபண்ணிப் பீங்கானில்வையே. (263)

வைத்துமே நாழிவாய்ச் சட்டியிலேகேளு
வளையம்போற் சாணியிட்டுத் தண்ணீர்வார்த்து
ஐத்துமே பீங்கானை யதிலேவைத்து
அசையாமல் மேற்சட்டி கவிழ்த்துமூடிக்
குய்த்துமே காற்றில்லாக் குளிர்விடத்தில்
குழிவெட்டி மணலிட்டுத் தண்ணீர்வார்த்து
மெய்த்துமே குழியிலிந்தச் சட்டிவைத்து
மேலேஒரு தாருகொண்டு மூடிப்போடே. (264)

மூடியே பட்சத்தி லெடுத்துப்பாரு
முசியரதே புஷ்டியற்றுச் சலமாய்நிற்கும்
ஆடியே செயநீரைக் குப்பியிலேவாங்கு
ஆத்தாட்கும் வடுகனுக்கும் பூசைபண்ணு
வாடியே செயநீரில் வீரம்பூரம்
வகைக்குஒரு வராகனிடை பொடித்துப்போடு
பாடியே பாஷாண மறுபத்துநாலும்போடு
பரிவான லவணவகை யிருபத்தஞ்சும்
ஊடியே கட்டினமு முருக்கினமுமாகும்
உபாசங்கள் சத்தாகு மெழுகுமாமே. (265)

மெழுகாகுஞ் சரக்கெல்லாந் தனித்தனியேகட்டும்
வேகையிட வெகுதூர மெட்டியோடும்
மெழுகாகு நவலோக மெல்லாநீறும்
விட்டாட்டச் சூதமது வெண்ணெய்போலாந்
தழுகாகுஞ் சூதவெண்ணெய் வேதைபாரு
சாரணைதான் செய்குளிகை கெவுனமாகுங்
கழுவான வாதமொடு வயித்தியந்தான்ரெண்டுங்
கருதியே சூஸ்திரத்தில் கலந்தேநன்றாய்ப்
பழுதில்லா நவமணிகள் சோத்திட்டாப்போற்
பாகமாய்க் கைமுறையாய்ப் பாடினேனே. (266)

எமசண்டமாருதக்குடோரி.

பாடுகிறேன் எமசண்ட மாருதக்குடோரி
பார்த்திட்டால் நோயெல்லாம் பறந்துபோக
நீடிவெள்ளைப் பாஷாணஞ் சிலையும்லிங்கம்
நெறிவிஷமு மரிதாருங் கெவுரிதத்தஞ்
சூடியே வெண்காரம் வீரம்பூரஞ்
சுத்தமொடு பன்னிரண்டும் வெவ்வேறாகக்
காடியே வெடியுப்புச் செயநீராலே
காட்டியே வகைவகைக்குக் கழஞ்சுகொண்டே. (267)

கழஞ்சுரெண்டு அப்ரேக நவநீதந்தான்
கட்டியதோர் கெந்திரண்டு குருவும்ரெண்டு
வழஞ்சியே யிவையெல்லாங் கல்வத்திட்டு
வறக்கும்பால் பிள்ளடிச்சாறு மூருக்கிலைச்சாறு
பழச்சாறு தழஞ்சியே நூல்தாமரைச்சாறு
கற்றாழைச் சாறசம் பட்டைச்சாறுநாவற்பட்டைச்சாறு
உழஞ்சியே காந்தைச்சாறு ஊசிமல்லிகைச்சாறு
உத்தாமணி யோடவுரி மேனிச்சாறும்
அழஞ்சியே வெடியுப்பு நீருங்கேளு
ஆட்டுநீ சாறென்று சாமமொன்றே. (268)

சாமந்தான் பனிரண்டு ஆட்டிவில்லை
சாதகமாய்க் கட்டியே ரவியுலர்த்திச்
சேமென்ற வோட்டிலிட்டு மேலோடுமூடிச்
சீலைசெய்து முழப்புடத்தில் செந்தூரமாகுங்
காமென்றே யெடுத்ததனைக் கல்வத்திட்டுக்
காந்தசெந் தூரமொடு லோகசெந்தூரந்
தாமென்ற காரியம்வெள் ளீயச்செந்தூரந்
தாம்பிரசெந் தூரமொடு நாகசெந்தூரமாமே. (269)

செந்தூரம் வகைக்கிரண்டு கழஞ்சிடைதானையா
சிறப்பான கஸ்தூரி கழஞ்சிரெண்டு
சுந்தரமாஞ் சுத்தித்த வாளம்ரெண்டு
சுத்திசெய்த கருநாவி கழஞ்சிரெண்டு
சந்திரமா மியானைத்திப் பிலியின்மூலங்
கருஞ்சீரஞ் சதகுப்பை சித்ரமூலம்
மந்திரமாந திரிகடுகு கிராம்புகோஷ்டம்
மாவிலிங்கு முருங்கைவேர் எருக்கம்வேரே. (270)

எருக்கோடு விலாமிச்சங் கோரைக்கிழங்கு
மிவையெல்லாம் வகைவகைக்குக் கழஞ்சிகூட்டி
அருக்கோடு சேரவே கல்வத்திட்டு
அரைக்கவே சாறுவகைக் கியாழங்கேளு
சுருக்கோடு தூதுவளை கண்டங்காலி
தும்பைபேய்த் தும்பையொடு துளசிகாந்தி
பெருக்கான சித்தமல்லி பேராமல்லி
பெருகுமிழுஞ் சிறுகுமிழும்புனல்முருங்கைவெண்ணொச்சி.

நொச்சியொடு சிற்றாமுட்டி பேராமுட்டி
நோக்கரிய குருந்தொட்டி மூக்காவேளை
கச்சியே மிவையெல்லா மிடித்துக்கொள்ளு
கஷாயந்தா னெட்டொன்றாய்க் காய்ச்சிவாங்கி
அச்சியே கஷாயத்தால் நாலுசாமம்
அவுரிச்சாறு கரிசாலை குமரிச்சாறும்
திச்சியே மேனிச்சாறு பிரமிச்சாறும்
செப்புவே னிவ்வயெல்லாஞ் சேர்த்துக்கொண்டு
அச்சியே சாறுவகை சாமமெட்டு
அரைத்திடவே பன்னிரண்டு சாமமாகும்
உச்சிதமாங் கணபதியைப் பூசைபண்ணு
உழுந்தளவு உண்டைசெய்து நிழலுலர்த்தே. (272)

உலர்த்தியே நோயறிந்து அனுபானஞ்செய்து
உத்தமனே ஒருஉண்டை அனுபானத்தில்
தலர்த்தியே ஒருஉண்டை கொள்ளும்போது
சனனிவகை தொண்ணூற்று ஆறுமெங்கே
அலர்த்தியே பதினெட்டுச் சுரதோசமெங்கே
அசையாத வாதபித்த சிலேற்பனந்தானெங்கே
துலர்த்தியே யெட்டுவகைக் குன்மமெங்கே
தொலையாத வாயுவெங்கே வாதமெங்கே. (273)

எங்கேபோம் சயமீளை மந்தாரகாசம்
ஏத்தரிய வுட்சூத்துப் புறவீச்செங்கே
தங்காது முயல்கண்டன் குமரகண்டன்
தனுர்வாதம் காக்கைவலி குதிரைவலிமாந்தம்
மாங்காத பதினெட்டுக் குஷ்டம்சூலை
வாயுவொடு கிரந்தியரை யாப்புக்காசம்
தங்காது கெற்பநோய் சூதகவாய்வு
தரியாது பெருவயிறு பீலியுளமாந்தை. (274)

மாந்தையாம் விரைவாதம் அண்டவாதம்
மாரடைப்பு வரள்வாய்வு அந்தரவாய்வு
மாந்தையாம் ருத்திரவாய்வு மூலவாய்வு
மந்தார நிலகாசம் ருத்ராகாசம்
தாந்திரிகச் சன்னியொடு கெம்பீரச்சன்னி
சத்தபித்தங் காமாலை பாண்டுசுகசன்னி
மாந்தையே நோயெல்லாம் வாராதோடும்
மகாவேம சண்டமா ருதக்குளிகையென்னே. (275)

என்னவே அப்ரேகச் செந்தூரங்கேளு
இதமான கிஷ்ண அப்பி ரேகம்நன்று
தன்னயமாய் வாங்கியதைக் காய்ச்சிக்காய்ச்சி
நலமான ஆவின்பால் தன்னில்தோய்த்துச்
சன்னவே கரிசாலை பொற்றலையின்மேனிச்
சாறதனில் காய்ச்சியே தோய்த்துநன்றாய்
வென்னவே சுத்திசெய்து நவநீதம்பண்ணி
மேனியிட சாறுவிட்டு ஒருசாமமாட்டி
உன்னியே வில்லைதட்டி உலரவிட்டு
ஓட்டிலிட்டு மேலோடு கொண்டுமூடே. (276)

மூடியே முழப்புடத்தி விட்டுவாங்கு
முசியாதே ஆட்டிமுன்போல் புடத்தைப்போடு
மூடியே மேனியிலே புடந்தான்பத்து
முள்ளங்கிச் சாற்றிலே புடந்தான்பத்துப்
போடவே பொற்றலையின் சாற்றிற்பத்துப்
பொன்காணிச் சாறுபத்துக் கதலிச்சாறுபத்து
நீடவே மல்லிகைச்சாறு மணத்தகாளி
நீர்முள்ளி முருக்கிலைச்சாறு கற்றாழைச்சாறு
ஆடலே அவுரிச்சாறு முசுமுசுக்கைச்சாறு
அப்பனே ஒவ்வொன்றிற் புடந்தான்பத்தே. (277)

பத்தென்ன முன்போலே அரைத்துப்போடு
பதறாதே யழுக்கறு திண்ணங்கேளு
வித்தென்ன குருவதிலே கேளுகேளு
வெடியுப்பு நீராலே சாமமாட்டி
நைத்துமே வில்லைதட்டிக் காயவைத்து
நலமாக முன்போலே புடத்தைப்போடு
ஐத்துமே யெடுத்துப்பின் செயநீராறே
ஆட்டியே முன்போலே புடத்தைப்போடு
ஐத்துமே இப்படியே பத்துமுறைபோடு
அம்மம்மா வெடியுப்புச் செயநீர்வேகம்
கைத்துமே போகாது அழுக்கிராது
கசடில்லா தப்ரேகம் செந்தூரமாமே. (278)

செந்தூரஞ் சோதனைதா னறியவேண்டிற்
செலத்தையொரு சட்டியிலே யிட்டுமேலே
செந்தூரம் பணவிடைதான் செலத்திற்போட்டுச்
சிறக்கவதின் மேலேயோ ருளுந்தைப்போடச்
செந்தூரம் உளுந்ததனை தாங்கிற்றானல்
செயமாகு மில்லாவிட் டாற்பின்புகேளு
செந்தூரந் தனையெடுத்துக் கல்வத்திட்டுச்
சிறப்பாக ஆட்டிமுன்போல் புடத்தைப்போடே. (279)

போடவே அப்ரேகச் செந்தூரமகிமை
புகலுதற்கு நாவுண்டோ யாவுண்டோசொல்
வாடவே வெடியுப்புச் செயநீர்விட்டால்
மற்றொன்றி லப்ரேக மழுக்கறுது
கூடியே யழுக்கிருந்தா லுடலில்தங்கும்
குடிகெடுக்கும் அரோசிகம்நோய் குணமாகாது
தேடியே செந்தூரம் திறமாய்ச்செய்து
தின்றிடிலோ நோயேது செப்பக்கேளே. (280)

சூத செந்தூரம்.

செப்பரிய சூதசெந் தூரங்கேளு
திறமான சூதமது பலந்தான்பத்து
ஒப்பரிய கெந்தியது ரெண்டரையேபலந்தான்
ஓட்டிவிட்டுக் கெந்தகந்தா னுருகும்போது
மப்பெரிய சூதத்தைக் கொட்டிக்கிண்டி
மணல்போலே ஆகுமதைக் கல்வத்திட்டு
அப்பெரிய விட்டுசெம்பைச் சாற்றால்சாமநா
லரைத்துமே பொடியாக்கிக் குப்பிக்கேற்றே. (281)

ஏற்றியே வாலுகையின் மேலேவைத்து
எரித்திடுநீ தீபம்போல் மூன்றுசாமம்
ஆற்றியே மறுபடியு மரைத்துமுன்போல்
அப்பனே வாலுகையி லெரித்துவாங்கு
போற்றியே மறுபடியுங் கல்வத்திட்டுப்
புகழான முன்சாற்று லாட்டித்தூளாய்
ஆற்றியே குப்பிக்கு அரைவாசியிட்டு
அப்பனே வாலுகையில் தீயைமூட்டே. (282)

மூட்டியே தீபம்போல் மூன்றுசாமம்
முறையாக வெரித்திடவே கருவைக்கேளு
போட்டியே தாளகந்தான் புலமும்ரெண்டு
பொடிசெய்து வைத்துநீ கொஞ்சங்கொஞ்சம்
ஆட்டியே குப்பியிலே போட்டுப்போட்டு
அப்பனே கிண்டிவா சலாகையாலே
தீட்டியே அடியிலே மருந்தில்லாட்டால்
சீரான பதமென்று அடுப்பைஆற்றே. (283)

ஆற்றவே செந்தூரம் அருணன்போலா
மப்பனே தேங்காய்போ லிருக்கும்பாரு
தேற்றியே தாளகந்தான் போடாவிட்டால்
சிவக்காது மயில்கழுத்து வர்னம்போலாம்
பார்த்துமே ஆத்தாளைப் பூசைபண்ணிப்
பணவிடைதான் செந்தூரம் பனைவெல்லத்தில்
ஆத்துமே வுள்ளுக்குக் கொண்டாயானால்
அரையாப்புக்கிரந்திகுஷ்ட ரோகம்போமே. (284)

போமென்ற பத்தியமா யுண்டுதேறு
பொல்லாத குன்மமொடு வாயுசூலை
தாமென்ற மேகவடி தமுதணையும்சூலை
தவளைசொரி வெண்குஷ்டம் அழுகண்ணிகரப்பான்
நாமென்ற நோயெல்லாம் நாடாதோடும்
நல்லதொரு செந்தூரம் தனைமடக்கி
ஆமென்று அரைத்துமுன்போல் தங்கஞ்சேர்த்து
ஐந்துதரம் வைத்தெடுக்க அருணனாமே. (285)

அருணனாஞ் செந்தூரம் வேதையிட்டால்
அழகான நவலோகம் பத்துமாற்று
மருணனும் வாதத்தில் சித்தரெல்லாம் (னேன்
வைத்துவைத்த கருவையெல்லாம் வெளியாய்ச்சொன்
கருணமாங் குருமுடிக்க வகையுஞ்சொன்னேன்
கருவாளி யானக்கால் கண்டுபாரு
தருணமாம் வைத்தியத்தில் முறைதப்பாமல்
சாற்றினேன் நிசமாகும் சார்ந்துபாரே. (286)

மகா திராவகம்.

பாரப்பா மகத்தான திராவகத்தைப்
பாடுகிறேன் மாணுக்கா புரிந்துகேளு
மாரணமாம் நோயெல்லாம் மாண்டுபோக
மகத்தான சரக்கெல்லாம் கட்டிப்போகக்
காரணமாம் சித்தரெல்லாம் மெச்சிக்கொள்ளக்
கைமுறையாய் ரசவாதம் கைக்குள்ளாக
நாரணமாம் நாயுருவி குப்பைமேனி
நலத்தாளை நாணல்தென்னல் கதலியென்னே. (287)

கதலியா மூருங்கைகொடு வேலிதுத்தி
கருமத்தை கொடிக்கள்ளி திருகுகள்ளியெருக்கு
வதலியே வெவ்வேறே சுட்டுச்சாம்பல்
வகைக்குநால் படியளந்து பாண்டத்திட்டுக்
கதலியே யானைநீர் குதிரைநீரும்
கழுதைநீர் ஒட்டகைநீர் மனுஷனீராம்
முதலியநீர் தன்னோடு இன்னஞ்சொல்வேன்
முற்றுமதைத் தெரிந்துணர்ந்து செய்நீராமே. (288)

நீரான ஆவினீர் வெள்ளாட்டுநீரும்
நிலையாகக் கலந்தொன்றாய்ச் சொல்லக்கேளு
சாரான சாம்பலுக்கு ரெட்டிவாரு
சாதகமாய்க் கலக்கியந்தத் தெளிவைவாங்கி
ஆறாக அடுப்பேற்றி யெரித்துக்காய்ச்சி
அப்பனே ரவியிலுப்பாம் வகைவகைக்குப்
பூராக வகைக்குரெண்டு பலந்தான்சொன்னோம்
பூநீறு காய்ச்சியுப்பு ரெண்டுபலம்போடே. (289)

பலமான கல்லுப்பு வளையலுப்பு
பரையுப்பு வெடியுப்பு சவுட்டுப்போடு
கலமான விந்துப்பு அட்டுப்போடு
கறியுப்பு வகைவகைக்குப் பலந்தான்ரெண்டு
கலமான நவச்சாரம் சூடசீனம்
காட்டுநல சாரமுடன் அன்னபேதி
குலமான விவையெல்லாம் வகைக்கிரண்டுபலமாம்
கூறரிய வெடியுப்பு இருபத்தஞ்சே. (290)

அஞ்சோடு சினமது இருபத்தஞ்சு
ஆகவே வகையெல்லாம் பலம்நூறுச்சு
தன்சாறு மேனிச்சாறு நாயுருவிச்சாறு
தனிலரைத்துச் சணலவிரைபோல் வில்லைசெய்து
அஞ்சாதே ரவிதனிலே உலரச்செய்து
அஞ்சுபங் கிட்டதனைப் பாண்டந்தன்னில்
அஞ்சாதே ஒருபங்கு மருந்தெடுத்து
அரைவீசி யிட்டும்ம அறையக்கேளே. (291)

அறைகிறேன் சக்கிரமாம் பாலைச்சட்டி
அதுமேலே சந்துவாய் பொருந்தமூடி
வறைகிறேன் சந்துவாய்ச் சீலைசெய்து
வாலுகையி னடுப்பேற்றி யெரியைமூட்டி
வறைகிறேன் தீரா ரோகம் வருகும்வாங்கும்
வகைகேளு அடுப்பேபாம வனைந்துசாணி
பிறையான சாணியின்மேல் சலாகைவிட்டுப்
பீங்கானுங் கண்ணியதின் மேலேவைத்து
முறையான சக்கிரமாம் பாலைச்சட்டி
முகந்தந்தப் பீங்கானில் முகம்நோக்கிவையே. (292)

வைக்கவே பூந்திமுந்தி வெள்ளைநீர்தான்
வருமப்பா வாங்கியதை வீசிப்போடு
நைக்கவே இவந்தநீர் பின்வருகும்மகனே
நலமான நீரதனை வாங்கிநீயும்
ஐக்கவே மறுபங்குச் சரக்கிலூட்டி
அரைத்துமே வில்லைதட்டிக் காயவைத்து
தைக்கவே முன்போல பாண்டத்திட்டுச்
சக்கரமாம் பாலைதனை மேலேமூடே. (293)

மூடியே அடுப்பேற்றி எரித்துநன்றாய்
முன்போலே திராவகத்தை வாங்குவாங்கு
ஆடியே மறுபங்குச் சரக்கில்ஊட்டி
அப்பனே முன்போலே அரைத்துக்கட்டிச்
சாடியே முன்போலே பாண்டத்திட்டுச்
சக்கரமாம் பாலைகொண்டு மேலேமூடிப்
போடியே அடுப்பேற்றி எரியைமூட்டு
புகைபட்டால் சடம்விரியும் பின்பாய்கில்லு
நாடியே தூமமுகம் விளக்குநின்று
நலவான திராவகத்தை வாங்குவாங்கே. (294)

வாங்கியே மறுபங்கி லிப்படியேவாங்கு
வாகாக இப்படியே ஐந்துதரம்வாங்கு
தேங்காதே ஆத்தாட்கும் வடுகனுக்கும்பூஜைச்
செய்துமே அரக்கென்ற குப்பியிலேஅடைப்பாய்
ஓங்கியே மற்றொன்றி லடைத்தாயானால்
உருகிப்போம் கல்லுமுதல் நவலோகமெல்லாம்
வாங்கியே நாதாக்கள் பாதம்போற்றி
வாதமொடு வயித்தியமுன் கைக்குள்ளாச்சே. (295)

ஆச்சென்ன விபரமென்ன வென்றுகேட்டால்
அப்பனே யெட்டுவகைச் சூலைகுன்மம்
ஆச்சென்ற வலிவாய்வு உதிரவாய்வு
அந்திரவாய்வு சூலைமுட்டி ருத்திரவாய்வு
நீச்சென்ற தமர்வாய்வு பித்தவாய்வு
நீராமை கவுசிகெண்டை மகோதரம்பேராமை
தோச்சென்ற பெருவயிறு காமாலைபாண்டு
சூசிகவாய் வொடுப்பசம் வாதந்தானே. (296)

தானென்ற அந்தந்த வியாதிகட்குச்
சாற்றியதோர் அமிழ்தத்தில் தராபோகங்கூட்டு
கூச்சென்றே யில்லாவிட்டால் அனுபானமறிந்து
கொண்டிடவே நோயெல்லாங் கும்பிட்டோடும்
வேச்சென்ற பாஷாணம் அறுபத்தினாலும்
மெழுகாகும் உபசரங்க ளிய்யமாகும்
கோச்சென்ற நவலோக மெல்லாநீரும்
கொள்ளையோ கொள்ளையிதில் வாதந்தானே. (297)

சாரக்கட்டு.

வாதமாங் கல்வத்தில் சேரைசூதம்
வார்த்துமே திராவகத்தில் மஞ்சாடிகுற்ற
வேதமாஞ் சூதமது வெந்துநீறும்
வேதையிதில் வெகுதூர மெட்டியோடும்
சூதமாம் நவச்சாரக் கட்டிவாங்கித்
தோய்த்துமே திராவகத்தில ரவியிற்போட
நாதமாம் சாரமது கட்டிப்போகும்
நாதாக்க ளாட்டிடெல்லாம் சாரத்தாலே
போதமாம் கட்டியதோர் நாகந்தன்னைப்
போட்டிடவே நாகமது கட்டிப்போமே. (298)

கட்டியதோர் நாகத்தில் லோகஞ்சேரில்
 கண்கொள்ளா வேதையிது கண்டுபாரு
திட்டமாய் நவலோக நவரத்னங்கள்
 திராவகத்தில் தோய்த்துமே ரவியிலிட்டு
நாட்டியே புடம்போட நீறிப்போகும்
 நலமான மால்தேவி சிலையும்லிங்கம்
திட்டமாய் வீரமொடு பூரஞ்சீனம்
 சிறப்பான கெந்தியொடு கெவுரிகூடன்
தட்டியே பாஷாணம் அறுபத்துநாலுந்
 தனித்தனியே கட்டியது மெழுகுமாமே. (299)

மெழுகாகும் ஒவ்வொன்றில் வேதைகோடி
 விரித்துநான் சொல்லவென்றால் பனையோலையில்லை
அழுகாதே புத்திமான் நீயேயானால்
 அலையாதே பன்னூலும் பார்த்துப்பார்த்து
விழுகாதே கசந்தனிலே யிப்போல்மைந்தா
 விருதான விந்நூலை விரைந்துபாரு
சுழுகாக வாதமுதல் வயித்யமும்தேறும்
 சுணங்கலாய்த் திரிந்திட்டால் நான்செய்வதென்னே. (300)

வாதக்கரு.

செய்வதற்கு வாதத்தின் கருவைக்கேளு
 செப்பாதே துரிசியத்தில் விந்துநாதம்
செய்வதென்ன பூமியுட நாதமொன்று
 சிறப்பான பிரமகற்பம் கல்லுச்சுன்னம்
பைவதென்ன பாறையாங் கல்லுப்பொன்று
 பாங்கான அண்டமொன்று பிண்டமொன்று
தைவதென்ன பஞ்சபூத மஞ்சுமாச்சு
 தன்னுக்குள் பயனறிந்தால் குருவுமாச்சு
உய்வதென்ன பயனென்ன சாரகாரம்
 உரையாமல் சித்தரெல்லாம் ஒழித்திட்டாரே. (301)

ஒழித்திட்டே பலபலவாய்ச் சொன்னாரையோ
 உட்பொருளை அறியாமல் அலைந்தார்வாதி
அருத்திட்டு அண்டபிண்டம் ஆதியந்தம்
 ஆகாசம் அடிமுடியும் துரியாதீதம்
அழித்திட்டுச் சாகாது வேகாதெல்லாம்
 அடங்கிநின்ற பொருளென்ன விந்துநாதம்
தெளித்திட்ட மனோன்மணித்தாய் பூரணமேயாகும்
 சிவசிவா துரியவெளி அட்சரமுமாமே. (302)

அட்சரத்தை அறிந்தார்கள் சித்தரெல்லாம்
அறியாமல் உலகத்தோர் அலைந்துகெட்டார்
நிட்சயமா யிந்நூலை நிலைக்கச்சொன்னேன்
நிலைதருகும் பூரணத்தை நிலைத்துப்பாரு
அட்சரமாம் நிலைதங்கி அறிவிற்கூடி
அடங்கிநின்ற பொருளெல்லா மவுனமாச்சு
அட்சரமாம் சொல்வதற்கு ஆராலாகும்
அறிவுகுரு வல்லாது ஆசானுண்டோ
நிட்சயமாம் வாதிதன்னை மூலத்தூணில்
நிலைத்திட்டால் சுழிமுனைதான் நிசமாங்காணே. (303)

காணேநீ யிந்நூலை ஆர்க்குங்காட்டார்
காட்டினால் ரவிகோடி நரகமேது
வீணேநீ வாசிதனை அங்கென்றாணி
வேதாந்த சற்குருவை நித்தம்பூசி
ஊணேநீ மூலத்தில் நந்திநந்தி
உள்ளிருந்து உன்றனக்கு உபதேசிப்பார்
ஆனென்ற ஆணவமும் மாயைநீக்கி
ஆங்கார சஞ்சிதத்தை அடித்துத்தள்ளி
காணவே கருவிகர ணாதிகளைப்போக்கிக்
கண்ணாடிச் சுழிமுனையைக் கருதிப்பாரே. (304)

கருதியே துருசியுட குருவைக்கேளு
கைமுறையாய்ச் சொல்லுகிறேன் காட்டார்சித்தர்
கருதியே துருசியொரு பலந்தானப்பா
கட்டியாய் வாங்கிமேல் சகடுபோக்கத்
துரிசியாங் கட்டிமேல் சுண்ணாம்புச்சீலைச்
சுற்றியே கருவங்கங் குகையில்வைத்து
உருகையிலே நெய்க்குறட்டால் துரிசைவாங்கி
உறுதியாய் வங்கத்தி லமிழ்த்திவாங்கே. (305)

வாங்கவே இப்படித்தா னேழுதரம்தோய்த்து
வாங்கிடவே துரிசியது வெள்ளையாகும்
நான்காக வின்னுமதில் பாகங்கேளு
நாய்ப்பாகல் அயிவிரையின் தயிலம்வாங்கி
தூங்காமல் தூங்குவார் சொற்கேட்டுய்யும்
துரையேநீ தூங்காமல் சுகத்தைக்காண்பாய்
ஏங்கிடே துரிசியைநீ தோய்த்துக்தோய்த்து
ஏழுநாள் ரவியிலிடத் தீரும்பாரே. (306)

பாரேநீ முத்தற்றரந்தா நாதம்வாங்கிப்
பரங்கான விந்துவதில் சமனுய்வாரு
தேரேநீ சூடனொரு காசுபோடு
தெளிவாகும் வாங்கியதில் வீரம்பூரம்
ஆரேநீ கருநாவி யுரமுஞ்சூதம்
அறுமுள்ளி வண்டுமுட்டை கழுதைவண்டு
சேரேநீ குருவண்டு புழுகோடெட்டும்
சிறப்பான வகைவகைக்குப் பணந்தான் தூக்கி
வாரேநீ பொடியாக்கி அதிலேபோடு
மத்திக்கக் கைமேவரும் வகைதான்கேளு
வாரான இங்கோலால் அலரிக்கொம்பால்
மத்திக்கச் சலமாகித் தயிலமாமே. (307)

செலத்திலே முன்சொன்ன துரிசிதன்னைத்
தீர்க்கமா யுண்ணவுண்ணப் பிட்டுப்போடு
மலத்தியே ரவிதனிலே எழுநாள்போட
மல்லிகைப்பூப் போலமலர்ந்து சுன்னமாகும்
கலத்தியே கடுங்கார மெத்தக்கேளு
நவச்சாரம் விராகனென் னிடையதாகு
மூலத்தியே சவுக்காரச் சுன்னமொன்று
முங்நீரா லரை துரிசின் மேல்கவசம்போடே. (308)

போட்டுமே அஞ்சுசுன்னங் குகையில்வைத்துமூடிப்
புகழ்குகைமேல் சுண்ணாம்புச் சீலைசெய்து
ஆட்டுமே யத்தெருவில் புடத்தைப்போட
அம்மம்மா என்னசொல்வேன் துரிசிச்சுன்னம்
காட்டவென்று லாருந்தான் காட்டுவாரோ
கைமுறையாய்ச் சித்தர்கள்தான் சொல்லுவாரோ
நீட்டென்ன குருவறிய நிசமாய்ச்சொன்னேன்
நிலைத்ததொரு மனோன்மணியைப் பூசைபண்ணே. (309)

துரிசிதரு.

பண்ணியே துருசியுட குருவைத்தொட்டுப்
பாங்காகக் கோடியுகம் வாதம்பார்த்தேன்
எண்ணியே பார்த்திட்டுந் தொலையவில்லை
எடுத்ததொரு சரக்கெல்லாஞ் சுன்னமாகுந்
துன்னியே துரிசியுட சுன்னந்தன்னைத்
தொட்டிட்டால் சேரைரசம் வெண்ணெயாகும்
பண்ணியே நவலோக மெல்லாநீறும்
பாஷாண வர்க்கமெல்லா மெழுகாய்ப்போகுந்
தண்ணீராஞ் சார்வாகத் தழைகளெல்லாஞ்
சவலைபோ லுபரசங்க ளியமாமே. (310)

இய்யமாஞ் சூதமெல்லா மணியுமாகும்
　　என்மக்காள் குளிகைகட்டிச் சாரணையேசெய்யில்
பொய்யல்ல சடத்தோடே உயரத்தூக்கும்
　　போக்கோடே அகண்டவெளி கடந்துபோகும்
கைகண்ட நவலோக மெல்லாந்தங்கம்
　　கல்லோடு மண்முதலாய்த் தங்கமாமே. (311)

திசைமுகதுரு செந்தூரம்.

தங்கமென்ற திசைமுகமாங் குருசெந்தூரஞ்
　　சாற்றுகிறேன் நோயெல்லாந் தவிடுபொடியாகப்
பொங்கமாய் நவலோகந் தங்கமாகப்
　　புகலுகிறேன் காரீயம் பலந்தானொன்று
கங்கமாய் நீரின்மேல் நெருப்பின்சாற்றில்
　　காரீயந் தனையுருக்கிச் சாய்க்கக்கட்டும்
உங்கவே காரீயங் குகையிலிட்டு
　　உருசமப்போ கெவுரியொரு பலந்தான்போடு
கங்கமாஞ் செயநீரில் கட்டிப்போடு
　　கலந்துருக்கி ஒன்றாகக் கல்வத்தூட்டே. (312)

ஊட்டியே தாம்பிரந்தான் பலந்தானொன்று
　　உயர்சுத்தி செய்துகட்டுங் கெந்தகந்தானொன்று
தாட்டியே குமரியுட சாற்றாலாட்டித்
　　தாமிரத்தின் மேல்பூசிப் புடத்தைப்போட்டு
ஊட்டியே புடமதனை யறிந்துபாரு
　　உற்பனமாய் நொறுக்கியது பற்பமாகுந்
தீட்டியே கல்வத்தி லிட்டுக்கேளு
　　சிருகண்ணும் நாகமொரு பலந்தான்வாங்கு
மூட்டியே யிலுப்பைநெய்யில் சாரம்போடு
　　மூவாறு தாஞ்சாய்த்துக் கொண்டுநீயும்
ஆட்டியே செயநீரி லேழுதரஞ்சாய்க்க
　　அதிகமாம் நாகமது கட்டிப்போமே. (313)

கட்டியே நாகநின்று உருகும்போது
　　கரக்காதே சூதமொரு பலத்தையூட்டித்
தெட்டியே சேர்ந்தொன்றா யுருகும்போது
　　செயமான மால்தேவி பலந்தான்போடு
வெட்டியே வுருக்கிஒன்றாய்க் கல்வத்திட்டு
　　வெள்வங்கம் பலமொன்று குகையிலிட்டுருக்கி
அட்டியே ஆடாவின் தோடைச்சாற்றில்
　　அப்பனே யேழுதர முருக்கிச்சாயே. (314)

சாய்க்கவே வெள்வங்கம் நொறுங்கிப்போகும்
சார்வான குகையிலிட்டு உருகும்போது
வாய்க்கவே மனோசிலையும் பலந்தானென்று
வளமான செயநீரால் கட்டிப்போடு
சாய்க்கவே யுருக்கியொன்றாய்க் கல்வத்திட்டுத்
தங்கவொரு பலம்நின்று உருகும்போது
ஆய்க்கவே சாதிலிங்கம் பலந்தானென்று
அதிலிட்டு உருகும்போ துருதுந்தங்கம்
ஆக்கமா மிவையெல்லாங் கல்வத்திட்டு
அப்பனே நவநீதம் பலந்தானென்றே. (315)

பலமான பஞ்சமுகச் சரக்குரெட்டி
பாங்கான திசைமுகமாங் குருவுமாச்சு
பிலமான குருவோடே பன்னிரண்டாச்சு
பேசாதே பன்னிரண்டாங் தீட்சையாச்சு
மூலமாங் குருவென்ன சொல்லக்கேளு
முப்பூவின் குருவதிலே கழஞ்சிபோடு
பெலமாக விவையெல்லாஞ் சேர்த்துஒன்றாய்
போரான வெடியுப்பு நீராலாட்டே. (316)

ஆட்டியே நாற்சாமம் வில்லைதட்டி
அப்பனே காய்ந்தபின்பு அகலிலிட்டுத்
திட்டியே சீலைமூடி வில்லைசெய்து
சிறுபுடமாய்ப் போட்டெடுத்துக் கல்வத்திட்டு
நாட்டியே பொற்றலையின் சாற்றினாலே
நாற்சாமம் ஆட்டிமுன்போல் புடத்தைப்போடு
காட்டியே புள்ளடைச்சாறு நூல்தாமரைச்சாறு
கலந்தொன்றாய் ஆட்டிமுன்போல் புடத்தைப்போடு
நாட்டியே சாற்றில்லார் நாளதாக
நலமாக ஆட்டிமுன்போல புடத்தைப்போடே. (317)

புடம்போட்டு எடுத்ததனைக் கல்வத்திட்டுப்
புகழ்முருக்கம் பூவோடு செம்பரத்தம்பூவும்
குடம்போடு மாதளம்பூ கற்றாழம்பூவும்
குலாமல்லீச் சாறோடு ஊசிமல்லிச்சாறும்
கடம்போடு பன்னிரண்டு சாமந்தானும்
கைமுறையா யரைத்துமே தூளாய்ப்பண்ணி
அடம்போடு காசியென்ற மேருக்கேற்றி
அழகான வாலுகையில் வைத்திடாயே. (318)

T. 15743

வைத்துமே முத்தியும் பன்னிரண்டுசாமம்
வளமாக வெரித்திட்டு ஆறிப்பின்பு
ஐத்துமே குப்பியைநீ யிப்பால்வாங்கு
ஆத்தாட்கும் வடுகனுக்கும் பூசைபண்ணு
உய்த்துமே கந்தனொடு கணபதிக்கும் பூசை
உறுதியாய்ச் செய்துகுப்பி உடைத்துப்பாரு
பத்துமே செந்தூர மென்னசொல்வேன்
பரிதியென்ன கண்கூசிப் பார்க்கப்போமே. (319)

போமென்ற செந்தூரம் நவலோகத்தில்
போட்டிடவே பத்தரையே மாற்றுக்காணும்
நாமென்ற செந்தூர மனுபானத்தில்
நாற்பதுநாள் மண்டலமே கொள்ளும்போது
போமென்ற நாலாயி ரத்துநானூற்றெட்டுப்
பொல்லாத நோயெல்லாம் பொடியாய்ப்போகும்
கோமென்ற பதினெட்டுக் குஷ்டரோகம்
குன்மமொடு கிரந்தியரை யாப்பூச்சூலை
வாமென்ற பாண்டுகா மாலைசோகை
வலிகுன்மஞ் சத்திபித்த மாண்டுபோமே. (320)

மாண்டுபோஞ் சன்னிசுரங் கோசகாசம்
வாதபித்த கிலேற்பனத்தில் வந்தநோயெல்லாம்
மாண்டிடுமே கண்காணு தோடிப்போகு
மண்டலத்தில் காயசித்தி சுறுக்கோமெத்த
காண்டுபோங் கற்பமின்னும் வேறேயுண்டோ
கைப்புடனே புளிப்புந்தள் பத்தியமாயுண்டு
ஆண்டுபோர் செந்தூர வேகமெத்த
ஆருந்தான் சொல்லார்க ளறிந்துபாரே. (321)

தாமிர சுத்தி.

அறிந்துமே தாமிரத்தின் சுத்திகேளு
அரிதப்பா சொல்லுகிறேன் தகடுவாங்கிப்
பறிந்துபார் பழச்சாறும் புளியின்சாறும்
பசுவினுட கோமயத்திற் பத்துநாளூறிப்
பொறித்துதா னெடுத்ததனைப் புளியிட்டுத்தேய்த்துப்
புளிநறளைக் கிழங்குநாய்க் கொட்டான்பட்டை
செறிந்துதா னிடித்ததனைப் பொதிந்துசெம்பிற்
திறமாகப் புடம்போட்டு எடுத்துக்கொள்ளே. (322)

எடுத்துமே அக்த்தியுட பழுப்புச்சாறும்
இதமான முருக்கிலைச்சாறு நாய்ப்பாகற்சாறும்
கடுத்துமே கொள்ளிலைச்சாறு தேசிநீரும்
கலந்தோன்றாய் ஒருகலசந் தன்னில்வாரு
உடுத்துமே உவர்ப்பூவும் ஒருபலமேபோக்கு
உக்தகருங் குண்டுமணி அரைத்துநீயும்
கடுத்துமே தேசிக்கா யளவுபோடு
கலக்கியே தாமிரத்தை உருக்கிச்சாயே. (323

சாய்க்கவே வெவ்வேறே பத்துமுறைசாய் பால்
தாமிரந்தான் கடியசுத்தி தங்கம்போலாம்
ஆய்க்கவே வேதையிட்டா லூறல்காணு
அயச்செம்பு நாலில்வெள்ளி ஆறுசேர்க்க
மாய்க்கவே மாற்றென்ன ஆறுகாணும்
மயங்காது தாமிரத்திற் சுத்திநன்று
தோய்க்கவே தாமிரத்திற் செய்முறைகட்கெல்லாம்
சுத்திசெய்ய மெத்தநன்று சுறுக்கம்பாரே. (324)

சுறுக்கான சூதபற்பஞ் சொல்லக்கேளு
சூதமது ஒருபலந்தான் கல்வத்திட்டு
வறுக்காக அண்டிமாங் கொட்டையுடதயிலம்
வாங்கியே சூதத்தில் விட்டுஆட்ட
இறுக்காகச் சூதமது தவளைபோலாம்
எடுத்துமே கல்வத்தி லிட்டுக்கேளு
மறுக்காக விடந்தீரும் சாண்மூலிச்சாறு
மாதேவிக் கிழங்குச்சாறு வெள்ளெருக்கம்பாலே. (325)

பாலோடு வகைவகைக்குச் சாமமாட்டு
பாங்காக வில்லைதட்டிக் காயவைத்துக்
கோலியே யகலிலிட்டு மேல்கிலந்தான்மூடி
குக்குடமாய்ப் புடம்போடச் சூதம்நீறும்
ஆலவே தும்பைப்பூப் போலாம்பற்பம்
ஆத்தாளைப் பூசைபண்ணி யெடுத்துக்கொண்டு
பாலென்ற பணவிடைதான் நாலொன்றுக்குப்
பனைவெல்லந் தன்னோடே பத்தியமாய்க்கொள்ளே. (326)

சூதபஸ்பம்.

கொள்ளவே ரசபற்பம் வாய்வேகாது
குணமாகு நோயெல்லாங் கூறக்கேளு
கொள்ளவே கிரந்திகுஷ்டம் வாய்வுசூலை
கூறரிய அரையாப்புக் குன்மமெட்டு
மெள்ளவே நோயெல்லா மோடிப்போகும்
விருதுசொல்லி வயித்தியத்தை விரைந்துபாரு
உள்ளபடி சூதபற்பஞ் சொல்லிப்போட்டேன்
உத்தமனே தங்கமென்ற தாயைச்சேர்த்துக்
கள்ளமில்லை நவலோகம் பத்துக்கொன்று
காட்டிடவே மாற்றுறு கனகமாமே. (327)

பாஷாணக்கட்டு.

கனகமாம் வெள்ளிக்கு வெள்ளைப்பாஷா ண
கட்டுதற்குஞ் சூட்சமாங் கருதிக்கேளு
கனகமாம் பாஷாணக் கட்டுவாங்கிக்
கருதியே வெள்ளாவி வேகும்போது
மனகமாம் வெள்ளாவிச் சீலைநடுவைத்து
வாங்கிடவே எண்ணெய்க்குச் சுத்தியாகுஞ்
சுணங்கவே பிராயம்பட்டைத் தயிலம்வாங்கிச்
சுறுக்கிடவே கட்டியது சுத்தியாமே. (328)

சுத்தியாம் வெள்ளறுகு சவுக்காரம்வெல்லஞ்
சுகமாக ரேகித்து அரைத்துக்கொண்டு
புத்தியாம் பாஷாணக் கட்டிமேலே
பொதிந்துநீ தாமிரத்தின் குகையில்வைத்துச்
சித்தியா மேலுமந்தச் சில்லால்மூடி
சீலைசெய்து குக்குடமாம் புடத்திற்போட்டு
புத்தியாய் தேவிபதம் பணிந்துபோற்று
புகையாது பாஷாணங் கட்டிப்போமே. (329)

கட்டியே உருக்கியிது மணிபோலாடுங்
கசடற்ற செம்பிலே பார்த்துக்கொண்டு
முட்டிடவே வெள்ளியா மெழுகுசெய்ய
முறைகேளு முழப்பன்றி நெய்யைவாங்கித்
தட்டியே வெண்கருவுஞ் சதுரக்கள்ளிப்பாலும்
சாரிக்கச் சலமாகுந் தன்னைவாங்கி
கட்டியே முழப்பன்றி நெய்யோடொக்கக்
கலந்துமே பாஷாணங் கரண்டியிலேவைத்து
முட்டியே ஒருசாமஞ் சுருக்குப்போடு
மெழுகாகும் பூசைபண்ணி எடுத்துக்கொள்ளே. (330)

எடுத்துமே வேதையிட்டால் பன்னிரண்டுமாற்று
எட்டியே வெகுதூர மோடியப்பா
எடுத்துமே வாதமென்ன வயித்தியத்தைப்பாரு
என்மகனே மோட்சமதிக் கிடமாம்பாரு
அடுக்குமே கட்டியதோர் பாஷாணந்தன்னை
அனுபானஞ் சுரங்களுக்குக் கஷாயந்தன்னில்
கொடுத்திடவே சுரமென்ற தோஷமெட்டுங்
குடிபோகும் வாதசன்னி தொண்ணூற்றாறு
மடுத்துமே கிட்டாது ஓடிப்போகு
மறைகிறேன் பாஷாண மதிதங்காணே. (331)

சாதிலிங்கக் கட்டு.

கானென்ற சாதிலிங்கக் கட்டுக்கேளு
கருதியே நெடுங்கம்பி லிங்கம்வாங்கிப்
பானென்ற பலமொன்று அயக்கரண்டியிட்டுப்
பழச்சாறு முலைப்பாலுஞ் சுறுக்குத்தாக்கு
கோனென்ற ஒருசாமஞ் சுறுக்குத்தாக்கு
கொம்புத்தேன் ஒருசாமஞ் சுறுக்குத்தாக்கு
ஏனென்ற லிங்கமது சுத்தியாகு
மெடுத்துமறு அயக்காண்டி தன்னில்வையே. (332)

வைத்துமே ஐவிரலி பழுபாகற்சாறும்
வகைவகைக்கு ஒருசாமஞ் சுறுக்குப்போடு
ஐத்துமே அரப்பொடியைப் பழச்சாறுவிட்டு
அரைத்தந்த லிங்கத்தின் மேலேபூசி
உய்த்துமே பேய்க்குமட்டிக் காய்க்குள்வைத்து
ஒருபுடந்தான் போட்டெடுக்க முழுக்கட்டாச்சு
தைத்துமே சன்னிசுர தோஷமெல்லாம்
சண்ணுமே தொண்ணூற்றெ டாறுவாதஞ்
சித்துமே மெழுகுசெய்ய வேணுமென்றாற்
செவ்வகத்திற் பூப்பட்டை யிடித்துச்சாறு
பத்துமே பன்றியுட நெய்யுங்கூட்டிப்
பாங்காகச் சுருக்கிடவே மெழுகுமாமே. (333)

மெழுகெடுத்து நவலோகந் தன்னிலீய
மேதினியில் பத்தரையே மாற்றுக்காணும்
தழுகெடுத்த மெழுகிலொரு பணந்தானுண்ணில்
சன்னிசுரந் தொண்ணூற்று ஆறும்போகுந்
தெளிவாகு மரிதாரந் தன்னைவாங்கித்
தேசிநீர் சுண்ணாம்பி லேழுசுத்திசெய்து
எளிதான வோட்டிலிட்டு அடுப்பிலேற்றி
யிருசாமங் கரந்தைச்சாறு சுறுக்குத்தாக்கே. (334)

தாக்கிடவே அரிதாரங் கட்டிப்போகுஞ்
சன்னிசுர தோஷமொடு சயமீளநாசஞ்
சோக்கிடவே அரையாப்பு அழுகண்ணிகிரந்தி
சூலையொடு பதினெட்டுக் குஷ்டம்வாய்வுபோகுந்
தாக்கிடவே செந்தூரஞ் செய்யக்கேளு
சத்திநெடுஞ் சாரணைவேர் குக்குல்ரெண்டு
மாக்கிடவே முருக்கிலைச்சாறு வாய்நீராலு
மரைத்துமால் தேவிக்கு அங்குபூட்டிப்
போக்கான காவிமண் சீலையேழு
பொதிந்துமே குக்குடத்திற் போட்டுவாங்கே. (335)

போட்டெடுக்கச் செந்தூரம் அருணன்போலாம்
புகட்டிடவே நவலோகம் பத்துமாற்று
பாட்டெடுத்து நாளொன்றுக் கனுபானத்தில்
பணவிடைதான் மண்டலமே கொண்டாயானால்
காட்டெடுத்த நோயெல்லா மோடிப்போகுங்
காயசித்தாங் குருதொட்டுச் செய்துபாரு
ஆட்டெடுத்த காரீய பற்பங்கேளு
அறைகிறேன் காரீயந் தன்னைவாங்கே. (336)

வாங்கியே நல்லெண்ணெய் பலந்தானஞ்சில்
வகையாக மேழுதா முருக்கிச்சாய்க்கத்
தாங்கியே காரீயஞ் சுத்தியாகுந்
தகடாகக் கனதியிலே தட்டிக்கொண்டு
பாங்கியே பத்திராட்சி இலையரைத்துப்
பக்குவமாய்ப் பொதிந்துமேற் சீலைசெய்து
ஆங்கியே புடமிடவே வங்கம்நீறும்
அப்பனே மறுபடியும் எடுத்துக்கொண்டு
தாங்கியே சத்திச்சாரணையரைத்துச்
சார்வாக முன்போல பொதிந்திடாயே. (337)

காரீயபஸ்பம்.

பொதிந்துமே புடமூன்றிற் காரீயபற்பம்
புதுமையென்ன தும்பைப்பூ நீரொவ்வாது
அதிந்துமே பஸ்பத்தை அனுபானத்தில்
அறிந்துண்ண வாதசன்னி க்ஷயமீளகாசங்
கதிந்ததொரு தேகத்திற் கடுப்புக்குத்தல்
கடிதான நோயெல்லாங் காணாதோடுஞ்
செதிந்தெழுந்த பற்பத்திற் பரிசுதஞ்சேர்த்து
செயநீரா லாட்டியே புடத்தைப்போடு
கதிந்தெழுந்த குருவாகும் வேதையாகுங்
காயசித்தாங் காரீய பற்பந்தானே. (338)

பற்பத்தில் வெகுகடினந் தாம்ரபற்பம்
பண்ணினல் சிவயோகஞ் சித்தியாகும்
அற்பமென்று எண்ணதே தாம்ரந்தன்னில்
அஞ்சுமுத்தரைத் தகடல்லால் சல்லிவாங்கிக்
கொற்பான கருங்குன்றி மணியரைத்துக்
கொள்ளியின் சாற்றிலே கலக்கிக்கொண்டு
கற்பமா மருள்சாறுந் தேசிநீருங்
கலந்ததிலே தாமிரத்தைக் காய்ச்சித்தோயே. (339)

தோய்க்கவே எழுதரஞ் சுத்தியாகுஞ்
சொல்லரிய ஆதாளி கொண்டுவந்து
போற்றியே அரைத்ததனைத் தாமிரத்திற்பொதிந்து
புகழாக ரவியுலர்ந்து சுண்ணம்புச்சீலை
தோற்றியே பெரியதொரு புடத்தைப்போடு
சொல்லரிய தாமிரந்தான் வெண்மைமெத்த
நாற்றியே வெள்ளைநீர் முள்ளிலாங்கி
நலமான வெள்ளெருக்கின் பாலாலாட்டே. (340)

ஆட்டியே தகட்டின்மே லரைத்துப்பூசி
அப்பனே உலர்ந்ததின்மேற் சுண்ணம்புச்சீலை
ஆட்டியே செய்துமுன்போற் புடத்தைப்போடு
ஆத்தாட்கும் வடுகனுக்கும் பூசைபண்ணு
தாட்டிகந்தா மிரபற்ப மென்னசொல்வேன்
சங்குபோல் நீறியது தவளமாகுந்
தேட்டென்ன சித்தர்கள்தான் சொல்லுவாரோ
செகத்திலெந்தன்சீஷருக்காய்ச் செப்பினேன்யான்
காட்டாதே ஒருவருக்குங் கைமுறையீதப்பா
காட்டினல் கடைநரகில் மாளுவாயே. (341)

மாளாதே யென்மகனே சொல்லக்கேளு
மகத்தான பற்பத்தைப் பதனம்பண்ணு
கோளான சூதமொரு கழஞ்சுக்கப்பா
குறிப்பான பற்பமொரு கழஞ்சுபோட்டு
தேளான வெண்கருவும் வர்க்கப்பாலுஞ்
சேர்ந்தாடச் சூதமது விரைந்துபோகும்
வேளேநீ வில்லைதட்டி அகலிலிட்டு
மேல்மூடிச் சீலைசெய்து குக்குடத்திற்போடு
கேளான சூதமொடு தாயிரபற்பங்
கொடிதான சுன்னமாங் குருவுமாச்சே. (342)

குருவெடுத்து நவலோகந் தன்னிலீயக்
குறையாது பத்தரையே மாற்றுக்காணும்
பருவான சரக்கெல்லாஞ் சுன்னமாமுன்
பற்பத்திற் பணவிடைதான் அனுபானத்துண்ணிச்
செரிவான மண்டலந்தான் கொண்டாயானல்
தீராத குன்மமொடு வாயுசூலை
அருவருந்த கிரந்தியரை யாப்புக்குஷ்டம்
ஆகாத க்ஷயரோகம் அந்திரவாய்வு
திருக்கெடுத்த பலபிணியுந் தீர்ந்துபோகுந்
தீர்க்கமாங் காயமது சித்தியாமே. (343)

சித்தியாம் நாகத்திற் செந்தூரபற்பஞ்
செப்புகிறேன் மாணுக்கா தெளிந்துகேளு
பத்தியே சிறுகண்ணு கம்பலந்தான்பத்துப்
பாங்கான இலுப்பைநெய்யிற் சாரம்போட்டு
முத்தியாம் மூவாறு தரந்தான்சாய்க்க
முனையான நாகமது சுத்தியாகும்
சித்தியாம் ஆடாதோடை மூலிச்சாறுஞ்
செயநீருஞ் சேர்த்ததிலே யேழுதரம்சாயே. (344)

சாய்க்கவே நாகமது கட்டிப்போகுங்
கருவான நாகவல்லி யிலையினேடு
ஆய்க்கவே நீருமேல் நெருப்புங்கூட்டி
அரைத்துமே கவசமாய்ச் செய்துலர்த்தி
ஆய்த்துமே பெரியதொரு புடத்திற்போட
அப்பனே நாகமது நீறிப்போகுங்
காய்க்கவே சரடுகட்டி நின்றதானல்
கர்ப்பூர வெற்றிலைச்சாறு விடந்தீஞ்சான்சாறும்
ஆய்க்கவே கல்வத்தி லரைத்துநன்றாய்
அப்பனே வில்லைதட்டிப் புடத்தைப்போடே. (345)

புடம்போட நாகபற்பம் என்னசொல்வேன்
பொற்கொடியைப் பூசைபண்ணி எடுத்துக்கொண்டு
குடம்போடு அனுபான மறிந்துகொள்ளக்
குன்மமொடு க்ஷயரோகங் காசிசூலை
துடம்போடு பாண்டுகா மாலைசோகை
சொல்லரிய மேகமொடு சுவாசகாசம்
வடம்போடு க்ஷயமீளை மந்தாரகாசம்
வாட்சியொடு குத்திருமல் புகைச்சல்மேகந்
திடம்போடு உள்மூலம் பிறமூலஞ்சூலை
தீராத க்ஷயரோகந் தீருமென்னே. (346)

என்னவே குடல்வாதங் குடற்புரட்டு
ஈளைபித்தந் தாழாத இருமல்வாய்வு
நன்னயமாய்ச் சொன்னதொரு வியாதியெல்லாம்
நாடாது நாகபற்பங் கொண்டபோது
சொன்னதொரு கட்டியதோர் நாகந்தன்னிற்
சூதமிட்டுத் தங்கமிட்டுக் கெந்தியிட்டுக்
கண்ணுன குலாமல்லிச் சாற்ருலாட்டிக்
காசியென்ற வாலுக்கையின் மேருக்கேற்றே. (347)

ஏற்றியே பன்னிரண்டு சாமந்தீட்டி
எடுத்துமே ஆத்தாளைப் பூசைபண்ணப்
பார்த்துமே நவலோகம் பத்துக்கொன்று
பரிசிக்கப் பதினுறு மாற்றுக்காணும்
ஆத்துமே அனுபானத் தோடேகண்டால்
ஆகாத நோயெல்லா மகன்றுபோகும்
காத்துமே மண்டலந்தான் கொண்டாயானுல்
காயத்துக் கழிவேது கற்பாந்தரமாமே. (348)

கற்பமென்ன விதுவெல்லாம் கற்பமல்ல
காயசித்திக் கேற்றபற்பங் காட்டார்சித்தர்
சொற்பனமாய்ச் செய்யவென்று சொல்லொண்ணுது
சொன்னுலுங் கருமறைத்துச் சொல்லப்போகா
அற்பமென்று கைப்பொருளைச் செலவுசெய்து
அலைந்துகெட்டுப் போவார்க ளதினுலப்பா
தப்பில்லாச் சீஷரென்று பிள்ளைகளுக்காகச்
சாகாத கற்பத்தைச் சாற்றுவேனே. (349)

சாற்றரிய ஸ்திரீசாதி வர்க்கம்நாலு
தனையறிந்து முதற்றரமாம் நாதம்வாங்கிச்
சேத்துமே கற்பூரம் பொடித்துப்போட்டுச்
செலமாகுந் தெளிவதிலே சமனுய்விந்து
சேத்துமே நாளொன்று கழஞ்சுவீதஞ்
செப்பற்பங் குருபற்பஞ் சேர்த்துக்கொள்ளு
சாத்தரிய மண்டலத்தில் தேகம்பொன்னுஞ்
சத்தியமாய்ச் சொல்லிவிட்டேன் சாவில்லைதானே. (350)

இல்லையே எமனென்ற பேரும்போச்சு
இதற்குப்பேர் பரன்என்றும் வஸ்துவென்று
மல்லவே செயநீருஞ் சுரபானமென்று
மப்பனே மத்தியா பானமென்றுஞ்
சொல்லவே ஆயிரத்தெண் மலருக்குள்ளே
சிறந்திருந்த பூவென்று மதியமிர்தமென்றுஞ்
சொல்லாதே சாகாது வேகாதென்றுஞ்
சித்தர்கள்தான் பூசிக்கும் வாமமென்றும்
வல்லவே யிதைவிட்டு வெறியேகொண்டு
வகையறியா மாண்டார்களநேகர்தானே. (351)

மாளாமற் சொன்னதொரு கற்பங்கேளு
மறைத்துவைத்த வழலையுட கருவைக்கேளு
மாளாத மதியமிர்தம் பூரணந்தானப்பா
மயங்காதே கண்டத்தில் வழலைதன்னை
மாளாதே பீங்கானில் வேறேவாங்கி
வளமான கற்பூரம் பொடித்துப்போட்டு
மாளாமல் பொருமியது வள்ளையுப்பாம்
மைந்தனே கல்வத்தி லிட்டுக்கேளு
மாளாதே கல்லுப்பு பருத்தியுப்பு
வகைசமனுய்க் கொண்டுசெப்பி நீராலாட்டி
மாளாதே வில்லைதட்டி ரவியிற்காய்ந்து
வளமான அஞ்சுசுன்னக் குகையிற்கேளே. (352)

குகைதனிலே வீரமொடு புழுகுபூரங்
குருவண்டு கருநாவி உரமுஞ்சூதம்
வகையாகச் சிப்பிநீர் தன்னுலாட்டி
வழலையென்ற வில்லையின்மே லங்கிபூட்டி
அகையாத அஞ்சுசுன்னங் குகைக்குட்பூசி
அதற்குள்ளே வள்ளையென்ற வில்லைவைத்துத்
தொகையாக மேற்சுன்ன மிட்டுமூடிச்
சுத்தியே நாடையொரு புடத்தைப்போடு
முகையாக முப்பூவின் வள்ளையாச்சு
முறையோடே இப்படிநீ ஐந்துதாம்போடே. (353)

போடவே வழலையென்ற சுன்னமாச்சு
புத்திகெட்ட வாதிகளே சித்தர்சொல்லார்
ஆடவே நாதாக்கள் ஆட்டெல்லாந்தான்
அம்மம்மா வழலைவிட்டால் வேறேயுண்டோ
போடென்ற அடிமுடியுங் காரசாரம்
போரான அண்டபிண்டம் பிரமகற்பம்
வாடென்ற எரியென்றும் பாறையென்று
மதயானைக் கல்லென்றும் வீரமென்றும்
ஆடவே சொன்னதெல்லாம் விந்துநாத
மதையல்லால் வேறொன்று மறியேன்பாரே. (354)

பாரென்ற நாதத்தில் விந்துபுக்கிப்
பாங்கான பிருதிவியு மப்பும்வாய்வும்
ஆரென்ற ஐவருந்தான் சேர்ந்ததாலே
அருவுருவாய் ஐங்கோலப் பிண்டமாச்சு
சாரென்ற வழலையென்று முப்பூவென்றுஞ்
சவுக்கார குருவென்று மிதற்கேபேராம்
பாரென்ற கோசபீச மிதற்கேபேராம்
பஞ்சபூதச் சரக்கென்று மிதற்கேபேராம்
பாரென்று இதைமறைத்துச் சித்தரெல்லாம்
பலபலவாய் நூல்தோறும் பாடினாரே. (355)

பாடினா ரென்னூலில் வெளியாய்ச்சொன்னேன்
பதினெட்டுப் பேருமென்னைப் பகைத்திட்டார்கள்
வீடியே சொன்னதொரு வழலைப்போக்கு
வெவ்வேறே யென்றுசொல்லி மலைக்கவேண்டாம்
பாடியதோர் நாதவிந்தில் வழலையாகும்
பரிவான பிண்டத்தால் வழலையாகும்
ஆடியதோ ரடிமுடியும் வழலையாகு
மத்தியொடு மாமிசமும் வழலையாகும்
ஆடியே வழலைதொட்டு வாதம்பாரு
அலையாதே கற்பத்தை உண்டுதேறே. 356)

தேறவே ரசவாதஞ் சிவசொத்தப்பா
செப்பாதே பொருள்தனையே இச்சிக்காதே
ஆறவே செய்தாலும் பரத்துக்கிந்து
அறிவுகுரு போதத்தி லடங்கிநில்லு

பாருநீ பாடரப்பாய்த் திரிந்தாயானல்
பலியாது அவன்தனக்கு வாதமேது
கூறுார்கள் வாதமொடு ஞானம்ரெண்டுங்
குருபதத்தைப் போற்றிசெய்யி லறிவிற்கூடும்
வீறுக என்நூலில் வெளியாய்ச்சொன்னேன்
விண்டிட்டால் விண்ணிவிடி விளங்கும்பாரே. (357)

வெள்ளெருக்குமூலி.

வீறாம லறிவுக்கு ளறிவையுன்னி
வேதாந்த வாலையைத்தா னித்தம்பூசி
மாளாதே யோகசித்தி அஷ்டமாசித்தி
வசமாக வெள்ளெருக்கு தன்னைப்பார்த்து
மாளாதே அதனுடைய மூலிவாங்கி
மயங்காதே வகையென்ன கதிர்நாள்பூசம்
ஆளாதே மூலியென்ற வேராமல்
அடிமூலங் கண்டளவு வெட்டிச்சோதி
கேளேநீ யாணிவேர் நுனியிலப்பா
கிழங்கதுவும் லிங்கம்போ லிருக்கும்பாரே. (358)

இருக்குமதை வெண்சாவல் பொலியும்பொங்க
விட்டுமே தூபதீப நெய்வேத்தியத்தோடு
கருக்குமே கன்னிநூல் காப்புக்கட்டிக்
கருதியே கிழங்குதனை வேறேவாங்கி
விருக்குமே விநாயகன்போல் பண்ணிக்கொண்டு
மீதுள்ள வேரையெல்லாம் வெவ்வேறேகுளிசம்
முருக்கவே செய்துநீ தம்பனமும்வசிய
மோகனவுச் சாடனமு முறையாய்ச்செய்யே. (359)

செய்துமே வெவ்வேறே வைத்துக்கொண்டால்
செகமோகத் தம்பனமும் வசியஞ்சித்தி
செய்துமே எட்டெட்டுஞ் சித்தியாகும்
திறமான அடிமூல விநாயகனைக்கேளு
கொய்துமே குறைபடாத் தலைமண்டையோடு
கொண்டுவந்து குழிவெட்டித் தாபித்துக்கொண்டு
உய்துமே அதின்மேலே மண் திண்ணைபோட்டு
ஓங்கார மிட்டதின்மே லிருந்துகொண்டு
அய்துமே மாசான மாகாளிகோஷ்டம்
அல்லாட்டா லில்லமே மயானமென்று
மெய்துமே பரித்தகட்டில் நவகோணமிட்டு
விநாயகனை வைத்ததன்மேல் ஸ்ரீங்கென்றோதே. (360)

ஓதவே ஓம்றீம்அங்உங்மங் ஓம்சிவகண தேவாய நமாவென்று
ஓதிடவே லெட்சமுரு மண்டலந்தானப்பா
ஓதுவது மவுனத்துள் ளெழுத்தைப்பற்றி
உத்தமனே வாசிதனை அடக்கியுள்ளே
ஓதவே சரியையொடு கிரியைமார்க்கம்
உத்தமனே யோகசித்தி ஞானசித்தி
தீதறவே யெட்டெட்டுஞ் சித்தியாகுஞ்
சிவயோகங் கைக்குள்ளே சிக்கிப்போச்சே. (361)

போச்சென்ற சித்தரெல்லாம் மெச்சிக்கொண்டு
புகழ்ந்துனக்குச் சகலசித்துங் கையிலீவார்
ஆச்சென்ற சித்துக்குச் சித்தனாவாய்
அரிதான வெள்ளெருக்குச் சிவமூலியப்பா
தேச்சென்ற திம்முறைதா னுருஞ்சொல்லார்
சித்தர்கள்தான் செய்யுகிற முறையீதப்பா
நாச்சென்ற வெள்ளெருக்கின் தயிலந்தன்னில்
ரசம்நீறும் நவச்சாரங் கட்டிப்போமே. (362)

போமென்ற நவச்சாரந் தன்னைவாங்கிப்
புகழான தயிலத்தில் பூசிப்பூசி
தேமென்ற எழுநாள் ரவியிலிட்டுச்
சிறுபுடமாய்ப் போட்டெடுக்கச் சாரங்கட்டும்
ஆமென்ற காரத்தால் செயநீராகும்
அறுபத்தி னுல்சரக்குங் கட்டலாகும்
ஆமென்ற சூதத்தைக் கல்வத்திட்டு
அரைத்திந்தத் தயிலத்தால் வில்லைதட்டிப்
போமென்ற ஓட்டிலிட்டு மேலோடுமூடிப்
புடம்போடச் சூதமது நீறிப்போமே. (363)

நீறியதோர் தயிலத்தில் சொல்லக்கேளு
நிசமான புழுகுகோ ரோசனையுங்கூட்டிக்
காருநீ காராவின் பாலாலாட்டிக்
கருமென்ற சுக்கிலமுங் கருதிக்கொஞ்சம்
சேரேநீ தயிலத்தி லொக்கச்சேர்த்துத்
திலதமிடச் செகமெங்கும் வசியமாகும்
பாரேநீ யென்னூலை மனதில்வைத்தால்
பாரெல்லா முன்வார்த்தை பலிதமாமே. (364)

தேசிவித்தை.

ஆமென்ற தேசியிலே அநேகவித்தை
ஆருந்தான் சொல்லார்கள் அப்பாகேளு
காமென்ற தேசியென்ன கடைப்பிறப்புக்
கருவறியா மாண்பரென்ன கழுதையென்பார்
காமென்ற வெழுபிறப்புங் கடந்துபோச்சு
காசினியில் மறுபிறவி யில்லையில்லை
தேமென்ற தேசியென்றால் சிவத்துக்கொக்குந்
தேசிகனும் என்றுசித்தர் செப்பினாரே. (365)

செப்பினர் தேசியுட வித்தைகேளு
திறமான பாஷாண மறுபத்தினாலுஞ்
செப்பினர் சுத்திசெய்யத் தேசிநீராம்
சிறப்பான அந்நீரில் பூநீரிட்டு
நப்பியே கலக்கியந்தத் தெளிவைவாங்கி
நலமாகச் சொல்லியதோர் சரக்கெல்லாந்தான்
செப்பியே கடுஞ்சுத்தி யாகும்பாரு
செப்பரிய இதைவிட்டால் செயமாகாதே. (366)

செயமாகத் தேசியுட குழம்புதன்னைச்
சிறப்பான பூப்புடத்தில் தயிலம்வாங்கிக்
கயமாகுங் காரீய முருக்கிச்சாய்க்கக்
கட்டியது குருவாகும் வேதைகோடி
தயதான தேசியுட மண்டைதன்னைத்
தயிலமா யிறக்கியதில் சாரம்போட்டுக்
கயமான நாகத்தை உருக்கிச்சாய்க்கக்
கட்டிப்போந் தயிலத்தில் லிங்கமெழுகாமே. (367)

மெழுகாகும் அதின்பித்து ஆருங்காணார்
மெய்கட்டா வித்துவே ஷணத்தைஓதில்
தெளிவாகுங் கருங்கழுதைப் பித்துவாங்கிச்
சிறந்தபுல்லா மணக்கும்பேய்ப் பீர்க்கம்வித்தும்
குழிவான கருவேம்புத் தயிலம்வாங்கிக்
குளியானை யோடுந்தன் சுக்கிலமுங்கூட்டித்
தெளிவான பித்துடனே சேர்த்துமத்தி
திலதமிடச் சிவனுலுங் காணார்கேளே. (368)

கேளப்பா அதினுடைய கண்ணைவாங்கிக்
கெடியாக உலர்த்தியே பொடியாய்ச்செய்து
வாளப்பா பெண்ணுடைய விலக்கச்சீலை
வாங்கியந்தப் பொடியூட்டித் திரியாப்பண்ணி
ஆளுமே காரெள்ளுத் தயிலந்தன்னில்
ஆனைக்கண் சட்டியிலே மையெரித்துவாங்கிக்
காளுமே குறைபடா பூனைக்கண்ணன்
கையிலிடப் பாதாள முருகியோடும் (369)

ஓடுமே கவலையெல்லா முரைக்கக்கேளு
உன்னைப்போ லதிர்ஷ்டவா னுலகிலுண்டோ
காடுமே யலையாம லென்னூல்தன்னைக்
கருத்திலே நீயிருத்து யோகியாவாய்
ஓடுமே காசிமுதல் கன்னியா வரையப்பா
உத்தமனே புதையலெய்தத் தயிலம்வாங்கி
ஓடேநீ சிவந்தகருஞ் சீலையிலேஊட்டி
உலர்த்தியே திரியாகத் திரித்துக்கொள்ளே. (370)

திரித்துமே தேசியுட கொழுப்பைவாங்கித்
திறமாக நெய்யுருக்கித் தீபமேற்ற
மரித்துமே அய்யனொடு பிடாரிதுர்க்கை
மகாபூத வேதாள மருண்டேயோடு
மிருந்துமே பிரமரா க்ஷதைபூதம்பில்லி
வெம்பிசாசு தொட்டுமா னிடரைக்கொண்டால்
நெரித்துமே தீபமுகம் பார்க்கச்சொல்லி
நெற்றிதனில் சிங்கென்ற அக்ஷரத்தைஓட்டே. (371)

ஓட்டவே பூதப்பிரேதவேதாளம்
ஓடுமே நவக்கிரக தோஷமெல்லாம்
மாட்டில்லா நோயோடு பேய்பிசாசு
மாரணமே செய்யவென்றால் அயத்தகட்டில்
தேட்டியே தேசியுட ரத்தம்வாங்கித்
திரண்டிருக்கும் பிறகாலின் சப்பையுங்கூட்டி
ஆட்டியே ஐங்காயந் தன்னைத்தொட்டு
அரைத்துமே பூசஉச்சா டனமுமாமே. (372)

ஆமென்ற ஐங்காயக் கருவைக்காணார்
அறியார்கள் கடைதனிலே ஐங்காயமென்பார்
தாமென்ற ஐங்காயப் பேருகேளு
தலைப்பிள்ளை நஞ்சோடு சமூலம்வாங்கி
ஆமென்ற வசம்புள்ளி கடுகுகாயம்
அப்பனே அரைத்ததின் மேலேபூசிப்
போமென்ற மேல்பூச்சு உலரச்செய்து
பொடியாக்கிப் பேய்ச்சுரையின் குடுக்கைதனிலடையே. ()

அடைத்திட்ட மில்லாட்டால் தயிலம்வாங்கு
அதுக்கிதுதான் நேர்த்திமெத்த அப்பாகேளு
அடைத்திட்ட முற்கருவும் பிற்கருவும்பாரு
ஆகாச வெளிக்குள்ளே அமர்ந்ததப்பா
கடைத்திட்ட ரெண்டுமொன்றாய் ரேசித்தேதான்
கருவாகி உருவாகிக் கடுஞ்சூலாகிப்
பிடைத்திட்ட பிண்டமப்பா ஐங்காயந்தான்
பேசாதே வெளிதிறந்து சொல்லார்சித்தர்
நடத்திட்ட கருவாலே வாதமாச்சு
நவகோடி சித்துமிதி லாடலாச்சே. (374)

ஆச்சென்று வாய்ப்பேச்சுச் சொன்னதினாலென்ன
ஆராய்ந்து ஒவ்வொன்று யறியவேணும்
நீச்சென்ற நீச்சறிந்து நிலைக்கவேணும்
நிலைபாட்டால் வெறும்பேச்சு நிலையாகாது
தாச்சென்ற சரக்குவகை இனமறியவேணும்
சத்துருவு மித்துருவு மறியவேணுங்
கூச்சென்ற வாதத்தில் கோசபீசங்
குறிப்பறியா மட்டைகள்தான் குருடரப்பா
கூச்சென்ற குருமுறையுஞ் செந்தூரத்தினமும்
குப்பிமுறை புடத்திட்டம் எரிப்புத்திட்டங்
காச்சென்ற குகைத்திட்டம் ஊதுமுறைவரிசை
கைமுறையாய் அஞ்சுநீர்க் கருவுங்கேளே. (375)

கருவென்ன கட்டுமித்திரம் உருக்கினத்துக்கெல்லாம்
கருதியே பழச்சாறு முகைப்பால்வாய்நீ
குருவான சுன்னமொடு நீற்றினத்துக்காதி
கொடுஞ்சுறுக்கு வெண்கருவுஞ் சுண்ணம்புநீறும்

திருவென்ன விட்டரைக்கிற் செயமாமெத்தச்
செந்தூரந் தினமகேளு சூதங்கெந்தி
அருவென்ன மால்தேவி அப்பிரகந்துத்தம்
அழகான சிலேயோடு வெதுப்பேழும்
அருவென்ன விலையேழுஞ் செந்தூரத்தாகி
அல்லாட்டால் செந்தூர மாகாதென்னே. (376)

ஆகவே செந்தூரம் வைப்புக்கெல்லாம்
அப்பனே குப்பியுட மூலறனையக்கேளு
போகவே பூசிற குப்பிவாங்கிப்
புகழான கழுத்துவரை சீலேசெய்து
ஈகவே குடத்துக்கு மேல்கழுத்தி
லிருவிரற் கடையளவு செய்துநீயும்
நேகவே சீலேசெய்த மட்டும்போது
நீண்டிருக்கும் குப்பிவா யுடையக்கேளு
தோகையே தீபநுனி சுற்றிக்கட்டிச்
சுண்டிடவே கத்திரிப்பாய்த் துண்டித்துப்போமே (377)

போமென்ற குப்பிக்கு அரைவாசிமருந்து
போட்டுநீ புதுச்சட்டி தன்னிற்சேரு
தாமென்ற மணல்நோம்பி அடிநுனியும்தள்ளிச்
சட்டியில்நால் விரற்கடைதான் மணலேயிட்டு
ஆமென்ற குப்பியதின் மேலேவைத்து
அதின்மேலே வணல்கொட்டி அமிழ்த்திநன்றாய்
ஏமென்ற குப்பியுட கழுத்துமேலே
யிருவிரற் கடைதெரிய விட்டுமூடிக்
கோமென்ற தளச்செந்தூ ரந்தானானால்
குப்பிவாய் மூடாதே சிலாகையிட்டுப்பாரு
வாமென்ற எறுசெந் தூரமானால்
வளப்பக்கல் கொண்டுகுப்பி வாயைமூட. (378)

மூடியே வாலுகையின் மேலேயேற்றி
முசியாதே ஒருவிரற்குத் தீபமாகும்
நாடியே யிருவிரற்குக் கமலமாகும்
நால்விரற்குச் சடாக்கினி யாகும்பாரு
சாடியே விறகினுட திட்டங்கேளு
சாணளவு ரெண்டுவிரற் கனதியாகும்
காடியே புடத்திட்ட மென்னகேளு
காட்டெருவாம் புடமொன்று காடையாகும்

பாடியே மூன்றெருத்தான் கவுதாரிப்புடமாம்
பதிதெருத்தான் குக்குடமாம் பரிந்துகேளு
நாடியே ஐம்பதெரு வனமாகும்
நலமான நூறெருத்தான் கெஜப்புடமுமாமே. (379)

புடமான குகைத்திட்டஞ் சொல்லக்கேளு
புகழான கழுதைலத்தி மலமும்ரெண்டு
வடமான உமிக்கருதல் சீலைகட்டசாம்பல்
வகைக்கிரண்டு பலமாகுங் களிமண்ணேமாறு
குடமான கடுக்காயின் கஷாயம்விட்டுக்
குமறவே ஆட்டிமைபோற் குகைதான்பண்ணு
படவான மேற்சில்லு மதிலேபண்ணு
பற்றகுகை உருக்கினத்தில் பிளவாகாதே. (380)

பிலமாகுஞ் சுன்னமென்ற துறைசட்கெல்லாம்
பேசுகிறேன் அஞ்சுன்னக் குகையைக்கேளு
அலமான கண்டுதத்தை சங்குசிப்பி
அண்டோடு மிவைஐந்துங் கல்வத்திட்டு
விலமான வர்க்கம்பால் தன்னலாட்டி
விலைதட்டிக் காயவைத்துப் புடத்தைப்போடு
நலமான சுண்ணும்பாங் கல்வத்திட்டு
நாடியரை வெண்கருவும் வர்க்கம்பாலும்
நலமான கல்சுன்ன நீரும்விட்டு
நலக்கரைத்துக் குகையின்மேல் சில்லுச்செய்து
பிலமான இதில்வைத்துப் புடத்தைப்போடப்
பிலத்துமே கடுஞ்சுன்ன மாகும்பாரே. (381)

பாருநீ ஊதுமுறை சொல்லக்கேளு
பாங்கான சரக்குவகைச் சேர்த்துருத்தி
ஊருமே யுருக்கினந்தான் துருத்திரெண்டு
உத்தமனே சத்துவகை துருத்திநாலு
சாருநீ ஐப்பசியுங் கார்த்திகைமார்கழியுந்
தையோடு உருக்கினத்தில் சத்திறங்குங்காலம்
பாருநீ மாசியொடு பங்குனிசித்திரையும்
பாங்கான வைகாசி குருமுடிக்குங்காலம்
சேருநீ ஆனியொடு ஆடிஆவணியும்
சிறப்பான புரட்டாசி செந்தூரமாமே. (382)

மாமென்ற மார்கழிதை யோடுமாசி
மருவற்ற செயநீரா மகிழ்ந்துபாரு
போமென்ற உருக்கினத்தின் குடோரிசேரு
புகழான மால்தேவி சவுக்காரங்குக்கில்
வேமென்ற அண்டோடு வெண்காரங்கூட்டி
வெடியுப்பு செயநீரா லாட்டிவில்லை
காமென்று புடம்போட்டு எடுத்துக்கொண்டு
கல்வத்தி விட்டுப்பின் வர்க்கம்பாலும்
ஆமென்ற எலிஆலம் பாலுங்கூட்டி
அரைத்துமுன்போல் புடம்போட்டு எடுத்துக்கொண்டு
வேமென்ற ஏரண்டெண்ணெய் வரத்தவளை நெய்யும்
விட்டரைத்துக் கெட்டியாய் வைத்துக்கொள்ளே. (383)

வைத்துமே சத்துவகை கரடுதட்டி
மைந்தனே குடோரியிட்டு எருமைக்கொம்பால்
உய்த்துமே கிண்டுநீ கல்மசங்களற்று
உருகியே வெள்ளிபொன்போல் கணவிட்டாடும்
கைத்துமே கருவெல்லாம் வெளியாய்ச்சொன்னேன்
கருவாளி யானுக்கால் கண்டுபாரு
செய்த்துமே சித்தருட நூலையெல்லாம்
திரட்டியே ஆயிரத்தில் தெளிவாய்ச்சொன்னேன்
பற்றுமே ஆயிரத்தைக் குறுக்கிநன்றாய்
பாடினேன் முந்நூற்றுச் சில்லரைதானப்பா
உத்துமே கருவெல்லாம் வெட்டவெளியாக
ஒளியாமல் சத்தியமாய்ச் சொல்லிப்போட்டேன்
கைத்துமே சிறுபிள்ளை முதலாயுள்ள
கருவறியா மூடர்களுங் காணுவாரே. (384)

வாரான கருவையெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்
வாதமொடு வயித்தியமும் வகையாய்ச்சொன்னேன்
கூரான செந்தூரங் கழங்குசெய்நீருங்
குருமுடிக்கும் வகையெல்லாங் குறிப்பாய்ச்சொன்னேன்
வாரான அஞ்சனமும் திலதஞ்சொன்னேன்
வசியமொடு அப்புவித்தை மாரணமுஞ்சொன்னேன்
ஆறான ஞானமொடு வாசியோகம்
அடங்கின்ற பூரணமும் அறியச்சொன்னேன்
தேறவே வழலையுட கருவுஞ்சொன்னேன்
செப்பினேன் கருக்கடைச்சூத் திரந்தான்முற்றே. (385)

பிரமமுனி கருக்கடைச் சூத்திரம் - நூறுயல்

முற்றிற்று.